கிராமக் கணக்குகள் நடைமுறை நூல்

(1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய வெளியிடப்பட்ட திருத்தங்களுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.)

தமிழ்நாடு அரசின் ஆணையின்பேரில் வெளியிடப்பட்டது.
1982

அரசினர் அச்சகம்,
சென்னை-600001.

விலை ரூ. 32-16

கிராமக் கணக்குகள் நடைமுறை நூல்

வ.எண்	பொருள்	பக்கம் எண்
1.	கிராமக் கணக்குகள் நடைமுறை நூல் - பொருளடக்கம்	I - IV
2	பாகம் - I	1 -36
3	பாகம் - II	37 - 59
4	பாகம் - III	60 -100
5	பாகம் - IV	101 - 140
6	பாகம் - V	141 - 180
7	பாகம் - VI	181 - 212
8	பிழை திருத்தம்	i - ii

கிராமக் கணக்குகள் நடைமுறை நூல்

(1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய வெளியிடப்பட்ட
திருத்தங்களுடன் திருத்தியமைக்கப்பட்டது.)

தமிழ்நாடு அரசின் ஆணையின் பேரில் வெளியிடப்பட்டது

1982

கிராமக் கணக்குகளைக் குறித்த நடைமுறை நூல்.

பொருளடக்கம்.

பதிவேடுகள்/கணக்குகள்.	விவரம்.	பக்கங்கள். அறிவுரைகள்.	பக்கங்கள். படிவங்கள்.
(1)	(2)	(3)	(4)
நிலைப் பதிவேடு 'A'..	புலங்கள் மற்றும் அவற்றின் மாற்றங்கள் பற்றிய நிலைப் பதிவேடு.	1	37
"A"—பதிவேட்டின் உள்ளடக்கம்.	கிராமத்தில், புலங்களையும் அவைகளில் ஏற்படும் மாறுதல்களின் சுருக்கத்தையும் காட்டும் நிலையான பதிவேடு.	3	50
நிலைப்பதிவேடு — 'B'.	இனாம்கள் மற்றும் அவற்றின் மாற்றங்கள் பற்றிய நிலைப் புலப்பதிவேடு.	3	52
நிலைப்பதிவேடு- 'B-1 ''.	தமிழ்நாடு ஜமீன் (ஒழிப்பு மற்றும் ரயத்து வாரியாக மாற்றம்) சட்டம் 1948-இன் கீழ் ஏற்கப்பட்ட பணி உரிமை முறைக் கொடைகள் மற்றும் 1951 ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வருகிற தேவதாசி மானியங்களையும் பற்றிய நில உரிமைப் பட்டயத்திற்கான நிலைப்பதிவேடு.	4	56—57
	நிபந்தனைகளுக்குட்பட்ட கொடைகளுக்கான நிலைப் பதிவேடு.	5	58—60
	நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட அல்லது தீர்வை செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்பட்ட நிலங்களைக் குறித்த உரிமை மாற்றப் பதிவேடு.	6	60
	குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களைப் பற்றிய பதிவேடு.	6	61
	விவசாயம் முன்னேறிவரும் நீண்ட கால நிலக்குத்தகைப் (Progressive Cowles) பதிவேடு.	6	62—63
கிராமக் கணக்கு எண் 1 ..	கிராம மாதவாரி சாகுபடிக் கணக்கு.	7	64
கிராமக் கணக்கு எண் 1-க்கு "A"—உள்ளடக்கம்.	சாகுபடி செய்யப்பட்ட வெவ்வேறு பயிர்களின் பரப்பு மற்றும் அவற்றின் விளைச்சல் மதிப்பினைக் காண்பிக்கும் சுருக்க விவரப்பட்டி.	9	77
	தேயிலை, காப்பி மற்றும் ரப்பர் சாகுபடியான பரப்பினைக் காண்பிக்கும் பதிவேடு.	9	122—124

பதிவேடுகள்/கணக்குகள்.	விவரம்.	பக்கங்கள். அறிவுரைகள்.	பக்கங்கள். படிவங்கள்.
(1)	(2)	(3)	(4)
கிராமக் கணக்கு எண். 2 ..	கிராமத்தில் கைப்பற்று நிலத்தையும், சாகுபடி நிலத்தையும் புலவாரியாக காண்பிக்கும் வருடாந்திர சாகுபடி அடங்கல் கணக்கு.	11	125
கிராமக் கணக்கு எண் 2-க்கு "A" உள்ளடக்கம்.	நீக்கப்பட்டது.		
கிராமக்கணக்கு எண் 2-க்கு — 'B' உள்ளடக்கம்.	நீக்கப்பட்டது.		
கிராமக்கணக்கு எண் 2-க்கு — "C" உள்ளடக்கம்.	அரசு, குடிகள் ஆகியோருடைய தோட்டம், தோப்புகளைக் குறித்த விவரப்பட்டி.	17	126
கிராமக் கணக்கு எண் 2-க்கு — 'D' உள்ளடக்கம்.	கிராமத்தில் சில பாய்ச்சலாதாரங்களின் கீழ் நீர்பாய்ச்சப்பட்டபரப்பின் விவரங்களைக் காண்பிக்கும் விவரப்பட்டி.	18	128
கிராமக் கணக்கு எண் 2-க்கு 'E' உள்ளடக்கம்.	நீக்கப்பட்டது.		
கிராமக்கணக்கு எண் 2-க்கு — 'F' உள்ளடக்கம்.	கிராமத்தில் பல்வேறு வகை நிலவகுப்புகளின் பரப்புகளைக் காண்பிக்கும் விவரப்பட்டி.	19	133
கிராம கணக்கு எண் 3 ..	புலங்களின் பதிவுகளின்மாறுதல்களைக் காண்பிக்கும் வருடாந்திர பதிவேடு.	19	135
கிராமக் கணக்கு எண் 3-க்கு — 'A' உள்ளடக்கம்.	கைப்பற்று நிலங்களின் மாறுதல் விவரங்களைக் காண்பிக்கும் சுருக்கம்.	20	140
கிராமக் கணக்கு எண் 4 ..	அனைத்து வகை அரசிறைக் கழிவு (Beriz deduction) களையும்காண்பிக்கும் விவரப்பட்டி.	20	143
கிராமக் கணக்கு எண். 5 — பாகம் I.	தீர்வைதள்ளிக் கொடுக்கக்கூடிய நிலப் பரப்பையும், பரிந்துரையின் பேரில் தள்ளிக் கொடுக்கப்பட்ட தொகையையும் காண்பிக்கும் விவரப்பட்டி.	21	144
கிராமக் கணக்கு எண். 5— பாகம் II.	தள்ளிக் கொடுக்கப்பட்ட பருவகால மற்றும் நிலையான தீர்வையைப் பற்றிய சுருக்க விவரப்பட்டி.	22	146
கிராமக் கணக்கு எண். 5— பாகம் III.	வருவாய் நிலை ஆணை எண் 14 இன் கீழ் அளிக்கப்படும் வழக்கத்திற்கு மாறான தள்ளுபடி பற்றிய விவரப்பட்டி.	22	149
கிராமக் கணக்கு எண் 6 ..	நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களுக்கு தரத் தீர்வையில் சேர்த்துக் கொள்ளப்படாத தண்ணீர் தீர்வையைக் காண்பிக்கும் விவரப்பட்டி.	22	150

பதிவேடுகள்/கணக்குகள்.	விவரம்.	பக்கங்கள். அறி- வுரைகள்.	படி- வங்கள்.
(1)	(2)	(3)	(4)
கிராமக் கணக்கு எண் 6-க்கு 'A' உள்ளடக்கம்.	தண்ணீர் தீர்வையை எடுத்தெழுதுவதற்கான விவரப் பட்டி.	23	163
கிராமக் கணக்கு எண் 7.	பல்வகை வருவாயினைக் காண்பிக்கும் விவரப்பட்டி.	23	165—166
கிராமக் கணக்கு எண் 8	நீக்கப்பட்டது.		
கிராமக் கணக்கு எண் 8A.	I மற்றும் II ஆவது வகுப்பு நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்களின்கீழ் நீர்ப்பாய்ச்சப் பட்ட நிலங்களைக் காண்பிக்கும் விவரப்பட்டி.	24	167
கிராமக் கணக்கு எண் 8B.	III ஆம் வகுப்பு நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்களின்கீழ் பாசனம் பெற்ற நிலங்களின் விவரப் பட்டி.	24	168
கிராமக் கணக்கு எண் 9.	நீக்கப்பட்டது.		
கிராமக் கணக்கு எண் 9A.	கூடுதல் நிலத் தீர்வை, கூடுதல் தண்ணீர் தீர்வை, சட்டம், 1963 (1976 ஆம் வருடம் 4 ஆவது சட்டத்தின்கீழ் திருத்தப்பட்டது) இன்கீழ் உள்ள வருவாயினைக் காட்டும் விவரப்பட்டி.	25	169
கிராமக் கணக்கு எண் 9B.	நீக்கப்பட்டது.		
கிராமக் கணக்கு எண் 10.	பட்டாவாரியாக ஒவ்வொரு நபருடைய நிலவரித் திட்ட விவரத்தினையும் காண்பிக்கும் சிட்டா.	26	170—174
கிராமக் கணக்கு எண் 10-க்கு 'A' உள்ளடக்கம்.	இறந்துவிட்ட பட்டாதாரர்களின் பெயர்களையும் மற்றும் பட்டாக்கள் வழங்கப்படவேண்டிய நபர்களின் பெயர்களையும் காண்பிக்கும் விவரப்பட்டி.	26	175
கிராமக் கணக்கு எண் 10-க்கு 'B' உள்ளடக்கம்.	நீக்கப்பட்டது.		
கிராமக் கணக்கு எண் 10-க்கு 'C' உள்ளடக்கம்.	வருவாய்ப் பதிவுகளை மாற்றுவதற்காக கிராம நிர்வாக அலுவலரால் உபயோகப் படுத்தப்படும் துணைப் பதிவேடு.	27	176
கிராமக் கணக்கு எண் 10-க்கு 'D' உள்ளடக்கம்.	நீக்கப்பட்டது.		
கிராமக் கணக்கு எண் 11	பட்டா படிவம்	27	178
கிராமக் கணக்கு எண் 11-க்கு 'A' உள்ளடக்கம்.	பல்வகை வருவாய்க்கான பட்டா படிவம்.	27	179
கிராமக் கணக்கு எண் 12.	மொத்த கிராமத்திற்கான நிலவரித்திட்ட கருக்க விவரப் பட்டி.	27	180

பதிவேடுகள்/கணக்குகள்.	விவரம்.	பக்கங்கள். அறிவுரைகள்.	பக்கங்கள். படிவங்கள்.
(1)	(2)	(3)	(4)
கிராமக் கணக்கு எண் 13.	தினசரி வசூல் சிட்டா	28	182
கிராமக் கணக்கு எண் 14.	நபர்வாரி, தினசரி வசூல் சுருக்கம்.	28	182
கிராமக் கணக்கு எண் 14-க்கு 'A' உள்ளடக்கம்	மொத்த கிராமத்திற்குமான கேட்பு, வசூல், மற்றும் நிலுவை பற்றிய விவரப் பட்டி.	29	183
கிராமக் கணக்கு எண். 14-க்கு 'B' உள்ளடக்கம்.	வசூலிக்க இயலாத பாக்கிகளுக்கான விவரப்பட்டி.	29	184
கிராமக்கணக்கு எண் 14க்கு 'C' உள்ளடக்கம்.	மிகைப்பட செலுத்தப்பட்ட தொகைகளைக் காண்பிக்கும் விவரப்பட்டி.	29	186
கிராமக் கணக்கு எண் 15.	செலுத்துப்பட்டியல் ..	30	187
கிராமக் கணக்கு எண் 16.	ஒவ்வொரு மாத இறுதியிலும் நபர்வாரி, நிலத்தீர்வை, கேட்பு, வசூல், பாக்கியைக் காண்பிக்கும் விவரப்பட்டி.	30	188
கிராமக் கணக்கு எண் 17.	பசலிவாரி அபராதத் தொகை, கேட்பு, வசூல் மற்றும் நிலுவையைக் காண்பிக்கும் விவரப்பட்டி.	31	189
கிராமக் கணக்கு எண் 18.	பற்றுச் சீட்டுப் படிவம் ..	31	190
கிராமக் கணக்கு எண் 19.	பிறப்புகளையும் இறப்புகளையும் மற்றும் கால்நடை வியாதியையும், கால்நடை இறப்புகளையும் மற்றும் அம்மை குத்திப் பாதுகாப்பு பெற்றிராத குழந்தைகளையும் பற்றிய பதிவேடுகள்.	33	191—198
கிராமக் கணக்கு எண் 20.	மழை மற்றும் நீர் வழங்கு விவரப்பட்டி.	35	199
கிராமக் கணக்கு எண் 21.	ஐந்தாண்டுகளுக்கொரு முறை எழுதப்படும் கணக்கை அனுசரித்து இருக்கும் விவசாயக் கால்நடைகளையும் மற்றும் விவசாயக் கருவிகளையும் பற்றிய விவரப்பட்டி.	35	201
கிராமக் கணக்கு எண் 22.	நீக்கப்பட்டது.		
கிராமக் கணக்கு எண் 23..	பலவகை மதிப்புள்ள கைப் பற்றுகளின் எண்ணிக்கையைக் காண்பிக்கும் விவரப் பட்டி.	35	203
கிராமக் கணக்கு எண் 24..	கிராமத்தில் இடைக்கத்தக்க கனிமங்களைப்பற்றிய விவரப் பட்டி.	36	204
	கிராம ரொக்கக் கணக்குகளை முடிப்பதற்காகவும் அலைகளை வட்ட வசூல் கணக்குகளுடன் சரிக்கட்டிப் பார்ப்பதற்காகவும் உள்ள அறிவுரைகள்.		205—212

கிராமக் கணக்குகளைக் குறித்த நடைமுறை நூல்

கிராமக் கணக்குகளை பற்றிய திருத்தப்பட்ட படிவங்களைப் பயன்படுத்துவதில் கிராம நிர்வாக அலுவலர்கள் அனுசரிக்க வேண்டிய முறைகளைப் பற்றிய விதிகள்.

நிலைப் பதிவேடு 'A'

இது புலங்களையும் அவைகளில் ஏற்படும் மாறுதல்களையும் காண்பிக்கும் நிலையான பதிவேடு. அச்சிடப்பட்ட நிலவரித் திட்டப் பதிவேடு மற்றும் கிராம விபரக்குறிப்பு ஆகியவை உள்ள கிராமங்களுக்கு அவைகளையே 'A' பதிவேடாக உபயோகிக்க வேண்டும். மற்ற கிராமங்களுக்கு நிலவரித்திட்ட பதிவேடு வெளியாகிற வரைவில் 'A' பதிவேடு இந்த நடைமுறை நூலில் கண்ட படிவத்தின்படி வைக்க வேண்டும். குறிப்புக் கலத்தில் புறம்போக்கு நிலங்களின் வகைகளையும் தொல்பொருள் சின்னங்கள் பற்றிய விவரங்களையும் காண்பிக்கவேண்டும். தவிர, கட்டிடங்கள், கிணறுகள், பாய்ச்சலுக்கும் அது போன்றவற்றுக்கும் உபயோகப்படும் கிணறுகள் கால்வாய்கள் போன்ற நிலையான தன்மை உடையவைகளையும் அவை சம்பந்தப்பட்ட மாறுதல்கள் அல்லது சேர்க்கைகள் ஆகியவற்றையும் குறிப்பிட வேண்டும். கிணறுகள் தவிர மற்ற சொந்த பாய்ச்சவாதாரங்களைப் பொறுத்தவரை அவற்றைக் கட்டுவதற்காக அனுமதிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் எண்ணும் தேதியும் தவறாது குறிக்கப்படவேண்டும். கட்டப்பட்டுள்ள கிணறுகளின் தன்மையும் நிலைமையையும் அளவினையும் அதன் சாதாரண ஆழத்தையும், பாய்ச்சக்கூடிய பரப்பினையும் பதிவேட்டின் குறிப்புக் கலத்தில் கண்டெழுத வேண்டும். வருவாய் நிலை ஆணைகளின்கீழ் நில ஒப்படை தடை செய்யப்பட்டவை என்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட விவரங்களுடன் கூடிய அனைத்து நிலங்களுக்கும் எதிரே குறிப்பு கலத்தில் ''ஒதுக்கப்பட்டவை'' என்று குறிப்பிடவேண்டும் :—(அ) நிர்வை விதிக்கப்பட்ட நிலமாக இருந்தபோதிலும் அரசாங்கத்திற்காக, கிராமம் அல்லது இதர தனி காரியங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டவை ; (ஆ) வனச் சட்டத்தின் 20 ஆவது பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் ஐந்தாவது விதியின் கீழ் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலம் ; (இ) துறைமுக எல்லைகளிலுள்ள நிலங்கள் ;; (ஈ) இருப்புப் பாதை நிலைய எல்லையிலிருந்து 0·8 கி. மீ. (அரை மைல்) சுற்றுக்குள் நிர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள் மற்றும் உரிமையை விட்டு விடுவதன் பேரிலும் மற்றும் வாரிசு அற்றுப்போன சொத்துக்களும் அரசினைச் சேர்ந்துள்ள அல்லது அரசினைச் சேர வாய்ப்புள்ள கிராம நத்தம் உட்பட அனைத்து நிலங்களும் ஆகும். இந்த வகுப்பைச் சேர்ந்த நிலங்களை முறைப்படி புறம்போக்காக மாற்றப்படவேண்டும். நிலையான பதிவேடுகள் எந்தப் படிவத்தில் இருந்தபோதிலும் இனாம் நிலங்கள் அரசு நிலமாகவோ புஞ்சை நஞ்சையாகவும், நஞ்சை புஞ்சையாகவும் பதிவுற்ற புலங்களின் பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் இவைகள் போன்ற நிலவரித் திட்டத்திற்குப் பிறகு ஏற்பட்ட நிலையான மாறுதல்கள் அனைத்தையும் உடனுக்குடன் குறிப்பு கலத்தில் நாளது வரை மாறுதல் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் எண், தேதிகளுடன் பதிய வேண்டும். இது போலவே அவ்வப்போது ஒப்புதல் அளிக்கப்படும் அனைத்து உட்பிரிவு இனங்களையும் அவைகளின் பரப்பு தீர்வையையும் தேவைப்படும் இனங்களில் அதன் தரம், விவரம் முதலியவற்றுடன் நிலையான பதிவேடு 'A' இல் குறிக்க வேண்டும். இடையில் வெற்றுக் காகிதங்கள் வைக்கப்பட்ட பதிவேடுகளில் சம்பந்தப்பட்ட புல எண்களுக்கு எதிரே அந்த வெற்றுக் காகிதத்தில் மாறுதல் பதிவுகளைச் செய்யவேண்டும். புதிய புலங்கள் ஏற்படுத்தி அந்தக் கிராமத்தின் கடைசி எண்ணின் தொடர்ச்சியாக அதற்கு எண் கொடுக்கப்பட்டால், அந்த எண் கொடுக்கும் பொழுது எந்த மூலப் புல எண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டனவோ அதற்கு எதிரே குறிக்கப்படுவது மட்டுமல்லாமல் இந்தப் பதிவேட்டின் கடைசியில் தொடர்ச்சியாகவும் அந்த எண்ணைக் குறிக்கவேண்டும். இதே போன்று நிபந்தனைக்குட்பட்ட நில ஒப்படை ஒவ்வொன்றும் குறிப்பு கலத்தில் கீழ்க்குறிப்பிட்டவாறு பதிவு செய்யப்படவேண்டும் நிபந்தனைக்குட்பட்டு ஒப்படை செய்யப்பட்டது. உத்தரவு எண். ..... நாள் .....ஐப் பார்க்கவும்''. நிபந்தனைக்குட்பட்ட ஒப்படைக்கான நிலையான பதிவேட்டில் இந்த ஒப்படைக்கான பதிவுகளைச் செய்யும் பொழுதே இந்தப் பதிவேட்டிலும் உரிய பதிவுகளைச் செய்யவேண்டும். மற்ற நிர்வை விதிக்கப்பட்ட தரிசு (ADW) நில ஒப்படைகளையும் மற்றும் நிலமாற்றம் (Transfer of Lands) இவைகளையும் கடைசி கலத்தில் குறித்து மாறுதலுக்கான உத்தரவுகளையும் குறிப்பிட வேண்டும். மாறுதல்களைப் புதிய போதிய இடம் போதாமலிருந்தால் தேவையான வெற்றுக் காகிதங்களை இடையில் சேர்த்துக் கொள்ளலாம். வருவாய்ப்பதங்களைக் சுருக்கமாக எழுதுவதினால் இடத்தை சிக்கனப் படுத்திக் கொள்ளலாம். உதாரணமாக, புஞ்சை என்பதை 'பு' என்றும், நஞ்சை என்பதை 'ந' என்றும் புறம்போக்கு என்பதை 'புற' என்றும் இவ்விதமாகவே சுருக்கி எழுதலாம். இந்த நடைமுறை நூலிலுள்ள படிவத்தில் (8) ஆவது கலத்தில் மண்ணின் விவரமும் நிலத்தின் வகுப்பும் இனமும் கண்டெழுதவேண்டும். கிராம நிர்வாக அலுவலர், அச்சிட்ட நிலவரித்திட்ட பதிவேடு இடத்தவுடன் அதை அடங்கல் பதிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அதில் அவர் கண்டுபிடிக்கும் பிழைகளைத் தனியாக ஒரு புத்தகத்தில் பதிந்து அதன் குறிப்பு கலத்தில் ஒவ்வொரு வேறுபாட்டுக்கும் கிராம நிர்வாக அலுவலருக்குத் தோன்றும் காரணத்தைச் சுருக்கமாய் எழுதி வைக்க வேண்டும். ஜமா பந்தியின்போது இந்த வேறுபாடுகளை எல்லாம் சரிப்படுத்த வேண்டும்.

பதிவேட்டின் (13) ஆவது கலத்தில் பதிவு செய்யப்பட்ட கைப்பற்றுதாரரின் எண்ணையும் பெயரையும் இனாம்தாரர் அல்லது உரிமை அளிக்கப்பட்ட இனாம்கள் (Enfranchised Inams)

மற்றும் உரிமைஅளிக்கப்படாத சொந்தஇனாம்கள் (unen ranchised Personnel Inam) ஆகியவற்றின் உரிமையாளர்களின் பெயர் மற்றும் எண் குறிக்கப்படவேண்டும். ஏனைய இனாம்களைப் பொறுத்த மட்டில் நிறுவனங்கள் அல்லது வேலையின் பெயர்கள் மற்றும் பணியின் தன்மை காட்டப்பட வேண்டும்.

உள்ளாட்சி நிறுவனங்களில் ஒப்படைக்கப்பட்ட அல்லது அவைகளுக்கு அல்லது தனிப்பட்டவர்களுக்கு அல்லது தனிப்பட்ட நிறுவனங்களுக்குத் தீர்வை இல்லாமல் குறிப்பிட்ட காரியங்களுக்காக உரிமை மாற்றம் செய்யப்பட்ட அரசு நிலங்களை 'புறம்போக்கு' என்று பதிவு செய்ய வேண்டும். குறிப்புரைக் கலத்தில் அவற்றின் விவரத்தை, அதாவது, சாலைகள், குளங்கள், சத்திரம், பள்ளி போன்ற விவரத்தைக் குறிப்பிட வேண்டும். தீர்வையில்லாமல் உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களைப் பொறுத்த வரையில் கீழ்க்கண்டவாறும் குறிப்புரைக் கலத்தில் எழுத வேண்டும் :—

''(ஆணை எண் —நாள் —) இல் தீர்வை இல்லாமல் காரியத்திற்காக (உள்ளாட்சி நிறுவனம், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனம் இவற்றின் பெயர்)—க்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது.''

உள்ளாட்சி நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் அல்லது தனிப்பட்ட நிறுவனங்களுக்குக் குறிப்பிட்ட காரியங்களுக்காகத் தீர்வை செலுத்துவதன் பேரில் உரிமை மாற்றம் செய்யப்பட்ட அரசு நிலங்கள், உள்ளாட்சி நிறுவனம், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும். குறிப்புரைப் பத்தியில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட வேண்டும் :—

''(ஆணை எண்..... நாள்.....)—ல் தீர்வை செலுத்துவதற்குட்பட்டு (.....) காரியத்திற்காக உள்ளாட்சி நிறுவனம், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது.''

இத்தகைய நிலங்களைப் பொறுத்தவரையில் உள்ளாட்சி நிறுவனம், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனத்திற்குப் பல்வகைப் பட்டா ஒன்று வழங்கப்பட வேண்டும். அதற்குரிய தீர்வையைக் கிராமக் கணக்கு எண்– 7-க்கு கொண்டுவரவேண்டும்.

நில எடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ளாட்சி நிறுவனங்கள் அல்லது தனிப் பட்டவர்கள் அல்லது தனிப்பட்ட நிறுவனங்கள் சார்பில் கைப்பற்றப்பட்ட நிலங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களால் தனிப்பட வாங்கி கைப்பற்றப் பட்ட நிலங்கள் ஆகியவை உள்ளாட்சி நிறுவனம், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும். நில எடுப்புச் சட்டத்தின் கீழ் கைப்பற்றிய நிலங்களைப் பொறுத்த மட்டில் குறிப்புரைப் பத்தியில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்யப்பட வேண்டும் :—

''(தீர்ப்பாணை எண்..... நாள்.....)ல் காரியத்திற்காக உள்ளாட்சி நிறுவனம், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனத்தின் சார்பில் கைப்பற்றப்பட்டது. இத்தகைய நிலங்களுக்கு நிலவரி நீக்கம் செய்யப்பட்டிருந்தால் குறிப்புரை பத்தியில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்யவேண்டும் :—மேலும் இக்குறிப்புகளுக்கு ஆதாரமான தாலுக்கா கணக்கு எண் 7 மற்றும் 8 A கணக்குகளின் வரிசை எண் குறிக்கப்படவேண்டும்.

''(ஆணை எண் ..... நாள் .....)ல் நிலவரி நீக்கம் செய்யப்பட்டது. நீக்கம் செய்யப்பட்ட நிலவரியை நிலையாக தள்ளிக் கொடுக்கப்பட்ட வரியாகக் காண்பிக்கப்பட்டு கிராமக் கணக்கு எண் 5-ல் கொண்டு வரப்படுவதுடன் ஜமாபந்தியின் போது தள்ளிக் கொடுப்பதற்கான ஆணை பிறப்பிக்கவும் வேண்டும்.

பொதுக் காரியங்களுக்காக உள்ளாட்சி நிறுவனங்களால் கைப்பற்றப்பட்ட தனியார் வீட்டு மனைகள் புறம்போக்கு நிலமாகப் பதிவு செய்யப் பட்டு குறிப்புரைக் கலத்தில் அவற்றின் விளக்கம் அதாவது, சாலைகள், தெருக்கள், பள்ளிகள் முதலியன குறிக்கப்பட வேண்டும். குறிப்புரைக் கலத்தில் ''(தீர்ப்பாணை எண். ....., நாள் .....)-ல் .... காரியத்திற்காக ..... உள்ளாட்சி நிறுவனத்தினால் கைப்பற்றப்பட்டது)'' என்ற பதிவும் செய்யப்பட வேண்டும்.

இனாம் நிலத்தைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சியர் அலுவலக இனாம் பதிவேட்டிலுள்ள விளக்கம் மற்றும் நடப்பு தர வீத அடிப்படையில் கலங்கள் (5) முதல் (12) வரையில் எழுதப்பட வேண்டும். நிலத்தில் நிலவரித் திட்ட விவரங்கள் வேறுபட்டுள்ள போது குறிப்புரைக் கலத்தில் நிலவரித் திட்ட விவரம் மற்றும் சரியான தரத் தீர்வை குறிக்கப்பட வேண்டும். நில உடைமை ஒழிப்புச் சட்டதின் மேற் உரிமையாக்கப்பட்ட கிராமங்களைப் பொறுத்த வரையில் ''பணி உரிமைக்கால நிலங்கள் மற்றும் தேவதாசி இனாம்களின் நிறப்பு பதிவேட்டில்'' கொண்டு வரப்பட்ட நிலங்களுக்கு மண் வகை விவரம், தரம், தீர்வை முதலிய விவரங்கள் பூமியிலுள்ளவற்றின் நிலைமைகளுக்கு ஏற்றவாறு இப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். அரசுக்கு உண்மையில் செலுத்த வேண்டிய தொகை நில உடைமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் மானியத்தை அங்கீகரித்து உதவி நிலவரித் திட்ட அலுவலர் பிறப்பித்த ஆணை மற்றும் நாள், மானியத்தின் தன்மை அல்லது 1951 ஆம் ஆண்டு சட்டம் XIX-இன் கீழ் மாவட்ட ஆட்சியரால் பணி உரிமைக்கால சொடைகள் மற்றும் தேவதாசி இனாம்களை யொட்டி விதிக்கப்பட்ட தீர்வை முதலானவை பற்றிய சுருக்கமான பதிவுகளை குறிப்புரை கலத்தில் எழுத வேண்டும்.

இப்பதிவேடு இரட்டைப் படிகளாக எழுதப் பட்டு வட்டாட்சியர் அலுவலகத்திலும் கிராம நிர்வாக அலுவலரிடமும் இருக்க வேண்டும். கிராமத்திலுள்ள பதிவேட்டில் மாற்றம் செய்யப் படும் பொழுது அம் மாற்றம் வட்டாட்சியர் அலுவலகப் பதிவேட்டிலும் எடுத்தெழுதப்பட வேண்டும். கிராம மற்றும் வட்டப் பதிவேடுகளில் நிலையான மாற்றங்கள் செய்வதில் பின் பற்ற வேண்டிய நடைமுறைகளுக்கு வட்டக் கணக்குகளின் நடைமுறை நூலில் எண்கள் 7 மற்றும் 8(அ) பதிவேடுகளைப் பராமரித்தல் பற்றி கூறப்பட்டுள்ள அறிவுரைகளைக் காண்க. வட்டாட்சியர் அலுவலகப் பதிவேட்டில் செய்யப்

படும் அனைத்து மாற்றங்களும் தவறாமல் வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியரால் மேலொப்பம் இடப்பட வேண்டும். ஜமாபந்தியின் போது புல அளவைச் சுவடியின் (Field Measurement Book) வட்ட அலுவலகப் படியில் எடுத்தெழுவது முடிவாகாத உட்பிரிவுகள் தவிர ஏனைய எல்லா மாற்றங்களும் கிராம மற்றும் வட்டாட்சியர் அலுவலகப் பதிவேடுகளில் கவனமாக ஒப்பு நோக்கப்பட வேண்டும்.

நகர நிலை அளவை முறைப்படி கணக்கெடுக்கப்பட்ட நகராட்சியில், முழுவதும் சேர்த்துக் கொள்ளப்பட்ட கிராமங்கள் தொகுதி (Ward) வாரியாகவும் நில அளவை வாரியாகவும் நிலைப் பதிவேடு "A"-இல் எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு நகர நில அளவை எண்ணும், அதனுடைய உரிமை முறையும், பரப்பளவும் காட்டப்பட்டு தனி வரியில் எழுதப்பட வேண்டும். அரசிற்கு மிகுதியான வருவாய் அளிக்கும் தனிப்பட்ட சொத்துக்களைப் பொறுத்தமட்டில் விவரங்கள் ஏதும் பதிவு செய்யப்பட வேண்டியதில்லை. ஒரு பகுதி நகராட்சியிலும் மற்றொரு பகுதி நகராட்சியில் இல்லாத கிராமத்திலும் உள்ள கிராமங்களைப் பொறுத்தமட்டில் நிலையான 'A' பதிவேடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நகராட்சியிலுள்ள பகுதிக்கு மேலே கூறப்பட்ட படிவத்திலும் நகராட்சியின் வெளியேயுள்ள பகுதிக்கு சாதாரணமான படிவத்திலும் எழுதப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசினால் இராணுவ நிலங்கள் என்று ஒப்புக் கொள்ளப்பட்ட நிலங்கள் உள்ள கிராமங்களில் அத்தகைய நிலங்களின் நில அளவை எண்களுக்கெதிரே குறிப்புரைக் காலத்தில் "இராணுவ நிலம் (இந்திய அரசு)" என்ற சொற்கள் எழுதப்பட வேண்டும். கலம் 11 (பரப்பு) தவிர ஏனைய எல்லா கலங்களும் வெறுமையாக விடப்பட வேண்டும். இக்கலத்தில், அத்தகைய நிலங்களின் தன்மை மற்றும் விளக்கத்தையும் (எ-டு) : துப்பாக்கி சுடும் பயிற்சிக் களம், படைப் பாளையம், முகாம் இடம், அணி வகுப்புக் களம் முதலியன எழுத வேண்டும்.

உள்ளாட்சி நிறுவனங்களிடம் சட்டப்படி ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்து விவரங்கள் A-பதிவேட்டின் (14) ஆவது கலத்தில் (குறிப்புரை) குறிக்கப்பட்டு வட்டாட்சியராலும், மேலொப்பம் இடப்பட வேண்டும்.

(வ. வா. நிலை எண். 1050 (ட்டி), நாள் 4—7—1970.)

(26—8—1976 நாளிட்ட, வருவாய், அரசாணை பல்வகை எண். 1783.)

A பதிவேட்டின் உள்ளடக்கம்.

இது, ஒவ்வொரு வகையின் கீழுள்ள நிலத்தின் பரப்பையும் தீர்வை வீதத்தையும் காட்டுகிற A-பதிவேட்டின் தொகுப்பாகும். அரசு நிலம், "கைப்பற்றில் உள்ளவை", "கைப்பற்றில் இல்லாதவை" என்பனவற்றின் கீழ் தவித் தனியே காட்டப்பட வேண்டும். நில அளவைக்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் ஏதேனும் இருப்பின் இத் தொகுப்பு அதன் பின்னர் ஆண்டு தோறும் திருத்தப்பட வேண்டும். எனினும் திருத்தம், பதிவேட்டின் கிராமப் படியின் உள் அடக்கத்திற்கு மட்டுமே உரியதாகும்.

நிலவரித் திட்டப் பதிவேடுகளின் படிகள் வரப் பெறும்போது A-பதிவேடும் அதன் உள்ளடக்கமும் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

நிலைப்பதிவேடு-B.

1. இனாம்கள் ஒழிப்பு தற்காலிக நிறுத்தம் செய்யப்பட்டுள்ள ஒரு சில இடங்களில்மட்டும் இப்பதிவேடுகள் பேணப்படும். பொது அறிவுரைகள் : B-பதிவேடு, இனாம்களின் நிலைப் புலப் பதிவேடாகும். பல்வேறு வகை இனாம்களின் கீழும் அதாவது, சமய, அறக்கட்டளை, சொந்த, பணி மற்றும் தசபந்தம் ஆகிய இனாம்களின் கீழ்உரிமைப் பட்டயம் முறைப்படுத்தப்பட்டு அவற்றிற்கு நேராக ஒவ்வொரு உரிமைப் பட்டயத்தின் கீழ் வரும் புலங்களும் காட்டப்பட வேண்டும். பத்தி (2)-ல் அயன் பட்டா எண்ணுக்குப் பதில் உரிமைப் பட்டய எண் குறிக்கப்பட வேண்டும். பத்திகள் (5), (6)-ல் குறிக்கப்பட்டு உள்ள நஞ்சை, புஞ்சை என்ற விவரமும், ஒரு போகம் மற்றும் இரு போகப் பயிர் என்ற விவரமும் மாவட்ட ஆட்சியரின் இனாம் பதிவேட்டிலுள்ள விவரங்களுடன் ஒத்திருக்க வேண்டும். விடுவரி விதிக்கப்பட்ட தினத்திலிருந்து நிலத்தின் விவரத்தில் மாற்றம் இருப்பின், அதனை இப்பதிவேட்டின் குறிப்புரைக் கலத்திலும் A-பதிவேட்டிலும் குறிப்பதுடன் B-பதிவேட்டின் (5), (6) ஆவது கலங்களிலும் ஏனைய கிராமக் கணக்குகள் அனைத்திலும் பின்பற்ற வேண்டும். கீழ்க்கண்டவற்றைத் தவிர அனைத்து இனங்களிலும் கலம் (8)-ல் நடப்பு தீர்வையைக் காண்பிக்க வேண்டும் : (i) நிலவரித் திட்டத் தீர்வை விதிப்பு இல்லாத இனங்களில் சுற்றுப்புறங்களிலுள்ள இத்தகைய நிலத்தின் நிலவரித் திட்டத் தீர்வை விதத்தை ஒட்டி மாவட்ட ஆட்சியர் தீர்வை விதிக்க வேண்டும்; (ii) உரிமைப் பட்டயம் வழங்கப்பட்ட பின்னர், இனாம் புலங்களில் எவற்றிலேனும் அல்லது எல்லாவற்றிலும் புலங்களின் விவரத்தில் மாற்றம் இருந்தால், கலம்(8)-ல் இனாம் உரிமைப் பட்டயத்தில் கொடுக்கப்பட்டு உள்ள நிலத்தின் விவரத்திற்குப் பொருத்தமாக நடப்புத் தீர்வையைக் குறிக்க வேண்டும். குறிப்புரைக் கலத்தில் நிலத்தின் நிலவரித் திட்ட விவரம் மற்றும் தீர்வை ஆகியவற்றைக் குறிக்க வேண்டும். இப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ள விடுவரித் தொகையானது நிலமேல்வரி மற்றும் காவல் கட்டணம் போன்ற ஏனைய பிற பல்வகைக் கட்டணங்கள் நீங்கலாக இருக்க வேண்டும். இப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்ட விடுவரித் தொகைக்கும் தலமொழி விடுவரிப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்ட தொகைக்கும் ஏதேனும் வேறுபாடு இருக்குமாயின் அதற்கென பதிவேட்டின் அடியில் பதிவு செய்யப்பட்ட தொகுப்பு படிவத்தில் கணக்கில் காண்பிக்க வேண்டும். தொகுப்பில் உள்ள எண்கள் கிராமக் கணக்கு எண். 7-ன் கூட்டுத் தொகைகளுடன் ஒத்திருக்க வேண்டும். பதிவேடு தயாரிக்கப்பட்ட பின்னர் இருக்கக் கூடிய நிலையான இயல்புடைய மாற்றங்கள் A-பதிவேட்டில் உள்ளபடி., மாற்றம் ஒப்பளிக்கப்பட்ட ஆணை, எண் மற்றும் நாளுடன் குறிப்புரைக் கலத்தில் குறிக்கப்பட வேண்டும்.

2 (i) விடுவரியைப் பகிர்ந்து எழுதுதல்.— விடுவரியை மொத்தமாகப் பதிவு செய்யக் கூடாது. இனாமில் அடங்கியுள்ள ஒவ்வொரு புலத்திற்கும் பிரித்தெழுத வேண்டும். இனாம் கைப்பற்று நிலங்களின் உரிமை விட்டு விடுதல், மாற்றங்கள் மற்றும் இது போன்றவையால் மாற்

றும் நிகழும்போது விடுவரியைத் திருத்தி அமைக்கவும் பார்வைக்கு சரியான பதிவுரு கிடைக்கச் செய்வதுமே நிலையாக விடுவரியைத் திருத்தி எழுதுவதன் நோக்கமாகும். நடப்புத் தீர்வையை அல்லாத வேறு தீர்வை விகிதத்தின் பேரில் பிரித்து எழுதப்பட்டிருக்குமானால் அவ்வுண்மையையும் எந்த தீர்வை வீதத்தில் விடுவரியானது பிரித்து எழுதப்பட்டது என்பதையும் குறிப்புரைக் கலத்தில் குறிக்கவும். விடுவரியானது ஏற்கெனவே பிரித்து எழுதப்படாதிருக்கும் இனங்களில் நடப்புத் தீர்வையின் அடிப்படையில் அதாவது, பிரித்து எழுதும் போது நடப்பிலுள்ள தீர்வை வீதத்தின் அடிப்படையில் பிரித்தெழுதவேண்டும். பதிவேட்டின் (5), (6) ஆவது கலங்களில் நிலத்தின் விவரம் கொடைக்குப் பின்பு மாற்றம் செய்யப்பட்டுள்ள இனங்களில், இனாம் நிலவரித்திட்ட ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிலவிவரத்திற்குப் பொருந்தும் வகையில் நடப்புத் தீர்வையின் பேரில் பிரித்து எழுதவேண்டும். மேலே உள்விதி (IV)ல் உள்ள விதிகளுக்குட்பட்டு 1894ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் II ன் கீழ் உரிமை அளிக்கப்பட்ட ஜமீன் இனாம் கிராம ஊழியர் இனாம்களைத் தவிர ஒருமுறை செய்யப்பட்ட தொகுப்பு மாற்றத்திற்கு உரியதல்ல.

(ii) கூடுதல் கட்டணத்தைப் பிரித்து எழுதுதல் :—வருவாய் நிலை ஆணை எண். 61இன் கீழ் செய்யப்பட்ட இனாம் நிலவரித்திட்ட ஏற்பாட்டிற்குப் பின்னர் இனாமில் கண்ட மிகையின் மேல் விதிக்கப்பட்ட தீர்வை விதிப்பை முடிவு செய்வதில் ஒவ்வொரு புலத்தின் மிகை அல்லது குறையின் மேல் நடப்புத் தீர்வை கணக்கிடப்பட்டு வருகின்ற நிகர மிகைத் தொகை விதிக்கப்பட வேண்டும். இத்தகைய நிகர மிகைக் கட்டணம் மிகைப் பரப்புக்கள் என்று காட்டப்படும் புலங்களுக்கு மட்டிலுமே பிரித்தெழுதப்பட வேண்டும்.

(iii) காவல் கட்டணத்தைப் பிரித்து எழுதுதல் :—காவல் கட்டணம் ஏதுமிருப்பின் அது ஒவ்வொரு புலத்திற்கும் விதிக்கப்பட்டு குறிப்புரைக் கலத்தில் காட்டப்பட வேண்டும். புதிதாக ஏதேனும் காவல் கட்டணம் பிரிக்கப்பட வேண்டியிருந்தால், பதிவேட்டின் கலம் (8)ல் காட்டப்பட்டவாறு புலங்களின் தீர்வை விதிப்பையொட்டி பகுக்கப்படவேண்டும்.

(iv) பைசாவுக்கு சரியாகக் கணக்கிட வேண்டிய பகுப்பு :—அரை பைசாவுக்கு மேற்பட்ட பகுதிகளை அடுத்த உயர் பைசாவுக்கும் மற்றும் அரை பைசாவுக்கும் குறைந்த பைசாவை விட்டுவிட்டு முழுமையாக்கி பைசாவுக்கு சரியாக பகுப்பு கணக்கிட வேண்டும். நிலஎடுப்பு, உரிமை விட்டு விடுதல் அல்லது மீண்டும் ஏற்றுக் கொள்ளுதலின் விளைவாகவும், பரப்பில் குறைக்கப்படுவதன் விளைவாகவும் இனாம் நிலங்கள் உட்பிரிவு செய்யும்பொழுது கிராமப் பணி இனாம்களைப் பொறுத்தமட்டில், இனாமாகவே தொடர்ந்து இருக்கும் மொத்த பரப்பின் மேல் வருவாய் நிலை ஆணை எண். 52ன் கீழுள்ள இணைப்பு Iன் இனாம் விதி XXI-குறிப்பு 4ன் படி விடுவரி கணக்கிடப்பட வேண்டும். ஏனைய இனாம்களைப் பொறுத்தமட்டில் மேற்கண்ட வருவாய் நிலை ஆணையின் இணைப்பு Iன் இனாம் விதி VIII இன்படி இனாமாக அமையப் பெற்றுள்ள நில அளவைப் புலங்கள் மற்றும் உட்பிரிவுகளின்மேல் முழுமையாகக்கப்பட்ட விடுவரி வகுத்துக் கணக்கிடப்பட வேண்டும்.

இருப்பினும், விற்பனை அல்லது பிரிவினையின் விளைவாக உட்பிரிவு செய்யப்பட்டு இனாமின் மொத்த பரப்பு குறையாமல் உள்ளபோது விடுவரியானது முழுமையாக்கப்பட வேண்டிய தில்லை. இவ்விரண்டு இனங்களிலும் பைசாவுக்கு சரியாகப் பகுத்துக் கணக்கிட்டவேண்டும். மறுநில வரித்திட்ட ரீராய்வுக்குட்பட்டு ஒரு இனாம், உரிமை அளிக்கப்பட்டு முழுத்தீர்வைக்கு சரியாக விடுவரி விதிக்கப்பட்டிருந்தால், உட்பிரிவு செய்யப்பட்ட பரப்பின்மீது விதிக்கப்பட்ட விடுவரியானது சாதாரண ரயத்துவாரி வீதத்தில் அந்த நிலத்திற்குத் தீர்வை விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுமோ அதற்குச் சமமான தீர்வை விதித்து வாங்க வேண்டும்.

(6—6—1958 நாளிட்ட, அரசாணை, பல்வகை எண். 2082, வருவாய்.)

3. பதிவேட்டினைக் கையாளுதல் :—இப்பதிவேடு இரட்டைப் படியில் தயாரிக்கப்பட்டு ஒரு படியை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்; இப்பதிவேட்டின் கிராமப் படியில் மாற்றங்களைக் குறிக்கும்பொழுது வட்டாட்சியர் அலுவலகப் படியிலும் அதனைக் குறிக்க வேண்டும். ஜமாபந்தியில் இந்த இரண்டு படிகளையும் ஒத்துப் பார்க்கவேண்டும். இந்தப் பதிவேடு புதிதாக எழுதப்படும்போது பழைய பதிவேடும் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

நிலைப்பதிவேடு-B1.

இது நில உரிமைப் பட்டயத்திற்கான நிலைப் பதிவேடு-B யிலின்றும் வேறுபட்ட தனிப்பதிவேடாகும். இப்பதிவேடு தமிழ்நாடு ஜமீன் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றம்) சட்டம் 1948 (1948 ஆம் வருட XXVI ஆவது சட்டம்)ன் கீழ் முடிவு செய்யப்பட்ட கிராமங்களுக்குரியதாகும். இப்பதிவேடு இரண்டு பாகங்களாகப் பராமரிக்கப்படவேண்டும். பாகம்-1 தமிழ்நாடு ஜமீன் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றம்) சட்டம், 1948 (1948ஆம் வருட XXVI ஆவது சட்டம்) ன் கீழ் பிரிவு 17(1)(பி) மற்றும் (2)இன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட இனங்களைக் கொண்டதாகும். பாகம் II 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைச் சட்டம் (1951 ஆம் வருட XIX ஆவது சட்டம்) இன் பிரிவு 34(2)இன் கீழ் உரிமை அளிக்கப்பட்ட தேவதாசி இனாம்களைக் கொண்டதாகும்.

பாகம் I கீழ்க்கண்டவாறு ஐந்து பிரிவுகளில் பராமரித்துவரப்படும்:—

I. சமயக் கொடைகள்.

II. அறக் கொடைகள்.

III. கிராமப் பணிக் கொடைகள்.

IV. தசபந்தம் கொடைகள்.

V. பிரிவுகள் I முதல் IV வரை அடங்காத ஏனைய கொடைகள்

பாகம் II :—இந்த பாகம் 1951ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைச் சட்டம் பிரிவு 34(2) இன் கீழ் விவரிக்கப்பட்ட தேவதாசி இனாம்கள் சம்மந்தப்பட்டதாகும். இதில் மேற்கண்ட சட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்ட அல்லது உரிமையளிக்கப்பட்டகோவில்களில்

நிபந்தனையுடன் கூடிய பணிகளையுடைய தேவதாசிகள் வைத்துள்ள நிலங்களின் விவரங்கள் இதில் அடங்கியிருக்கும்.

தரத்தீர்வை கலம் 10-ல் காண்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேல்வரி மட்டும் காண்பிக்கப்பட வேண்டும். 10(அ) கலத்தில் 1951 ஆம் ஆண்டு XIX ஆவது சட்டம் பிரிவு 34(2)ன் கீழ் நிலத்தின்மீது மாவட்ட ஆட்சியரால் விதிக்கப்பட்ட மொத்த தீர்வையைக் காட்ட வேண்டும். அரசுக்கு செலுத்தவேண்டிய தொகையை அதாவது, நிலச்சுவான்தாருக்கு தேவதாசியினால் முன்பு செலுத்தப்படத்தக்க ஜோடியை கலம் (11)ல் காண்பிக்க வேண்டும். தேவதாசிக்கு அல்லது சமய நிலங்களுக்குக் கொடுபட வேண்டிய நிகர தொகையானது, அதாவது, மாவட்ட ஆட்சியரால் விதிக்கப்பட்ட மொத்த தீர்வையிலிருந்து நிலச் சுவான்தாரரால் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையைக் கழித்துக் கணக்கிட்டு அந்தத்தொகையைக் கலம் (11)இல் காண்பிக்க வேண்டும். இந்தத்தொகை தீர்வைக் கழிவாக தேவதாசிக்கு அவளுடைய வாழ்நாள் முழுவதும் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்பு சம்மந்தப்பட்ட கோவிலுக்கு வழங்கவேண்டும். பதிவேட்டின் கலம் (14)இல் மேற்கூறியதைப்போன்ற ஒரு குறிப்பினைப் பதிவு செய்ய வேண்டும். (10அ) கலத்தில் உள்ள தொகை, அதாவது நிலச்சுவான்தாரரிடமிருந்து வசூலிக்கவேண்டிய மொத்த தொகையைக் கிராமக் கணக்கு எண் 7 (பல்வகை வருவாய்) இல் காண்பிக்கவேண்டும். கொடுக்கவேண்டிய நிகர தொகையை (11அ-கலத்தில் காண்பிக்கப்பட்டவை) அதை ஒத்த கிராமக் கணக்கு எண் 4-லும் வட்டக் கணக்கு எண் 10-லும் தீர்வைக் கழிவாகக் காண்பிக்கவேண்டும்.

இப்பதிவேடு இரட்டைப் படியில் தயாரிக்கப்பட்டு ஒன்றை வட்டாட்சியர் அலுவலகத்திலும் மற்றொன்றைக் கிராம நிர்வாக அலுவலரிடமும் வைத்திருக்கவேண்டும். இந்த இரண்டு பதிவேடுகளும் ஜமாபந்தியில் ஒத்துப்பார்க்க வேண்டும். இந்தப் பதிவேடு புதிதாக தயாரிக்கப்பட்ட பின், பழைய பதிவேடு வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவேண்டும். இந்த நிலைப் பதிவேடு B-1, நிலவரி திட்டக் குழுவினால் ஏனைய திருத்தமான கணக்குகளுடன் வழங்கப்படும்.

குறிப்பு.—உரிமையளிக்கப்பட்ட இனாம் எவர் பெயரில் காண்பிக்கப்படவேண்டும் என்ற கேள்வியை பொறுத்த வரையில், நிலவரி திட்ட அலுவலர்களும் உதவி நிலவரி திட்ட அலுவலர்களும் அறிவிப்பு செய்தநாளில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி உள்ள பதிவினையும், மாவட்ட ஆட்சியரால் விதிக்கப்பட்ட தீர்வை, இதுநாள்வரை எவரிடமிருந்து வசூலிக்கப்பட்டுவந்ததையும் கணக்கில் கொள்ளவேண்டும். எனினும் ஐயப்பாடுள்ள அனைத்து இனங்களிலும் நிலவரி திட்ட அலுவலர்கள் மாவட்ட ஆட்சியரிடமிருந்து கேட்டு அறிந்துகொள்ள வேண்டும்.

நிபந்தனைக்குட்பட்ட நில ஒப்படைகள் மற்றும்நீண்ட கால நிலகுத்தகைகள்(Cowles) பதிவேடு

இப்பதிவேடு எட்டு பிரிவுகளாகப் எழுதப்படும். பிரிவு I அட்டவணையில் கண்ட இனத்தினருக்கு வழங்கப்பட்ட நிபந்தனைக்குட்பட்ட ஒப்படைகளைக் குறித்ததாகும். பிரிவு II—இராணுவத்தினருக்கும் முன்னாள் இராணுவத்தினருக்கும் அளிக்கப்பட்ட நிபந்தனையுடன் கூடிய ஒப்படையைக் குறிப்பதாகும். பிரிவு III—வருவாய் நிலை ஆணை எண். 15—22 (3)ன்கீழ் கூறப்பட்டுள்ளவாறு நீர்ப்பாசனத் திட்டங்களால் பாதிக்கப்படும் நில ஒப்படைகளைப் பற்றியதாகும். பிரிவு IV—சிறப்பு வீட்டுமனை விதிகளின்கீழ் உள்ள கொடைகளைக் குறிப்பதாகும். பிரிவு V—வருவாய் நிலை ஆணை எண் 19, பத்தி 1இன்கீழ் கொடுக்கப்பட்ட நீண்ட கால நிலக் குத்தகை மற்றும் இதர நிபந்தனைக்குட்பட்ட கொடைகளுக்கும், உரியதாகும். பிரிவு VI—1947ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 3102 (வருவாய்)—ன்கீழ் அரசியல் நியாகிகளுக்குச் செய்யப்பட்ட ஒப்படைக்குரியதாகும்.— பிரிவு VII—வட்டப் பதிவேடு எண் 13-அவை ஒத்த முன்னேறி வரும் நீண்டகால நிலக் குத்தகை நிலங்கள். பிரிவு VIII—1926ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 7ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 52, (வருவாய்-ன்கீழ் அட்டவணையில் கண்ட இனத்தினருக்கு நிலை எடுப்பு செய்து ஒப்படை செய்யப்பட்ட வீட்டு மனைகளுக்குரியது.

[வருவாய் வாரிய நிலை எண் 1050 (ட்டி)
நாள் : 4—7—1970.]

(26—8—1976 நாளிட்ட அரசு ஆணை
பல்வகை எண் 1783 வருவாய்.)

I முதல் IV மற்றும் VI மற்றும் பிரிவு V வருவாய் நிலை ஆணை எண். 19 பத்தி I-ன்கீழ் அளிக்கப்பட்ட நீண்டகால நிலக் குத்தகைகள் ஆகியவற்றை பொறுத்தமட்டில், ஒவ்வொரு பிரிவின் துவக்கத்திலும் சாதாரணமாக அதைப் போன்ற ஒவ்வொரு கொடைக்கும் ஏற்படுத்தப்பட்ட விதிகளின்கீழ், சிறப்பு நிபந்தனைகள் அடங்கிய அச்சிட்ட மாதிரி படிவத்தினை இணைத்து வைத்தல் போதுமானதாகும். கலம் (6)இல் இதுபோன்ற ஒவ்வொரு ஒப்படைக்கும் அந்தப்பிரிவின் துவக்கத்தில், அச்சிட்ட மாதிரி படிவத்திலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டவை என்றும், குறிப்பிட்ட ஒரு இனத்தைப் பொறுத்தவரையில் அதற்குண்டான சிறப்பு நிபந்தனைகள் ஏதேனும் இருப்பின் அவைகளை, அதே கலத்தில் முழுவதுமாக பதிவு செய்தலும் போதுமானதாகும். வருவாய் நிலை ஆணை எண் 19 பத்தி 1இன்கீழ் அளிக்கப்பட்ட நீண்ட கால நிலக்குத்தகை தவிர உள்ள இதர இனங்களுக்கெதிரே ஒவ்வொரு கொடைக்கான நிபந்தனைகளை முழுவதுமாக பதிவு செய்தல் வேண்டும். அட்டவணையில் கண்ட இனத்தினருக்கு விலை மதிப்புள்ள நிலங்களை அதனுடைய விலையைத் தவணைகளில் செலுத்துவதற்கேதுவாக ஒப்படை செய்யப்பட்டிருக்கும் இனங்களில், கிராம நிர்வாக அலுவலர் இந்த பதிவேட்டின் பிரிவு 1 இல் ஒவ்வொரு தவணைத் தொகை செலுத்தும் போதும் வசூலிக்கப்பட்ட தொகை, வசூல் செய்த நாள் ஆகியவற்றை அதற்குண்டான கலங்களில் கிராமக் கணக்கு எண் 13 மற்றும் 14 எழுதப்படும் அதே காலத்தில் பதிவு செய்ய வேண்டும். பிறகு, கிராமப் பதிவேட்டிலிருந்து ஒரு பகுதி நகலெடுத்து, செலுத்துப் பட்டியல் மற்றும் கத்த நகல் குறிப்பேட்டுடன் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். பிரிவு V—ல் சொந்த தோப்புகளைப் பற்றிய குறிப்புரைக் கலத்தில் வருவாய் ஆய்வர்கள், துணை வட்டாட்சியர்கள் மற்றும் வாட்டாட்சியர்களின் ஆய்வு

குறிப்புகள் (வருவாய் நிலை ஆணை எண் 19-1) ஆகியவற்றை சுருக்கமாகப் பதிவு செய்ய வேண்டும்.

பிரிவு VII இல் நீண்ட நிலக்குத்தகை அளிக்கப்பட்டுள்ள உத்தரவில் கண்டுள்ளவாறு புலங்களின் விவரங்கள், எந்த வரையறைகளின் கீழ் அவை அளிக்கப்பட்டன மற்றும் இதர விவரங்களை எழுத வேண்டும். தோப்புகளுக்காக கொடையளிக்கப்பட்ட நீண்டகால நிலக் குத்தகைகளை இப்பிரிவின்கீழ் பதிவு செய்யக் கூடாது.

பிரிவு VIII—இது 1928ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் நாளிட்ட அரசாணை எண் 52 (வருவாய்)-ன்கீழ் அட்டவணையில் கண்ட இனத்தினருக்கு நில எடுப்பு செய்து ஒப்படை செய்யப்பட்ட வீட்டு மனைகளைக் குறித்த பதிவேடாகும்.

உரிமை மாற்ற பதிவேடு.— இது வட்டப் பதிவேடு F-ஐ ஒத்த நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட அல்லது தீர்வை செலுத்துவதிலின்றும் விலக்களிக்கப்பட்ட நிலங்களைக் குறித்த நிலைப் பதிவேடாகும். வருவாய் நிலை ஆணை எண் 19 பத்தி 2-ன்கீழ் கொடையளிக்கப்பட்ட நீண்டகால நிலக் குத்தகைகள் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்படும். வருவாய் நிலை ஆணை எண் 24 பிரிவு 2இன்கீழ் தனி நபர், நிறுவனம் அல்லது உள்ளாட்சி நிறுவனம் ஆகியவற்றிற்கு நிலவரி செலுத்துவதின்றும் விலக்களிக்கப்பட்ட வற்றையும் இப்பதிவேட்டில் குறிக்க வேண்டும்.

குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களைப் பற்றிய பதிவேடு 'C'.—இது வட்டப் பதிவேடு C-யினை ஒத்த குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களைப் பற்றிய நிலைப் பதிவேடாகும். இது மூன்று பிரிவுகளாக எழுதப்பட வேண்டும். பிரிவு I நீண்ட காலக் குத்தகைகளுக்கும், பிரிவு II குறுகிய காலக் குத்தகைகளுக்கும், பிரிவு III வருவாய் நிலை ஆணை எண் 24அ-இன் கீழ் அளிக்கப்பட்ட நிலக் கொடைகளுக்கும் உரியவனவாகும். ஐந்து வருடங்கள் அல்லது அதற்குக் குறைவாகவுள்ள குத்தகைகளைக் குறுகிய காலக் குத்தகைகள் என்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட குத்தகைகளை நீண்ட காலக் குத்தகைகள் என்றும் பகுக்கப்படும்.

நீண்டகால நிலக்குத்தகை கிராமப் பதிவேடு :— இது வட்டப் பதிவேடு எண் 13அ-வை ஒத்த விவசாயம் முன்னேறி வரும் நீண்ட கால நிலக் குத்தகைகளுக்கான நிலப் பதிவேடு. பிரிவு VII—I இல் நீண்ட நிலக் குத்தகை அளிக்கப் பட்டுள்ள உத்தரவில் கண்டுள்ளவாறு புலங்களின் விவரங்கள், எந்த வரையறைகளின்கீழ் அவை அளிக்கப்பட்டன, மற்றும் இதர விவரங்களை எழுத வேண்டும். தோப்புகளுக்காக கொடையளிக்கப்பட்ட நீண்டகால நிலக் குத்தகைகளை இப்பிரிவின்கீழ் பதிவு செய்யக் கூடாது.

(4—7—1977ஆம் நாளிட்ட அரசு ஆணை பல்வகை, எண். 1364, வருவாய்.)

[வ.வா. நிலை எண் 173 (எப்) நாள்: 5—2—1976.]

1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு XXVI ஆவது சட்டம், பிரிவு 19-A இன்கீழ் கொடையளிக்கப் பட்ட நிலங்களின் கிராமப் பதிவேடு :—

இது 1948ஆம் ஆண்டு தமிழ்நாடு XXVI ஆவது சட்டம், பிரிவு 19-இன் கீழ் கொடை யளிக்கப்பட்ட நிலங்களின் நிலைப் பதிவேடாகும். இது வட்டப் பதிவேடு எண். 13-Aவை ஒத்ததாகும். இச்சட்டத்தின் பிரிவு 19-Aன் கீழ் பிறப்பித்த ஆணைகளில் உள்ளபடி புலங்களின் விவரங்கள் எந்த வரையறைகளின்கீழ் அவை அளிக்கப்பட்டன மற்றும் இதர விவரங்களை எழுத வேண்டும். ரயத்துவாரி பட்டா அளித்ததற்கான ஆணைகள், அல்லது தரத்தீர்வை செலுத்துவதினால் மட்டுமே நிலத்தின் அனுபோகத்தை அதற்குரிய நபர்கள் தொடர்ந்து வைத்திருக்க அனுமதிக்கும் உத்தரவுகளை மட்டிலுமே இந்தக் கணக்கில் பதிவு செய்ய வேண்டும். XXVI ஆவது சட்டம், பிரிவு 19-A-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட இதர நிபந்தனைகளுடன் கூடிய ஆணைகளை, இந்தக் கணக்கிற்குக் கொண்டு வரக் கூடாது.

கிராமக் கணக்கு எண். 1

கிராமக் கணக்கு எண் 1 என்பது கிராமத்தின் மாதவாரி சாகுபடிக் கணக்கு ஆகும். இதி லிருந்து வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப் பப்படுகிற மாதாந்திரக் கணக்கு தயாரிக்கப்படு கிறது.

கீழ்க்கண்ட விதிகளின்படி சாகுபடி அடங்கல் கணக்கில் (கிராமக் கணக்கு எண் 2) உள்ள சாகுபடி விவரங்களை கிராமக்கணக்கு எண் 1 இல் பதிவு செய்யவேண்டும்.

கிராமக் கணக்கு எண் 1-ஐ ஒவ்வொரு மாதத் திற்கும் தனித் தனியாக எழுதி மாதத்தின் பெயரை ஒவ்வொரு மாதத்திற்கும் உள்ள பதிவு களில் மேலே தலைப்பில் குறிப்பிடவேண்டும். கிராமக் கணக்கு எண் 1-ஏ இல் கலம் (2)இல் கொடுக்கப்பட்டுள்ள பயிர்கள் வரிசையாக இதில் எழுதப்பட வேண்டும். அதாவது, கிராமத்தில் பயிர் செய்யப்பட்டுள்ளதாக கலம் (1)இல் பதிவு செய்யப்பட்டுள்ள பயிர்கள் மட்டுமே பதியப்பட வேண்டும். கீழ்க்கண்ட மாவட்டங்களில் பருத் திப் பயிரின் ஒவ்வொரு ரகத்தையும், அதாவது, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கம்போடியா, நாடம், உப்பம், போர்பன் ஆகிய வையும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கம்போ டியா, கருங்கண்ணி, உப்பம், நாடம், போர்பன் ஆகியவையும், மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி இனங்கள், கருங்கண்ணி, உப்பம் ரகங்கள் ஆகியவை ஒவ்வொன்றையும் தனித்தனி யாக தனிப் பயிர்களாக, இம்மாவட்டங்களில் வைத்துப் பராமரிக்கப்படும் சாகுபடி அடங்கல் கணக்குகளிலும் மற்றும் கிராமக் கணக்கு எண். 1-லும் பதிவு செய்யவேண்டும். கீழ்க்கண்டவை கள் இந்தக் கணக்கில் தனிப் பயிர்களாகப் பதிவு செய்யப்படவேண்டும்:—

(1) கோடை நிலக்கடலை, நீர்ப்பாய்ச்சப்பட் டது.

(2) கோடை நிலக்கடலை, நீர்ப் பாய்ச்சப்படா து.

(3) மாரிக்கால நிலக்கடலை, நீர்ப்பாய்ச்சப் ட்டது.

4) மாரிக்கால நிலக்கடலை, நீர்ப்பாய்ச்சப் ாதது.

5) கரும்பு, நடவு செய்த பயிர்.

(6) கரும்பு, கட்டைப் பயிர்.

(7) வர்ஜீனியா ரகம், புகையிலை.

(8) இதர வகைப் புகையிலை.

(9) ரஸ்டிகா வகைப் புகையிலை.

(10) மிளகாய்.

(11) இஞ்சி.

(12) வெங்காயம்.

நஞ்சை, புஞ்சை, புறம்போக்கு, இனாம் என்ற ஒவ்வொரு வகை நிலத்திலும் பயிரிடப்பட்ட வெவ் வேறு வகைப் பயிர்கள் தனித்தனி பிரிவுகளில் பதிவு செய்யவேண்டும். சாகுபடிக் கணக்கு அடங் கலிலிருந்து ஒவ்வொரு வகைப் பயிரின் கீழும், சாகுபடி செய்யப்பட்ட பரப்பினை எடுத்தெழுத வேண்டும். கலம் (3) மற்றும் (4)-ல் சாகுபடி செய்த மொத்த பரப்பினைக் காண்பிக்கவேண்டும். அதாவது, ஒவ்வொரு நில அளவை எண் மற்றும் உட்பிரிவு எண்ணில் ஒவ்வொரு பிரிவின்கீழும் நீர்ப் பாய்ச்சப்பட்ட அல்லது நீர்ப் பாய்ச்சப் படாத பரப்பினைக் காட்ட வேண்டும். கலங்கள் (5) மற்றும் (6), கலங்கள் (5) மற்றும் (4)இல் காண்பிக்கப்பட்டவற்றில் ஒவ்வொரு புலத்திலும் நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பையும், அத்துடன் முந்தைய மாதங்களில் நீர்ப்பாய்ச்சப்படாமல், நடப்பு மாதத்தில், நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு களையும் காட்ட வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதத்திலும் மற்றும் அந்த மாதம் முடிய வும் சாகுபடியான பரப்பினை ஒவ்வொரு வகைப் பயிரின்கீழும் பதிவு செய்யவேண்டும். ஜூன் மாதத்திற்கான கணக்கில் வடாற்காடு, தென் னாற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் கார் காலத்திலும் அல்லது இரண்டாவது தடவையாக பருத்தி எடுக்கும் காலத்திலும் பூமியில் உள்ள பருத்திப் பயிரின் பரப்பினையும் விளைச்சலின் மதிப்பையும் தனித் தனியாகப் பதிவு செய்யவேண்டும். மதுரை மாவட்டத்தில் பூமியில் உள்ள இஞ்சிப் பயிரினை யும் அதன் விளைச்சலின் மதிப்பையும் (சுக்கு அளவில்) ஆகஸ்டு, டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத் திற்கான கணக்குகளில் தனித்தனியே பதியவேண் டும். கணக்கின் அடியில், ஒவ்வொரு வகை நிலத் தின்கீழும், அனைத்துப் பயிர்களின் கீழும், அந்தந்த மாதத்திலும் அந்த மாத முடிவு வரை யிலும் பயிரிடப்பட்ட பரப்பின் கூட்டு மொத்தத் தையும், கிராமத்தில் சாகுபடி செய்யப்பட்ட மொத்த பரப்பி யும் காண்பிக்க வேண்டும்.

(6-6-1958 நாளிட்ட அரசாணை, பல்வகை, எண் 2082 வருவாய்.)

இந்தக் கணக்கில் கிராம நிர்வாக அலுவலர் தேதியும் கையொப்பமும் இட்டு ஒவ்வொரு மாத மும் 25 ஆம் தேதிக்கு முன்பு வருவாய் ஆய்வர் களுக்குத் தவறாது அனுப்ப வேண்டும். அவர், வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தான் அனுப்ப வேண்டிய சுருக்கத்தில் தேவையான பதிவுகளைச் செய்து கொண்டு கிராமக் கணக்கில் தேதியும் கையொப்பமும் இட்டு கிராம நிர்வாக அலுவல ருக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். புஞ்சை அல்லது நஞ்சைப் பயிர்கள் மழையை ஒட்டி சாகுபடியாகி உள்ளனவா என்பதைப் பார்க்க இந்தக் கணக்கை 20ஆம் எண் கிராமக் கணக்குடன் (பருவ நிலை அறிக்கை) ஒத்துப் பார்க்க வேண் டும். இந்தக் கணக்குகளில் வருவாய் ஆய்வர் சுருக்கொப்பமிடுவதோடு கணக்குகள் சரியாக இருக்கின்றன என்பதற்கும் பயிர்களின் நிலை, எதிர்பார்க்கும் விளைச்சல் ஆகியவற்றைக் குறித்து தேவையான மற்றும் பொருத்தமான குறிப்புகளை எழுத வேண்டும். வட்டாட்சியர் களும் அவர்கள் கிராமத்திற்கு வருகைதரும்போது அவ்வாறே செய்ய வேண்டும். கணக்குகள் சரி யாக இருப்பதற்கு கிராம நிர்வாக அலுவலரே முழுப் பொறுப்பாளியாவார். அவரது கையொப் பம் மட்டுமே அதில் இடப்பட வேண்டும். இந்த கணக்கை ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் முடிய எழுதிக் கொண்டுபோக வேண்டும். அதற்குப்

பிறகு விதைக்கப்பட்ட அல்லது சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் சாதாரணமாக, அடுத்த பசலியில் அறுவடை செய்யப்படும் ஆகையால் அவற்றை அடுத்த வருடக் கணக்கில் காட்ட வேண்டும். இருப்பினும் மார்ச் மாதத்திற்குப் பிறகு சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் அனைத்து மாகிலும் அல்லது சில பாகமாகிலும் ஜூன் மாதம் முடிவடைவதற்கு முன்பு அறுவடை யாகுமேயானால் அவ்வித சாகுபடியின் பரப் பினை ஜூன் மாதம் முடிய உள்ள சாகுபடிக் கணக்கிலிருந்து கழித்து முந்தைய மார்ச் மாதத்திய சாகுபடியுடன் சேர்த்து துணைக் கணக்குடன் அனுப்பவேண்டும்.

மார்ச் மாதக் கடைசிக்கு முன்பு நடப்பட்டு அல்லது விதைக்கப்பட்டு ஜூன் மாத இறுதியில் பூமியில் உள்ள பயிர்களின் பரப்பினை (கரும்பு, நிலக்கடலை முதலியவை) மார்ச் மாதம் முடிய உள்ள கணக்குகளிலிருந்து கழித்து அடுத்து வரும் ஜூலை மாதக் கணக்குகளில் சேர்க்கவேண்டும். இந்த மாதாந்திர கணக்குகள் எந்த பசலிக்குரி யதோஅந்த பசலி முடிந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு வட்டாட்சியர் அலுவலகத்தில் கடைசியாக ஒப்படைக்கப்பட வேண்டும்.

இராமக் கணக்கு எண் 1 க்கு A உள்ளடக்கம்.

இது சாகுபடி செய்யப்பட்ட வெவ்வேறு பயிர்களின் பரப்பையும் விளைச்சல் மதிப்பையும் பற்றிய சுருக்கமான விவரப்பட்டியல் ஆகும். இராமத்தில் சாகுபடியான முழுப் பரப்பும் அறுவடையாகும் வரையில் இந்தக் கணக்கில் கூறப்பட்ட சாகுபடி பரப்பில் அரசு, இனாம், புஞ்சை, நஞ்சை, புறம்போக்கு, முதல் போகம், இரண்டாம் போகம் மற்றும் மூன்றாம் போகம் ஆகியவைகளில் பரப்பு சேர்ந்திருக்க வேண்டும். இந்த கணக்கின் மொத்தங்கள் இராமக் கணக்கு எண். 1 இன் மொத்தங்களுக்கு ஒத்திருக்க வேண்டும். இந்தக் கணக்கின் கலம் (2) இராமக் கணக்கு எண். 1 இல் ஒவ்வொரு வகைப் பயிர்களுக்குக் கீழே காண்பிக்கப்பட்ட பரப்பினைக் காட்ட வேண்டும். இராமக் கணக்கு எண். 1ஐத் தயாரிப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளில் கூறப்பட்டுள்ள மாவட்டங்களில் பல்வேறு விதமான பருத்திப் பயிர்களில் நீர்ப்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பரப்பின் விவரங்களைத் தனித்தனியே கலம் (2) முதல் (10) வரையில் குறிக்க வேண்டும். (கரும்பு) நடவுப் பயிர், (கரும்பு) கட்டைப்பயிர், புகையிலை-வர்ஜீனியா வகைப் புகையிலை, இதர வகைப் புகையிலை, ரஸ்டிகா வகைப் புகையிலை இவற்றின் கீழ்ப் பயிரிடப்பட்ட பரப்புகளை கலம் (2) முதல் (9) வரையில் விவரமாகக் குறிக்க வேண்டும். இப்பத்தியின் கீழ்க் கண்ட இடங்களைப் பொறுத்த மட்டில், ஜனவரி முதல் மே முடியவுள்ள மாதங்களில் விதைக்கப்பட்டு நீர்ப்பாய்ச்சப்பட்ட நிலக்கடலைப் பயிர்கள் மற்றும் இதர வகைக் கடலைப் பயிர் விவரங்களைக் கலம் (2) முதல் (10) வரையில் குறிக்க வேண்டும். அடங்கல் (இராமக் கணக்கு என். 2) கணக்கில் செய்யப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் கலம் (3) முதல் (8) வரையிலான விவரங்கள் அமைய வேண்டும். இயல்பான (Normal) பயிர் 100 விழுக்காடு என்பதைக் காண்பிக்கும் வகையில் நினைவில் கொள்ள வேண்டும். கலம் (9) இல் மாத இறுதியில் உள்ள பயிரின் பரப்பினைக் குறிக்க வேண்டும். கலம் (10) இல் பூமியில் உள்ள பயிரின் நிலைமையை, நன்று, சாதாரணம், சுமார், அற்பம் அல்லது மோசம் என்று வகைப்படுத்த வேண்டும். கலம் (8) (9) ஆகியவற்றைக் கூட்டி வரும் மொத்த பரப்பு கலம் (2) இல் காண்பிக்கப்பட்ட பரப்பினை ஒத்திருக்க வேண்டும். ஜூன் மாதத்திற்கான கணக்கில் வடாற்காடு, தென்னாற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் கார் காலத்திலும் அல்லது இரண்டாவது தடவையாக பருத்தி எடுக்கும் காலத்திலும் பூமியில் உள்ள பருத்திப் பயிரின் பரப்பினையும் விளைச்சலின் மதிப்பையும் நூற்று விழுக்காடு வீதத்தில் தனித் தனியாக பதிவு செய்ய வேண்டும். மதுரை மாவட்டத்தில் பூமியில் உள்ள இஞ்சிப் பயிரினையும் அதன் விளைச்சல் மதிப்பினையும் நூற்று விழுக்காட்டில் (சுக்கு அளவில்) ஆகஸ்ட்டு, டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்திற்கான கணக்குகளில் தனித்தனியே பதிய வேண்டும். இந்தக் கணக்கை மாதா மாதம் தயாரித்து சாகுபடிக் கணக்குடன் வருவாய் ஆய்வாளரின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும். வருவாய் ஆய்வாளர், அவர் அந்த மாதத்தில் செய்த சொந்தக் கணிப்பிற்கிணங்க அவர் அவசியமாகக் கருதும் குறிப்புரைகளை அதில் குறிப்பிட வேண்டும்.

மாவட்டங்கள்.	வட்டங்கள்.
மதனனாதகாடு .. வடாற்காடு .. தஞ்சாவூர்	மாவட்டம் முழுமையும்
செங்கற்பட்டு ..	பொன்னேரி. திருவள்ளூர். செங்கல்பட்டு.
திருச்சிராப்பள்ளி ..	கரூர். உடையார்பாளையம். குளித்தலை.
மதுரை	திண்டுக்கல். பழனி பெரியகுளம். திருமங்கலம்.
இராமநாதபுரம் ..	திருவில்லிப்புத்தூர். அருப்புக்கோட்டை.

கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்ட மாவட்டங்களில் டிசம்பர் 31 ஆம் தேதியன்று தேயிலை மற்றும் இரப்பர் பயிர்களின் பரப்பினையும், ஜூன் 30 ஆம் தேதியன்று காப்பி பயிரின் பரப்பினையும் உரிய படிவங்களில் தேயிலை, காப்பி மற்றும் ரப்பருக்குத் தனித்தனியாக கணக்கினை இரட்டைப் படியில் தயாரிக்க வேண்டும். இந்தக் கணக்கு ஒவ்வொன்றுக்கும் உள்ள நகலை தேயிலை, ரப்பர் பயிர்களைப் பொறுத்தவரை ஜனவரி 25 ஆம் தேதியும், காப்பியை பொறுத்த வரை ஜூலை 25 ஆம் தேதியும் வருவாய் ஆய்வர் மூலமாக வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும். ஒவ்வொரு பயிருக்கும் தனித்தனி கணக்குகள் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு கணக்கின் அடியிலும் ஒவ்வொரு கலத்திற்குமான மொத்தத்தையும் குறிப்பிட வேண்டும்.

பயிர்.	எந்த மாவட்டங்களில் பயிர் முக்கியமானவையாக இருக்கிறது.
(1)	(2)
தேயிலை ..	கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி.
காப்பி ..	சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி.
ரப்பர் ..	சேலம், மற்றும் கன்னியாகுமரி.

[6–6–1958 நாளிட்ட அரசாணை, பல்வகை எண். 2082 (வருவாய்)]

ஜூன் முதல் அக்டோபர் வரை விதைக்கப்பட்ட சோளம், வரகு, கொர்ரா, சாமை முதலிய பயிர்களை "முன் பருவப்பயிர்கள் (காரிப்பயிர்கள்)" என்பதன் கீழும், நவம்பர் முதல் மே முடியவுள்ள காலத்தில் விதைக்கப்பட்ட பயிர்களை "பின் பருவப் பயிர்கள் (ராபிப்பயிர்கள்)" என்பதன் கீழும் பதிவு செய்ய வேண்டும். அவ்விதமே, உளுந்து, பயிறு, கொள்ளு, மொச்சை, மற்றும் இதர பயிறு வகைகளையும் முன் பருவப்பயிர், பின்பருவப்பயிர் என்ற பாகுபாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும். ஆனால், கம்பு, கேழ்வரகு மற்றும் மக்காச் சோளம் ஆகியவற்றை முன்பருவப்பயிர் அல்லது பின்பருவப்பயிர் என்பதன் கீழ் பாகுபாடு செய்யத்தேவையில்லை.

சாகுபடி அடங்கல் கணக்கு.

கணக்கு எண். 2 என்பது கைப்பற்று நிலத்தையும் சாகுபடி நிலத்தையும் புலவாரியாகக் காட்டுகிற வருடாந்திர விவர அறிக்கையாகும். இதில், பயிராய்வுக்கும், ஜமாபந்திக்கும் தேவைப்படுகிற அனைத்து விவரங்களும், தீர்வை விதிக்கக்கூடிய அல்லது கூடாததுமான கிணற்று இறவைப் புஞ்சை சாகுபடி உட்பட எல்லா இரண்டாம் போக சாகுபடியும் அடங்கியுள்ளது. பசலியின் துவக்கத்தில் இருந்து இதனைத் தயாரிக்க வேண்டும். இக் கணக்கினை பசலி துவக்கத்திலேயே எழுதிவிட வேண்டும். இதனை உபயோகிக்கத் தொடங்கு முன், பக்கங்கள் என் இட்டு, அதற்கு வருவாய் ஆய்வாளர் சான்றுடன், வட்டாட்சியர் முத்திரையை ஒவ்வொரு பக்கத்திலும் பெற வேண்டும். இவ்விதம் முத்திரை பெறப்பட்டுள்ளதா எனக் கண்காணிப்பது வருவாய் ஆய்வாளர்களது பொறுப்பாகும். மேலும், அடங்கலின் தொடக்கத்தில் ஒரு சில பக்கங்கள் வெற்றிடமாக விட்டு வைக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் பயிர் சோதனை, மற்றும் ஏனைய அலுவலுக்காக வரும் வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர், மற்றும் அதிகாரிகள், தணிக்கை தினத்தன்று, கிராமத்தில் உள்ள பயிர்நிலை, பொது உடல் நலம் மற்றும் அவசியமான குறிப்புகள் எழுதுவதற்கு அப்பக்கங்கள் பயன்படும். கணக்குகளில், புலங்கள், அடியிற் கண்ட வகுப்புகளிலும், பிரிவுகளிலும் முறையே நில அளவை எண்கள், மற்றும் உட்பிரிவுகள் வரிசையாய் பதிய வேண்டும். ஆனால், நஞ்சையின் கீழ்ப் பதியப்படும் புலங்களில் பதிவு செய்யப்பட்ட இரு போக நிலங்களையும் இணக்கம் செய்யப்பட்ட இரு போக நிலங்களையும் முதலில் தனியாக பதிவு செய்துவிட்டு அவற்றின் கீழ் ஒரு போக நிலங்களைப் பதிவு செய்ய வேண்டும் :—

அரசு—

(அ) நஞ்சை.

(ஆ) புஞ்சை.

(இ) புறம்போக்கு.

இனாம்—

(அ) நஞ்சை.

(ஆ) புஞ்சை.

நஞ்சை புலங்கள் எந்த நீர்ப்பாய்ச்சல் ஆதாரத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனவோ அவற்றின் கீழ் அவைகள் மேலும், தொகுதிகளாக்கப்பட வேண்டும். எந்த வருடத்திலாவது உண்மையில் நீர்ப்பாய்ச்சப்பட்ட பாய்ச்சல் ஆதாரம் பதிவு செய்யப்பட்ட நீர்ப்பாய்ச்சல் ஆதாரமின்றி வேறொன்றாக இருப்பின், புலத்தின் முழு பரப்பு அவ்வாறு பாய்ந்திருந்தால் அவ்விவரத்தைக் குறிப்புரைக் கலத்தில் அப்புலத்திற்கு எதிரே குறிப்பிட வேண்டும். ஆனால், ஒரு புலத்தின் சில பாகம் மட்டுமே அவ்வாறு பாய்ச்சப்பட்டால் அந்த பாகத்தை மட்டும் ஒரு தனி வரியில் எழுதி அதற்கு நேராக தேவையான குறிப்புகளை எழுத வேண்டும். மற்ற பாய்ச்சலுடன் கிணற்றுப் பாய்ச்சலும் சேரும்போது குறிப்புகள் எழுதுவதில் அப்படிப்பட்ட கிணறுகள் இருக்கக் கூடிய புலங்களின் நில அளவை எண் (மற்றும் உட்பிரிவு ஏதேனும் இருந்தால்) ஆகியவற்றைக் குறிப்பிட்டு வைக்க வேண்டும். தனி நஞ்சை ஆயக்கட்டுடைய கிணற்றுப் பாசனங்களையும் நஞ்சையின் கீழ் மற்ற பாய்ச்சலாதாரங்களையும் பதிவு செய்த பிறகு, தனியாகப் பதிவு செய்ய வேண்டும். மற்ற அனைத்து நஞ்சை, புஞ்சை அல்லது புறம்போக்கிலுள்ள அனைத்துக் கிணறுகளையும் அவை இருக்கக் கூடிய நிலங்களுக்கு குறிப்புரைக் கலத்தில் குறிப்பிட வேண்டும். பெரியார், கல்லணைக் கால்வாய், கீழ் பவானி, பரம்பிக்குளம் ஆழியார் பாயும் கிராமங்களைப் போன்ற குறிப்பிட்ட இடங்களில் அனைத்துப் புலங்கள் புஞ்சையாகக் கணக்குகளில் பாகுபாடு செய்திருந்த போதிலும், ஒவ்வொரு வருடமும் அரசு நீர்ப்பாய்ச்சல் ஆதாரத்திலின்று தண்ணீர் பாய்ச்சப்பட்டு நஞ்சைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. அதைப் போன்ற புஞ்சைப் புலங்களிலும் அவற்றுக்குப் பாயும் பாய்ச்சல் ஆதாரத்திற்குத் தகுந்தவாறு அவற்றின் கீழ் பிரித்தெழுத வேண்டும். நில அளவை செய்யப்படாத அல்லது நீர்வை விதிக்கப்படாத பரப்புகள் உள்ள கிராமங்களில் அவற்றை "I அரசு" என்ற தலைப்பின் கீழ் அடியில் கண்டவாறு புறம்போக்கு பரப்பிற்கு முன்னதாக ஒரு தனி உட்பிரிவாக எடுத்துக்கொள்ள வேண்டும்:—

(இ) (i) காடு.

(ii) இதர புறம்போக்குகள்.

தமிழ்நாடு அரசினால் இராணுவ நிலங்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட நிலங்கள் உள்ள கிராமங்களில், புறம்போக்கு நிலங்களுக்குப் பிறகு "இராணுவ நிலங்கள்" என்ற தலைப்பின் கீழ் ஒரு தனிப் பிரிவில் அந்த நிலங்களை அவைகளின் பரப்புகளுடன் பதிவு செய்யப்பட வேண்டும். அதைப் போன்ற ஒவ்வொரு நிலத்தின் தன்மை, விவரம் ஆகியவற்றை (எ-டு. துப்பாக்கி சுடும் பயிற்சிக் களம், படைப்பாளையம், முகாம் இடம், அணி வகுப்புக் களம் முதலியன) குறிப்புரைக் கலத்தில் குறிக்க வேண்டும்.

இந்த கணக்கில், ஒவ்வொரு உள் எண்ணும் தனிப் புலன்களாகக் கருதப்படும். புலங்களில் வெவ்வேறு பயிர்கள் சாகுபடியாகும் பாகங்களைத் தனிவரிகளில் பதிவு செய்யும் பொருட்டு, ஒவ்வொரு புலனுக்கும் வரிகளுக்கிடையில் போதுமான இடம் விட வேண்டும். ஆனால் நகர நில அளவைத் திட்டத்தின்படி நில அளவை செய்யப்பட்ட நகராட்சியிலுள்ள கிராமத்திலோ அல்லது அதன் பாகத்திலோ, தனியார் கைப்பற்றில் நத்தம் புறம்போக்காக உள்ள நகர நில அளவை எண்கள் தனித்தனி புலன்களாகக் காண்பிக்கப்பட வேண்டியதில்லை. "இதர புறம்போக்குகள்" என்ற பிரிவின் அடியில் மொத்த பரப்புடன் "தனியார் கைப்பற்றிலுள்ள நத்தம் புறம்போக்கு" என்றொரு பதிவு செய்தல் போதுமானது. அதைப் போன்ற புலம் அல்லது புலத்தின் பாகம் கைப்பற்று செய்யப்பட்டால் அல்லது வேறு எந்த வகைக்கு மாற்றப்பட்டாலும் கைப்பற்றப்பட்ட அல்லது மாற்றப்பட்ட பரப்பினை அடுத்த வருட அடங்கல் கணக்கு எழுதும்போது மொத்த பரப்பிலிருந்து கழித்துவிட வேண்டும். கைப்பற்றப்பட்ட அல்லது மாற்றப்பட்ட புலத்தின் பாகம் அல்லது புலத்தினை அடங்கலின் உரிய பிரிவுகளின் கீழ் தனித்தனியே காண்பிக்கவேண்டும். வீட்டுமனைகள்

நில எடுப்பு செய்யப்பட்டு அட்டவணையில் கண்ட வகுப்பினருக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ள கிராமங்களில், கொடைகளுக்குட்பட்ட நிலங்கள், ''இதர புறம்போக்குகள்'' என்ற தலைப்பின் கீழ் தனி உட்பிரிவில் பதிவு செய்யப்படவேண்டும். இந்த கணக்கின் கலம் (2)—ல் மனைப்பிரிவு வரைப் படத்தில் உள்ளவாறு மனை எண்ணைக் குறிக்க வேண்டும். (6) ஆவது கலத்தில் மனைக் கொடை பெற்றவரது பெயரையும் குறிக்க வேண்டும். பயிராய்வு அலுவலர்.-கொடையின் எந்த நிபந்தனைகளாவது மீறப்பட்டுள்ளதா என்பதற்காக அம்மனைகளை ஆய்வு செய்யவேண்டும்.

முதல் ஐந்து கலங்களும் முந்தைய வருடத்து பதிவுகளிலிருந்து நிரப்பப்படவேண்டும். நிலவரித் திட்ட பதிவேட்டிலும், கிராமக்கணக்கு எண். 3-லும் ஆணையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள உரிமை விடல், மாறுதல்களையும் சம்பந்தப்பட்ட கலங்களில் பதிவு செய்ய வேண்டும். 6-வது கலத்தில் பதிவு செய்யப்பட்ட பட்டாதாரர் அல்லது இனாம் தாரர் அனுமதியின்றியோ அல்லது அனுமதியுடன் அனுபவித்து வரும் நபரின் பெயரையும் பதிவு செய்ய வேண்டும். அரசால் ஏலம் எடுக்கப்பட்ட நிலமாயிருந்தால் அவ்விவரத்தை இக்கலத்தில் பதிவு செய்ய வேண்டும். வாரிசு அற்று அரசினரைச் சேரும் நிலத்தின் மீது இறுதி முடிவு எடுக்கும் வரையில் கலம் (6) இல், ''தமிழ்நாடு அரசு (அரசு உறுபொருள்)'' என்ற வார்த்தைகளை எழுதவேண்டும்.

பட்டாவில் பதிவாகாமல் அனுபோகத்திலுள்ள நிலம் சாகுபடி செய்யப்பட்டால் அந்த ஆக்கிரமிப்பு அனுமதியின் பேரினால் ஆனாலும், இல்லாவிட்டாலும், அனுபோகம் செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு, பயிர், அனுபோகதாரர் பெயர் ஆகிய முழு விவரங்களையும் கலங்கள் (6), (7) முதல் (16) வரை குறிக்க வேண்டும். சாகுபடிதவிர இதரவிதமான ஆக்கிரமிப்புக்களை கலம் (17)—ல் குறிக்க வேண்டும்.

கலம் (4)—ல் உள்ள பதிவுகளில், புஞ்சை நிலங்களுக்கு அல்லது நீர்ப்பாய்ச்சப்பட்ட புஞ்சைப் பயிர்களுக்கு விதிக்கப்பட்ட தண்ணீர்த் தீர்வையும், இரண்டாம் போகத்திற்கான தண்ணீர்த் தீர்வையும் சேரமாட்டா. மேற்கண்ட தீர்வைகள் தண்ணீர் வரிக்காக ஏற்பட்டுள்ள (6)—வது எண் கணக்கில் சேரும். ஆனால், இரண்டாம் போகத்திற்குரிய தீர்வை இணக்கம் செய்யப்பட்டிருந்தால் அந்த தீர்வையும் இக்கலத்தில் குறிக்க வேண்டும். இனாம் நிலங்களைப் பொறுத்த வரையில், இனாம் நிலவரித்திட்ட ஏற்பாட்டின்போது விதிக்கப்பட்ட தீர்வையைக் கலம் (4)-லும், மற்றும் இனாம் விவரங்களைக் கலம் (5)-லும் காண்பிக்க வேண்டும். இனாம் உரிமைப்பட்டயத்தில் கண்டுள்ள (நஞ்சை ஒரு போகம், இருபோகம் அல்லது புஞ்சை என்ற) விவரங்கள் நிலவரித் திட்டத்தின்படி உள்ள விவரங்களுடன் வேறுபட்டால் நிலவரித் திட்டத்தின் படிக்குள்ள தீர்வை மட்டும் (4) வது கலத்தில் பதிவு செய்து (5) ஆவது கலத்தில் நிலவரித்திட்ட விவரங்கள் இனாம் விவரங்கள் ஆகிய இரண்டையும் பதிவு செய்து, மாற்றம் தெரிவதற்காக, முறையே ''நி'' 'இ' என்னும் எழுத்துக்களை முன்னால் சேர்க்க வேண்டும். (7) முதல் (16) முடியவுள்ள கலங்களைக் கீழே குறிப்பிட்டுள்ளவாறு நிரப்ப வேண்டும்.

கிராம நிர்வாக அலுவலர், மாதத்தின் பிற் பாதியில் புலங்களுக்குச் சென்று அவைகளை ஆய்வு செய்தபின்பு அந்த மாதத்தில் உண்மையில் சாகுபடி ஏதும் செய்யப்பட்டிருந்தால் அதனை அடங்கல் கணக்கில் சம்பந்தப்பட்ட புல எண்களுக்கு எதிரே பதிவு செய்யவேண்டும். பதிவுகள் பென்சிலால் செய்திருந்தால் அன்றைய தினமே அவைகளை மசியினால் எழுத வேண்டும். அந்த கணக்கில் கீழ்க்காணும் பயிர்கள் தனிப்பயிர்களாக பதிவு செய்யப்படவேண்டும் :—

(1) கோடை நிலக்கடலை, நீர்ப் பாய்ச்சப் பட்டது.

(2) கோடை நிலக்கடலை, நீர்ப் பாய்ச்சப் படாதது.

(3) மாரிக்கால நிலக்கடலை, நீர்ப் பாய்ச்சப் பட்டது.

(4) மாரிக்கால நிலக்கடலை, நீர்ப் பாய்ச்சப் படாதது.

(5) கரும்பு, நடவு செய்த பயிர்.

(6) கரும்பு, கட்டைப் பயிர்.

(7) புகையிலை—ரஸ்டிகா வகைகள்.

(8) புகையிலை-வர்ஜீனியா வகைகள் (செயற்கை முறை வெப்பத்தில் பதப்படுத்தியது).

(9) புகையிலை-தேசி வகைகள் (சூரிய வெப்பத்தில் பதப்படுத்தியது).

ஒரே மாதத்தில் ஒரே நில அளவை எண்ணில் பல்வேறு பாகங்களில் பல்வேறு விதமான பயிர் வகைகள் சாகுபடி செய்யப்பட்டிருந்தாலும் அல்லது பல்வேறு பாய்ச்சல். ஆதாரங்களினால் நீர்ப்பாய்ச்சப்பட்டிருந்தாலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்கள் வரிசையாக விதைக்கப்பட்டிருந்தால், அதாவது, ஒவ்வொரு பயிரும் தனித்தனியாக விதைக்கப் பட்டிருந்தால், ஒவ்வொரு பகுதியும் தனித்தனி வரிகளில் எழுதப்படவேண்டும். அல்லது விதைகள் கலந்து விதைக்கப்பட்டிருந்தால், ஒவ்வொன்றிலும் விதைக்கப்பட்ட பரப்பினை கிராம நிர்வாக அலுவலர் மதிப்பிட வேண்டும். ஒரு குறிப்பிட்ட புலத்தில் விதைக் கலவையினைக் கொண்டு சாகுபடி செய்யப்பட்டால், கலவையில் உள்ள ஒவ்வொரு பயிர் வகையும் எவ்வளவு பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது என்று மதிப்பிட்டு பதிவு செய்வதுடன், கலவைப் பயிர்களின் மொத்த பரப்பினையும் பதிவு செய்ய வேண்டும். கலவைப் பயிர்களின் விவரங்களை (பயிர்களின் பெயர், சாகுபடி செய்யப்பட்ட பரப்பு) தற்போதுள்ள கலங்கள் (8), (9), (13) மற்றும் (14)-ல் பதிவு செய்ய வேண்டும். கலப்புப் பயிருக்கான (கலப்புப் பயிரினுடைய வகையினைக் குறிப்பிட்டு) மொத்த பரப்பினை முதலிலும், அதற்குக் கீழே கலப்புப் பயிரிலுள்ள ஒவ்வொரு பயிர்வகையின் பெயரையும் அதற்கு நேராக அதன் கீழுள்ள நிகர பரப்பினையும் எழுத வேண்டும். இந்த நடைமுறைக்கான ஒரு சிறு விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, ஒரு கிராமத்தில் 40 ஏர் அளவுள்ள நில அளவை உட்பிரிவு எண் 15/2-ல் சோளம், நிலக்கடலை, போன்ற கலப்புப் பயிரினை சாகுபடி செய்தால் பதிவு செய்யப்படும் பரப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும்

கலம் 1	கலம் 8	கலம் 9
நில அளவை/ உட்பிரிவு எண்.	பயிர்களின் பெயர்.	சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (ஹெக் டேருக்கு)
15/2	சோளம் மற்றும் நிலக்கடலை	40 ஏர்கள்
	சோளம்	16 ஏர்கள்
	நிலக்கடலை	24 ஏர்கள்

முன்பே சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிரினூடே நிலக்கடலை போன்ற இரண்டாம் போகப்பயிர் விதைக்கப்பட்டு அது அந்த நிலத்திலுள்ள முதல் போகப் பயிர் அறுவடை செய்யப்பட்ட பின்பும் நெடுநாள் இருப்பின், அதே புலத்தில் பயிரிடப்பட்ட இரண்டாம் போகப் பயிராகவே கருதப்பட வேண்டும். இடைப்பயிர்களுடன் கூடிய பழத்தோட்டப் பரப்பினை பழமரங்கள் மற்றும் ஊடு பயிர் ஆகிய இரண்டின் கீழ் பதிவு செய்ய வேண்டும். அதாவது, ஒரு தடவைக்கு மேல் விதைக்கப்பட்ட பரப்பாகவே கருத வேண்டும். ஏனெனில், ஊடுபயிர்களுக்கான விதைத்தல், உழுதல், கரை கட்டுதல், தண்ணீர் பாய்ச்சுதல் போன்ற விவசாய சம்பந்தமான காரியங்கள் அநேகமாக பழப் பயிர் போன்றே தனியாக செய்ய வேண்டியுள்ளது. மேலும், பழப்பயிர்கள் மற்றும் ஊடுபயிர்களுக்கான இந்த காரியங்கள் பெரும் பாலும் பழத் தோட்டம் ஏற்படுத்தப்பட்ட முதல் வருடத்திலிருந்து ஒன்றுக்கொன்று தனித் தன்மையுடையதாக இருப்பதால் பழமரங் கள் மற்றும் ஊடுபயிர் ஆகிய இரண்டின் பரப் பினைப் பதிவு செய்வதனை பழத்தோட்டம் ஏற் படுத்திய ஆண்டு முதற் கொண்டே பின்பற்றப் பட வேண்டும்.

எந்த புலங்களாவது ஒரு மாதத்தில் சாகுபடி செய்யப்பட்டு அதற்கடுத்த மாதத்தில் நீர்ப் பாய்ச்சப்பட்டிருந்தால் அதுபோன்ற புலங்களுக் கெதிரே (17) ஆவது கலத்தில் நீர்ப்பாய்ச்சப் பட்ட விவரம், அது முன்பு பதிவு செய்யப்பட் டுள்ள பரப்புக் குறைவாக இருந்தால், நீர்ப்பாய்ச் சப்பட்ட பரப்பு, மாதம், மற்றும் "இறவை" அல்லது "பாய்ச்சல்" என்ற விவரங்களுடன் நீர்ப்பாய்ச்சல் ஆதாரம் ஆகியவற்றைத் தெளி வாகக் குறிப்பிட வேண்டும். மார்ச் மாதத்திற் குப் பிறகு சாகுபடி செய்யப்பட்டாலும் இல்லா விட்டாலும் ஜூன் மாத இறுதிக்கு முன்பு சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் அறுவடை செய்யப்பட லாமென்றிருந்தாலும் அல்லாவிட்டாலும், சாகு படி முழுவதும் அது எந்த மாதத்தில் செய்யப் படுகிறதோ அந்த மாதத்தில் மிகவும் கவனமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். கிராம நிர்வாக அலுவலர் ஒவ்வொரு புலத்தையும் அளக்கத் தேவையில்லை என்பதனை இங்கே விளக்கலாம். ஒரு முழு புல எண், அல்லது அதிலுள்ள ஒரு பதிவு செய்யப்பட்ட உட்பிரிவு எண்ணில் சாகுபடி செய் யப்பட்டால் இதனுடைய பரப்பினை நிலவரித் திட்ட பதிவேட்டின்படி பதிவு செய்ய வேண்டும். தண்ணீர்த் தீர்வை விதிக்கத் தேவையில்லாத இனங்களில் ஒரு நில அளவைப் புல எண்ணின் பாகம் அல்லது பதிவு செய்யப்பட்ட உட்பிரிவு எண்ணின் பாகம் சாகுபடி செய்யப்பட்டிருந்தால் பதிவு செய்ய வேண்டிய பரப்பினை மதிப்பீடு செய்தால் போதுமானது. ஆனால், தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட வேண்டிய அளைத்து புலப் பகுதி சாகுபடியினை அளந்து பதிவு செய்ய வேண் டும். ஒரு பசலியில் முதன் முதலாக சாகுபடி செய்யப்பட்ட அனைத்து நிலங்களையும் முதல் போகம் என்றும், இரண்டாம் தடவையாக சாகு படி செய்யப்பட்ட நிலத்தை இரண்டாம் போகம் என்றும் மூன்றாவது தடவையாக சாகுபடி செய் யப்பட்ட நிலத்தை மூன்றாம் போகம் என்றும் எழுத வேண்டும். மூன்றாம் போகம் அரிதாக இருப்பதால் அதற்காக தனியே கலம் ஏதும் ஒதுக்கப்படவில்லை. தேவைப்படும்பொழுது, கூடுதலாக ஒருகலம் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

குறிப்பு.—ஒரு தடவைக்கு மேல் விதைக்கப் பட்ட பரப்பு என்று பழத் தோட்டங்களில் ஊடு பயிர்களாக பருவகாலப் பயிர்ப் பரப்பின்கீழ் பதிவு செய்யும்பொழுது பழத் தோட்டத்திலுள்ள பழமரங்கள் உள்ள பரப்பினை விலக்கிவிட்டு, உண்மையில் புலப் பயிர்களாக (ஊடுபயிர்களாக) சாகுபடி செய்யப்பட்ட பரப்பினை மட்டும் ஒரு தடவைக்கு மேல் விதைக்கப்பட்ட பரப்பு என்று பதிவு செய்ய வேண்டும்.

(20—6—1980 நாளிட்ட அரசாணை, பல்வகை, எண். 1553, வருவாய்.)

[வ.வா. நிலை எண். 104 (எப்), நாள் : 28—2—1980.)]

(19—5—1981 நாளிட்ட அரசு கடித எண். 125438/டி1/80-72.)

(28—5—1981 நாளிட்ட அரசாணை, பல்வகை, எண். 1256, வருவாய்.)

சில மாவட்டங்களில் இரண்டாம் போகத்தைப் போல முதல் போகம் அவ்வளவு முக்கியமற்றதாக இருக்கலாம். ஆனால், இது முதல்போகம், இரண் டாம் போகம் என்ற பாகுபாடு செய்வதில் மாற்றம் ஏதும் இருப்பதற்கில்லை. இரண்டாவது தட வையாக சாகுபடி செய்யப்படும் நிலமானது அதி லுள்ள பயிர், தீர்வை விதிப்பதற்குட்பட்டதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பதிவு செய்யப் படவேண்டும். உதாரணமாக, அரசு நீர்ப்பாய்ச்சல் ஆதாரத்தின் உதவியின்றி புஞ்சையில் பயி ரிடப்பட்ட இரண்டாம் போகப் பயிர், தீர்வை விதிப்பதற்குள்ளாகாமல் இருந்தாலும் அதை சாகு படியில் காண்பிக்க வேண்டும். கிராம நிர்வாக அலுவலர் அவருடைய மாதாந்திர ஆய்வின் போது, அவரது முந்தைய ஆய்விற்குப் பின்பு, எத்தெந்த புலங்கள் அறுவடையாகி உள்ளன என்பதையும் மகசூல் மதிப்புடன் அறுவடையான மாதத்தையும் கலங்கள் (10), (11) அல்லது (15) மற்றும் (16) இல் உள்ளவைக்குத் தகுந்தாற் போல்பதிவு செய்வார்.—இயல்பான பயிர் Normal crop 100 விழுக்காடு என்று கொண்டு மகசூல் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். தோப்புகள், தென்னை மரங்கள் முதலியவை போன்ற நிரந்தர பயிர்கள் உள்ள நிலங்கள் பசலியின் முதல் மாதத் தில் அதாவது ஜூலை மாதத்தில் சாகுபடியின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும்.

கீழ்க்கண்ட நிலங்களும் ஜூலை மாதத்திய சாகுபடியின்கீழ் உள்ளவைகளாகக் காண்பிக்கப்பட வேண்டும் :—

(அ) மார்ச் மாதத்திற்கு முன்பு நடப்பட்டு அல்லது விதைக்கப்பட்டு ஜூன் மாத இறுதியில் பூமியில் உள்ள பயிர்கள் (கரும்பு, நிலக்கடலை முதலியவை) உள்ள நிலங்கள்.

(ஆ) ஜூன் மாத இறுதியில் அல்லது இரண்டாவது முறையாக பருத்தி எடுக்கும் காலத்தில் பூமியில் உள்ள பருத்திப் பயிர்கள் உள்ள நிலங்கள்.

" சாவி, குறைந்த விளைச்சல், உரிமை விட்டு விடல், மாற்றங்கள் முதலியவை போன்ற ஆய்வு அலுவலரின் கவனத்தை ஈர்ப்பதற்குத் தேவையான விவரங்களைக் கலம் (17) இல் கிராம நிர்வாக அலுவலர் குறிக்க வேண்டும். I ஆவது, II ஆவது வகுப்பு கட்டுமானங்களைப் பொறுத்த வரையில் நஞ்சையில் முதல் போகத்திற்கு இறவை மூலம் நீர்ப்பாச்சப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட பரப்பினை, ஒவ்வொரு நீர்ப்பாய்ச்சல் ஆதாரத்தின் பரப்பின் மொத்தத்தை கூட்டி 8ஏ-கணக்கில் பதிவு செய்யும் பொருட்டு குறிப்புரை கலத்தில் " இறவை " என்று எழுத வேண்டும். நீண்டகால குத்தகைகள், நீண்டகால நிலக்குத்தகைகள் (Cowles), நிபந்தனைக்குட்பட்ட கொடைகளின் கீழ் உள்ள நிலங்கள் சம்பந்தமான குத்தகைக்காலம் மற்றும் குத்தகைத் தொகை மற்றும் கொடை நிபந்தனைகள் ஆகிய விவரங்களை இந்தக் கலத்தில் குறிக்க வேண்டும். ஒப்படை செய்வதற்குத் தடையாக உள்ளவை என்ற காரணத்தினால் வருவாய் நிலை ஆணையின்கீழ் ஆணையிடப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட கீழ்க்கண்ட விவரப்படி உள்ள அனைத்து நிலங்களுக்கும் எதிரில், " ஒதுக்கி வைக்கப்பட்டவை " என்ற பதத்தை (17) ஆவது கலத்தில் (குறிப்புரைக் கலத்தில்) குறிக்க வேண்டும் :—

(அ) தீர்வை விதிக்கப்பட்டிருந்தாலும், அரசு, கிராமம் அல்லது இதர சிறப்பு காரியங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட நிலங்கள் ;

(ஆ) வனச்சட்டம் 26 ஆவது பிரிவின் கீழ் இயற்றப்பட்ட விதிகளில் 5 ஆவது விதியின்கீழ் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலம் ;

(இ) நுறைமுக எல்லைக்குள் உள்ள நிலம்; மற்றும்.

(ஈ) இருப்புப்பாதை நிலைய எல்லையிலிருந்து 0.8 கிலோ மீட்டர் தூரத்திற்கு உட்பட்டு உள்ள தீர்வைவிதிக்கப்பட்டதரிசுநிலங்கள் மற்றும் உரிமை விட்டுவிடுவதாலும், வாரிசு அற்று அரசினரைச் சேருதல் போன்றவைகளாலும் அரசின் வசமுள்ள அல்லது அரசைச் சேரவேண்டிய கிராம நத்தம் உட்பட அனைத்து நிலங்கள், ஆகியவை. இவ்வகுப்பு நிலங்களும் கூட முறைப்படி புறம்போக்காக மாற்றப்பட வேண்டும்.

பணியிலிருக்கும் யாதொரு படைவீரருக்குச் சொந்தமானநிலம், அது அவருக்குமட்டுமே சொந்தமாயிருந்தாலும், அல்லது கூட்டாகச் சொந்தமாக இருந்தாலும், யுத்தத்தில் பணி புரிந்தமைக்காக அது அவருக்கு ஒப்படை செய்யப்பட்டிருந்தாலும் அல்லது அது அவரது பரம்பரை பாத்தியதை மூலமாகக் கிடைத்திருந்தாலும், அல்லது விற்பனை மூலமாகவோ தானமாகவோ அல்லது வேறுவிதமாகவோ அது அவருக்குக் கிடைத்திருந்தாலும், கிராம நிர்வாக அலுவலர்கள் நடைமுறை நூலில் அத்தியாயம் 4 பத்தி 32 இன் கீழ் உள்ள குறிப்பின் படியும், வருவாய் நிலை ஆணை எண். 41—8 இன் கீழுள்ள குறிப்பு (2) இன் படியும் உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இந்த தகவலைக் கிராம நிர்வாக அலுவலர் அனைத்து இனங்களிலும் இதனைக் குறிப்பிட வேண்டும்.

உள்ளாட்சி நிறுவனங்களில் ஒப்படைக்கப்பட்ட அல்லது அவைகளுக்கு அல்லது தனிப்பட்டவர்களுக்கு அல்லது தனிப்பட்ட நிறுவனங்களுக்குத் தீர்வையில்லாமல் குறிப்பிட்ட காரியங்களுக்காக உரிமை மாற்றம் செய்யப்பட்ட அரசு நிலங்களைப் " புறம்போக்கு " என்று பதிவு செய்யவேண்டும் குறிப்புரைகலத்தில் அவற்றின் விவரத்தை, அதாவது, சாலைகள், குளங்கள், சத்திரம், பள்ளி போன்ற விவரத்தை (17)ஆவது கலத்தில் குறிப்பிட வேண்டும். தீர்வையில்லாமல் உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களைப் பொறுத்த மட்டில், உள்ளாட்சி நிறுவனங்கள், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனங்களின் பெயரில் (6) ஆவது கலத்தில் குறிக்க வேண்டும். (17 ஆவது) கலத்தில் கீழ்க்கண்டவாறும் எழுத வேண்டும்.

"(ஆணை எண்.....நாள்.....) இல் தீர்வையில்லாமல் (.....) காரியத்திற்காக (உள்ளாட்சி நிறுவனம், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனத்தின் பெயர்)க்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது."

உள்ளாட்சி நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள், அல்லது தனிப்பட்ட நிறுவனங்களுக்குத் குறிப்பிட்ட காரியங்களுக்குக்காகத் தீர்வை செலுத்துவதன் பேரில் உரிமை மாற்றம் செய்யப்பட்ட அரசு நிலங்கள், உள்ளாட்சி நிறுவனம், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்படவேண்டும். (17) ஆவது கலத்தில் கீழ்க்கண்டவாறு எழுதப்படவேண்டும்.

"(ஆணை எண் ....நாள்.....) இல் தீர்வை செலுத்துவதற்குட்பட்டு (.....) காரியத்திற்மாக உள்ளாட்சி நிறுவனம், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது."

நில எடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ளாட்சி நிறுவனங்கள் தனிப்பட்டவர்கள் அல்லது தனிப்பட்ட நிறுவனங்கள் சார்பில் கைப்பற்றப்பட்ட நிலங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களால் தனிப்பட வாங்கி கைப்பற்றப்பட்ட நிலங்கள் ஆகியவை உள்ளாட்சி நிறுவனம் தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும். நில எடுப்புச் சட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட நிலங்களைப் பொறுத்த மட்டில், கலம் (17)இல் கீழ்க்கண்டவாறு பதிய வேண்டும்.

(தீர்ப்பாணை எண்.....நாள்.....)இல் (.....) காரியத்திற்காக உள்ளாட்சி நிறுவனம், தனிப்பட்டவர் அல்லது தனிப்பட்ட நிறுவனத்தின் சார்பில் கைப்பற்றப்பட்டது. இததகைய நிலங்களுக்கு நிலவரி நீக்கம் செய்யப்பட்டிருந்தால் கீழ்க்கண்டவாறு கூடுதல் பதிவினை கலம் (17)இல் எழுதவேண்டும் :—

"(ஆணை எண்.....நாள்.....)இல் நிலவரி நீக்கம் செய்யப்பட்டது".

பொதுக்காரியங்களுக்காக உள்ளாட்சி நிறுவனங்களால் கைப்பற்றப்பட்ட தனியார் வீட்டுமனைகள் புறம்போக்கு நிலமாகப் பதிவு செய்யப்பட்டு குறிப்புரைகளத்தில் அவற்றின் விளக்கம் அதாவது, சாலைகள், தெருக்கள், பள்ளிகள் முதலியன குறிக்கப்படவேண்டும். குறிப்புரைக் களத்தில் (நீர்ப்பாணை என்.....நாள்..... இல் .....காரியத்திற்காக ..... உள்ளாட்சி நிறுவனத்தினால் கைப்பற்றப்பட்டது) என்ற பதிவும் செய்யப்படவேண்டும்.

கைப்பற்றில் உள்ள நிலங்களில் சென்ற ஆண்டு அதிக நீர்வை (பசலி ஜாஸ்தி), தண்ணீர் நீர்வை (நீர்வ ஜாஸ்தி) விதிக்குட்பட்டு நடப்பு ஆண்டில் மேற்கண்ட நீர்வைகளுக்கு உள்ளாகாத இனங்களை கலம் 17-ல் முறையே ப.க. (பசலி கம்மி), நீ.க. (நீர்வைகம்மி) என்ற விவரங்கள் குறிக்கப்பட வேண்டும். அதேபோல் புறம்போக்கு மற்றும் அரசு தரிசு நிலங்களில் சென்ற ஆண்டு ஆக்கிரமிப்புகள் இருந்து, நடப்பு பசலியில் அவை இல்லாமலிருந்தால் அவைகளையும், மரப்பட்டாவின் பேரில் வழங்கப்பட்ட மரங்களின் விவரம் மற்றும் எண்ணிக்கையையும், மரப்பட்டா வழங்கப்படாத விடுமரங்களின் விவரம் மற்றும் எண்ணிக்கையும் கலம் 17-ல் குறிப்பிடவேண்டும். ஆக்கிரமிப்பு பாகங்களில் பலன் மரங்களிலிருந்து (தென்னை, பனை, புளி போன்றவை) அவற்றின் பலனை ஆக்கிரமிப்பாளர் அனுபவித்தால் அதுகுறித்து வட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்பி உரிய நீர்வை விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

வருவாய் ஆய்வாளர் பயிராய்வுக்குச் செல்லும் பொழுது இக்கணக்கை வைத்துக் கொண்டு புலங்களைப் பார்வையிட்டு பதிவுகள் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். பிழையாக இருந்தால் உடனே அதைத் திருத்தி ஏதாவது விட்டுப்போன சாகுபடியை புலவாரி விவரங்களுடன் குறிப்பதுடன் அவர் பதிவு செய்யவேண்டிய குறிப்புகளை (18) ஆவது கலத்தில் குறிக்க வேண்டும். அவர் பயிராய்வு செய்த ஒவ்வொரு புலத்திற்கும் எதிராக அவரது சுருக்கொப்பத்தையும் தேதியையும் இடவேண்டும். அரசு பாய்ச்சல் ஆதாரங்களிலிருந்து நீர்ப்பாய்ச்சப்பட்ட புஞ்சை சாகுபடி, புறம்போக்கு சாகுபடி ஆகியவை போன்றவற்றைப் பொறுத்தமட்டில் அவர் முக்கிய கவனம் செலுத்தி அதைக்குறித்து ஒரு குறிப்பு எழுதி தேதியுடன் கூடிய கையொப்பம் இட வேண்டும். இந்தக் கணக்கின் துவக்கத்தில் விடப்பட்ட வெற்றுப் பக்கங்களில் வருவாய் ஆய்வாளர் கிராமத்திற்கு வருகை தரும்பொழுது பயிர்களின் நிலைமை, மக்கள் மற்றும் கால்நடைகளின் நிலைமை, நீர் வழங்கல் நிலைமை ஆகியவற்றைக் குறித்து அவரது ஆய்வின் பொதுவான கருத்தினைக் குறிக்கவேண்டும். மேலும், கிராமத்தின் எந்த பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன என்பதையும் குறிக்கவேண்டும். இதர பயிர் ஆய்வு அலுவலர்களும் அதைப்போன்றே கிராமத்திற்கு அவர்கள் வருகை தரும்போது அவர்களுடைய குறிப்புரைகளை எழுதவேண்டும். ஜமாபந்திக்காக அந்தக் கணக்கை எந்த தேதியில் முடிக்க செய்யவேண்டும் என்பதைக் குறிப்பிட்டு கிராம நிர்வாக அலுவலருக்கு வட்டாட்சியர் ஒரு உத்தரவை அனுப்புவார். கிராம நிர்வாக அலுவலர் அந்த தேதி வரைக்கும் கணக்கை முடித்து ஒவ்வொரு வகுப்பினையும் பிரிவினையும் கூட்டி மொத்தம் காண்பித்து அதில் அவர் கையொப்பம் இடவேண்டும். ஜமாபந்திக்கு முன்பு ஆகும்சாகுபடி எவ்வாறு எழுதி தணிக்கை செய்யப்படுகிறதோ அதே போன்று ஜமாபந்திக்குப் பின்பு செய்யப்படுகிற சாகுபடியையும் எழுதித்தணிக்கைக்குக் கொண்டுவரவேண்டும். இந்த கணக்கை அடுத்து வரும் பசலியில் நடக்கும் ஜமாபந்தியின்போது வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். ஜமாபந்தியின்போது கிராமக் கணக்கு எண் 1-ல் உள்ள பதிவுகளுடன் இந்தக் கணக்கில் உள்ள பதிவுகளை ஒத்துப் பார்க்க வேண்டும்.

முழுதும் தரிசாகவுள்ள நிலத்தின் விதத்தையும் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாக இருந்தும், சில குறிப்பிட்ட காரணங்களால் சாகுபடி செய்யாமல் உள்ள நிலம், காடுகளைக் கொண்ட நிலம், கட்டிடங்கள், கால்வாய்கள் முதலியவைகள் இருப்பதினால் சாகுபடி செய்வதற்குக் கிடைக்கப் பெறாத நிலம், இதர காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் மற்றும் விதைக்கப்பட்ட நிகர பரப்பு ஆகியவற்றின் புள்ளிவிவரங்களைத் தெளிவாகக் காண்பிக்கும் பொருட்டு கலம் (17அ) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசு ஒவ்வொரு கிராமத்திலுள்ள பரப்பையும், கீழ்க்கண்ட இனங்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ளவாறு பாகுபடு செய்யப்பட வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறது.

பரப்பின் வகைபாடு.

இனம். (1)	விளக்கம். (2)	விளக்கக் குறிப்பு. (3)
அ. வனம்	காடுகள் சம்பந்தமாக இயற்றப்பட்ட சட்டத்தின்படி காடுகளென்று பாகுபாடு செய்யப்பட்டு அல்லது நிர்வகிக்கப்படும், உண்மையில் முழுவதும் காடுகளைக் கொண்ட பரப்புகள்.	காட்டுப் பரப்பு என்பது (1) வனத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒதுக்கக் காடுகள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிலங்கள் (காடுகள் வளர்ப்பதற்கேற்ற நிலம்): (2) வருவாய்த்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் ஏதேனும் காடுகள் இருந்தால் அவை (3) ஊராட்சியைச் சேர்ந்த காடுகள் (4) தனியாருக்குச் சொந்தமான காடுகள் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். (அரசு மேற்குறிப்பு எண். 44300 டி.1/75-4, வருவாய், நாள் 8-8-75) [வ. வா. நிலை எண். 337 (டி.டி.), நாள் 28-4-75].

பரப்பின் வகைப்பாடு—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
(ஆ) தரிசு மற்றும் சாகுபடிச் செய்ய இயலாத நிலம்.	மலைகள், பாலைவனங்களைப் போன்ற அனைத்து தரிசு மற்றும் சாகுபடி செய்ய இயலாத் நிலம்.	தனித் தொகுதியிலிருந்தாலும் அல்லது சாகுபடி செய்யப்பட்ட கைப்பற்று நிலங்களுக்கிடையில் இருந்தாலும் மிகுந்த செலவில்லாமல் சாகுபடிக்குக் கொண்டுவர முடியாது என்றிருக்கும் நிலத்தினை சாகுபடி செய்ய இயலாத நிலமென்று பகுக்க வேண்டும்.
(இ) விவசாயமற்ற காரியங்களுக்காக உபயோகப்படுத்தும் நிலம்.	கட்டிடங்கள், சாலைகள் மற்றும் இருப்புப்பாதைகள் அல்லது நீரடியிலுள்ள நிலங்கள் (உ-ம்) ஆறுகள், கால்வாய்கள் மற்றும் விவசாயக் காரியமற்ற உபயோகத்திற்கு உபயோகிக்கப்படும் அனைத்து நிலங்கள்.	
(ஈ) சாகுபடி செய்யக் கூடிய தரிசு.	சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளாமலிருக்கும் அல்லது சாகுபடி செய்து சில ஆண்டுகளுக்குப் பின்பு ஏதேனும் காரணங்களுக்காக கைவிடப்பட்டதுமான சாகுபடிக்கு தகுதியான அனைத்து நிலங்கள்.	அப்படிப்பட்ட நிலங்கள் தரிசாக அல்லது புதர்கள் மற்றும் காடுகளால் நிரம்பி, எதற்கும் உபயோகப்படுத்தாமல் உள்ளவையாகும். அவை தீர்வை விதிக்கப்பட்டோ அல்லது தீர்வை விதிக்கப்படாமலோ தனிப்பட்ட தொகுதிகளில் உள்ளவைகளாகவோ அல்லது சாகுபடி செய்யப்பட்ட கைப்பற்று நிலங்களுக்கிடையில் உள்ளதாகவோ இருக்கலாம். ஒரு தடவை சாகுபடி செய்யப்பட்டு, ஆனால் அதைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு சாகுபடி செய்யப்படாத நிலத்தையும் இந்த இனத்தில் சேர்க்க வேண்டும்.
(உ) நிரந்தர பசும்புல் மற்றும் இதர மேய்ச்சல் நிலங்கள்.	அனைத்து மேய்ச்சல் நிலங்களும், அவை நிரந்தர பசும்புல் தரைகளாக மற்றும் புல்வெளிகளாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்.	காட்டு நிலப் பகுதிகளிலுள்ள கிராம சமுதாய மற்றும் மேய்ச்சல் நிலங்கள் இந்த தலைப்பின் கீழ் சேர்க்கப்பட வேண்டும்.
(ஊ) விதைக்கப்பட்ட நிகர பரப்பில் சேர்க்கப்படாத பல்வகை மரப் பயிர்கள் மற்றும் தோப்புகள்.	விதைக்கப்பட்ட நிகர பரப்பில் சேர்க்கப்படாமல் ஆனால் விவசாய காரியத்திற்கு உபயோகப்படுத்தப்படும் சாகுபடி செய்யத்தக்க அனைத்து நிலங்கள்.	"பழத்தோட்டங்களின்" கீழ் சேர்க்கப்படாத முந்திரி மரங்கள், கூரைப் புற்கள், மூங்கில் புதர்கள் மற்றும் விறகுக்காக உள்ள இதர தோப்புகள் முதலியவற்றின் நிலங்களை இந்த இனத்தின்கீழ் பாகுபாடு செய்ய வேண்டும்.
(எ) நடப்பு தரிசுகள் ..	நடப்பு ஆண்டில் தரிசாக போடப்பட்ட விளை நிலங்கள்.	(உ-ம்.) நாற்றங்கால் ஏதும் அதே வருடத்தில் பயிர் செய்யப்படாது போனால் அதனை நடப்பு தரிசாகக் கருதலாம்.
(ஏ) இதர தரிசு நிலம் ..	சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஆனால், ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாமல், ஓராண்டுக்குக் குறையாத காலத்திற்கு தற்காலிகமாக சாகுபடி செய்யாமல் விடப்பட்ட அனைத்து நிலங்கள்.	அது போன்ற நிலங்களை தரிசாக வைத்திருப்பதற்குக் கீழ் கண்டவை ஏதும் காரணமாக இருக்கலாம் :— (1) சாகுபடியாளர்களின் ஏழ்மை நிலை. (2) போதுமான தண்ணீர் வழங்கப்படாமை. (3) தட்ப வெட்ப நிலை மாறுபாடுகள். (4) ஆறுகளிலும், கால்வாய்களிலும் தூர் எடுத்தல். (5) ஆதாயமற்ற விவசாயத் தன்மை.

முழுதும் அல்லது பாகம் மட்டும் சாகுபடி செய்யப்பட்ட ஒவ்வொரு நில அளவை எண் அல்லது உட்பிரிவுக்கும் எதிரே சாகுபடி செய்யப் படாத பாகம் எந்த இனம் அல்லது இனங்களைச் சேர்ந்ததென்றும், ஒவ்வொரு இனத்தின் கீழ் உள்ள பரப்பினையும், இந்த கலத்தில் கிராம நிர்வாக அலுவலர் குறிக்கவேண்டும். அந்த இனத்தினை மேலே குறிப்பிட்டவாறு 'அ' முதல் 'ஏ' வரை யுள்ள எழுத்துக்களால் குறிப்பிட்டுக் காண்பிக்க வேண்டும்.

உதாரணமாக, இந்த வருடத்தில் ஒரு புலத்தில் 15 ஏர்கள் பரப்பு தரிசாக போட்டு மீதம் சாகுபடி செய்யப்பட்டிருந்தால் கலம் (17) (அ) இல் கீழ்க் கண்ட பதிவுகளைச் செய்யவேண்டும்.

ஏ—0.15 ஹெக்டேர்.

பயிராய்வு அலுவலர்கள் கிராமத்தில் ஆய்வு மேற்கொள்ளும்போது மேற்கண்ட இனம் அல்லது இனங்கள் மற்றும் அவைகளின் பரப்பு சரிவர குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்பதை சரி பார்க்க வேண்டும்.

வடார்காடு, தென்னார்காடு, சேலம், தர்ம புரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சிராப் பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாத புரம், திருநெல்வேலி மாவட்டங்களில், கார்காலம் அல்லது இரண்டாவது தடவையாக பருத்தி எடுக்கும் காலம் ஏதேனுமிருந்தால் அப்போதும், கிராமநிர்வாக அலுவலர் பூமியில் உள்ள பருத்திப் பயிரின் பரப்பினைக் குறிப்பதோடும் அவற்றின் விளைச்சல் மதிப்பை நூற்றுக்கு விழுக்காடு என்ற அளவிலும், இந்த கணக்கின் குறிப்புரைக் கலங் களில் கூடுதல் பதிவுகளைச் செய்யவேண்டும். (6—6—1958 நாளிட்ட அரசாணை, பல்வகை எண் 2082, வருவாய்.)

சாகுபடி அடங்கல் கணக்கு கலம் (7) மற்றும் (12)-இல் விவரங்களை நிரப்பும்பொழுது சாகுபடி மாதத்தை முதலில் எழுதவேண்டும். அதன்கீழ் கோடிட்டு அறுவடையான மாதத்தைக் குறிக்க வேண்டும். உதாரணமாக, எட்டாவது மாதம் சாகுபடி செய்யப்பட்ட மாதமாக இருந்து இரண்டாவது மாதம் அறுவடையாகும் மாதமாக இருந்தால் அதை 8/2 என்று எழுத வேண்டும். அதாவது, 8 என்பது சாகுபடி ஆன மாதமும், 2 என்பது அறுவடையான மாதமும் ஆகும்.

அடங்கல் கணக்கில் கலம் (10)ம் (15) ம் பதிவு செய்யப்பட்ட நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்கள் அல்லாத உண்மையில் நீர்ப்பாய்ச்சப்பட்ட ஆதாரங் களைக் குறிக்கும். இந்தக் கலத்தில் நீர்ப்பாய்ச்சல் ஆதாரத்தின் விவரங்களைக் குறிக்கும். பொழுது கீழ்க்கண்ட பாகுபாடு வரிசையினைக் கடைப் பிடிக்க வேண்டும் :—

நதி நீர்ப்பாசனத் திட்டங்கள்.

1. (அ) பெரிய மற்றும் நடுத்தரமான (ஆ) சிறிய திட்டங்களுக்கு தனித் தனியாகவுள்ள நதி நீர்ப் பாசனத் திட்டங்கள் :—

(i) ஆறு

(ii) ஆற்றுக் கால்வாய்கள்

(iii) நீர்த் தேக்கத்திலிருந்து பிரியும் திட்டக்கால்வாய்கள் (நேரிடையாக பாய்ச்சப்படும் இடங்களில்).

(iv) ஏரிகள்—நீர்த் தேக்கத் திட்டத்தினால் நிரப்பப் பெறுபவை.

2. ஏரிகள்—நீர்த் தேக்கத் திட்டத்தினால் நிரப்பப் பெறாதவை.

(i) பெரியவை (பெரும்பாசனம்)

(ii) சிறியவை—40.47 ஹெக்டேரும், அதற்கு மேலும் ஆயக்கட்டு உள்ளவைகளுக்குத் தனியா வும், 40.47 ஹெக்டேருக்குக் குறைவாக ஆயக்கட்டு உள்ளவற்றிற்குத் தனியாகவும், மேலும் இவற்றில் அரசுக்குச் சொந்தமான பாய்ச்சலாதாரங்களுக்கு தனியாகவும்தனியாருக்குச் சொந்தமானவற்றிற்குத் தனியாகவும்.

(iii) இதர பாசனங்கள்—தனியாருடையவை (குளங்கள், ஊற்றுக் கால்வாய்கள், மலையருவிகள் முதலியன).

2. கிணறுகள் —

(i) நீர் பொங்கு கிணறுகள்.

(ii) குழாய்க் கிணறுகள்.

(iii) துளைக் கிணறுகள்.

(iv) துளையுடன் கூடிய தோண்டப்பட்ட கிணறுகள்.

(v) வடிமுனைக் குழாய்க் கிணறுகள்.

(vi) தோண்டப்பட்ட இதர கிணறுகள் (திறந்த கிணறுகள்).

(vii) தரவு கிணறுகள்.

கிணறுகள் அனைவ அரசுக்கு அல்லது தனியா ருக்கு சொந்தமானவை என்பதுடன் கற் களால் கட்டப்பட்டவை அல்லது அவ்வாறு கட்டப்படாதவை (கல் கிணறு அல்லது மண் கிணறு) என்பதையும் குறிப்பிட வேண்டும். மேலும், இறவையானது மின் விசையினால் அல்லது டீசல் என்ஜின் ஆயில் என்ஜின் அல்லது மனித சக்தியினால் அல்லது எருதுகள் மூலமாக இயங்குகிறது என்பதனைக் குறிக்க வேண்டும். கைவிடப்பட்ட கிணறுகளைப் பற்றியும் வீட்டுக் காரியங்களுக்காக மட்டுமே உபயோகப்படும் கிணறுகள் ஆகியவை பற்றியும் அடங்கல் கணக்கில் குறிப்புரைக் கலத்தில் உரிய பதிவுகளைச் செய்ய வேண்டும். பாசனக் கிணற்றில் இறவை பாத்தியம் பட்டாதாரைத் தவிர, வேறு நபர் களுக்கு இருந்தால் அதையும் குறிக்க வேண்டும். நல்ல நிலைமையிலிருந்து ஆனால் உபயோகிக்கப் படாத கிணறுகளைப் பொறுத்த மட்டில் அடங் கல் கணக்கின் குறிப்புரைக் கலத்தில் உரிய பதிவு களைச் செய்ய வேண்டும். நடப்பு பசலியில் வெட்டப்பட்டு உபயோகத்தில் உள்ள புதிய கிணறு களைப் பற்றியும், புதிய தனியார் கிணறுகள் வெட்டுவதற்குப் பண உதவி புரியும் முகமையின் விவரங்கள், அது கூட்டுறவுத் துறையைச் சேர்ந் தது அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி களைச் சேர்ந்தது என்பதைப் பற்றியும் பதிவு செய்ய வேண்டும்.

(வ. வா. நிலை எண். 1050 (ட்டி), நாள் 4—7—1970.)

(26—8—1976 நாளிட்ட அரசாணை எண். 1783 வருவாய்).

(17-2-1981 நாளிட்ட அரசாணை பல்வகை எண். 410 வருவாய்).

கிராமக் கணக்கு எண் 2க்கு A உள்ளடக்கம் நீக்கப் பட்டது.

கிராமக் கணக்கு எண் 2க்கு B உள்ளடக்கம் நிக்கப் பட்டது.

கிராமக் கணக்கு எண் 2-க்கு C உள்ளடக்கம்.

வருவாய்த் துறையின் பொறுப்பின் கீழுள்ள அனைத்து தோப்புகள் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டு, ஆனால், உள்ளாட்சி நிறுவ னங்களால் அவற்றின்மீது உள்ள தங்கள் உரிமை களை அரசுக்கு விட்டுவிட்ட புறம் போக்கு களிலுள்ள, வருவாய்த் துறை விதிகளின் கீழ் மரவரி

விதிக்கத்தக்க, அனைத்து மரங்கள் பொது தோப்பு விதிகளின் கீழ் நடப்பட்ட நீண்டகால நிலக்குத்தகைத் தோப்புகள் தனி வரி விதிக்கப்பட்டு அல்லது குத்தகைக்கு விடப்பட்டு ஆங்காங்கே சிதறியிருக்கும் மரங்களையும் இந்தக் கணக்கில் காண்பிக்க வேண்டும். வருவாய் அலுவலர்களால் வருவாய் ஏதும் வசூலிக்கப்படாலொழிய வனத் துறை மற்றும் பொதுபணித்துறையின் பொறுப்பி ள்ள தோப்புகள் அல்லது மரங்கள் இந்த கணக்கில் இடம் பெறலாகாது. இந்தக் கணக்கு நான்கு பிரிவு களாக வைக்கப்படவேண்டும் முதல் பிரிவு அரசு தோட்டங்களையும் இரண்டாது பிரிவு குடிக ளுடைய சொந்த தோப்புகளையும். மூன்றாவது பிரிவி அரசால் வரிவிதிக்கப்பட்டு அல்லது குத்தகைக்கு விடப்பட்டு, ஆனால், ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் தனி மரங்களையும் நான்காவது பிரிவு, மேற்குறிப்பிட்டவாறு உள்ளாட்சி நிறுவனங் களுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கிலுள்ள மரங்களையும் காண்பிக்கும். வருவாய் நிலை ஆணை எண் 19 பத்தி 2இன் கீழ் அளிக்கப்பட்ட நீண்டகால நிலக் குத்தகைகள் குடிமக்களுடைய சொந்த தோட்டங்களின் கீழ் வரும். அதனை இந்தக் கணக்கில் 2ஆவது பிரிவின்கீழ் காண்பிக்க வேண்டும். மரங்கள் தனியாகத் தீர்வை விதிக்கப் பட்டிருந்தாலொழிய ரயத்துவாரி உரிமை உள்ள நிலத்தில் உள்ள தோப்புகளை இந்தக் கணக்கில் காண்பிக்கக் கூடாது. அரசு அல்லது தோப்பு சொந்தகாரர்கள் உரிமைகளைப் பற்றிய விவரங் களுடன் குத்தகை அல்லது கொடை நிபந்தனை களைக் குறிப்புரைக் கலத்தில் குறிப்பிடவேண்டும். இந்தக் கணக்கில் வருவாய் ஆய்வர்கள், துணை வட்டாட்சியர்கள் மற்றும்வட்டாச்சியர்கள் சொந்த தோப்புகள் பற்றிச் செய்த ஆய்வுக் குறிப்புகள் முழுவதையும் குறிக்கவேண்டும்.

இந்தக் கணக்கு ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை எழுதப்பட்டு கிராம நிர்வாக அலுவலரிடம் இருக்கவேண்டும். ஐந்து ஆண்டுகளின் முடிவில், ஒரு புதிய கணக்கு எழுதப்பட்டு அதனை, வட்ட அளவில் வட்டாட்சியரும், அந்த கணக்குகள் புதி தாக எழுதப்பட்ட பசலியில் அந்தக் கணக்குகளை ஜமாபந்தியில் முடிவு செய்யும்பொழுது, ஜமாபந்தி அலுவலரும் ஒத்துப் பார்க்க வேண்டும். இந்தக் கணக்கில் ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்படும் சேர்த்தல் மற்றும் நீக்கல்களை எழுதி கேட்பு நிர்ணயிக்கவேண்டும்.

(வ.வா. நிலை எண் 1050 (ட்டி) நாள் 4-7-1970) (26-8-1976 நாளிட்ட பல்வகை எண் 1783 வருவாய்.)

கிராமக் கணக்கு எண். 2-க்கு D உள்ளடக்கம்

இது ஜூலை மாதம் முதல் தேதி வாக்கில் வட்ட அலுவலகத்திற்கு மற்றக் கணக்குகளுடன் அனுப்ப வேண்டிய ஒரு வருடாந்திர கணக்கு. இது கிராமக் கணக்கு எண். 2—அடங்கல் கணக்கிலிருந்து தயாரிக்கப்பட வேண்டும். (1) ஆவது கலத்தில் 4-04.5 ஹெக்டேருக்கு (10 ஏக்கர்) மேற்பட்ட ஆயக்கட்டுள்ள பதிவான ஒவ்வொரு பாய்ச்சலா தாரத்தின் பெயரை தனியாகவும் அதற்கு சுறைந்த ஆயக்கட்டுள்ள ஆதாரத்தையும் இணை களையும் எத்தனை என்று மட்டும் காண்பிக்க வேண்டும். ஒவ்வொன்றின் விவரங்களைப் பற்றி அதற்குரிய கலங்களில் அதற்கு எதிரே குறிக்க வேண்டும். பாய்ச்சலாதாரங்களின் தன்மையின் விவரங்களைக் கலம் (1)-இல் குறிப்பிடும்பொழுது கீழ்க்கண்ட பாகுபாட்டு வரிசையினைப் பின்பற்ற வேண்டும்—. (i) ஆற்றுக் கால்வாய்கள், ஊற்றுக் கால்வாய்கள் உட்பட அரசுக் கால்வாய்கள் ;

(ii) தனியாருக்குச் சொந்தமான கால்வாய்கள்;

(iii) நீர்த்தேக்கத் திட்டம், ஆறு மற்றும் இதர வகைகள் உட்பட்ட வற்றினால் நிரப்பப் பெறும் ஏரிகள்.

(iv) குழாய் இணைகள்.

(v) இதர இணைகள்.

(vi) இதர ஆதாரங்கள்.

மூல ஆதாரங்களின் கீழ் நீர்வை விதிக்கப் படாமல், இதர நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்களின் ஆயக்கட்டில் உள்ள இணைகளால் முழுதும் நீர்ப் பாய்ச்சப்பட்ட பரப்பினையும், தனி ஆயக்கட்டு கள் கொண்ட இணைகள் நீர்ப் பாய்ச்சப்பட்ட பரப்பினையும், ''இணைகள் - தனிப்பட்ட ஆயக் கட்டுடைய இணைகள்'' என்ற இனத்திற்கு எதிரே காண்பிக்க வேண்டும். அங்கிகரிக்கப்பட்ட பாய்ச் சலாதாரங்களின் நஞ்சை ஆயக்கட்டுப் பகுதிகளில் உள்ளதும், மேற் குறிப்பிட்ட ஆதாரங்களுக்குத் துணை ஆதாரங்களாக உள்ள நீர்ப்பாய்ச்சலா தாரங்களுக்கெதிரில் காண்பிக்கப்படும் எண்களி லும், ''இதர நீர்ப்பாய்ச்சலாதாரங்களின் துணை ஆதாரங்களுக்கான இணைகள்'' என்ற இனத்திற் கெதிரிலும் சேர்க்க வேண்டும். ஆனால், பதிவு களைக் கூட்டும் பொழுது, ''இணைகள்'' என்ற இனத்திற்கெதிரே காண்பிக்கப்பட்ட பரப்பினை தவிர்க்க வேண்டும். நல்ல நிலையிலுள்ள ஆயில் எஞ்சின்கள் மற்றும் பம்புகளின் எண்ணிக்கையைக் கலம் (1) இன் அடியில் குறிப்பிட வேண்டும். ஆனால், இந்த இனத்தைப் பொறுத்த வரையில் (2) முதல் (6) வரையுள்ள கலங்களில் எந்த விவரங் களும் பதிவு செய்யத் தேவையில்லை. (4)ஆவது கலத்தில் கிராமக் கணக்கு எண். 6ன்படி தண்ணீர் எடுத்துக் கொள்ளப்பட்டதாக காட்டப்பட்டுள்ள புஞ்சை நிலப் பரப்பினையும் தனி ஆயக்கட்டுள்ள இணைகளினால் பாய்ச்சப்பட்ட புஞ்சை நிலப் பரப்பினையும் காண்பிக்க வேண்டும். முதல் போகப் பயிர் மழை நீரைக் கொண்டு மட்டும் சாகுபடி ஆகியிருந்தாலொழிய இரண்டாம் போக மாக சாகுபடியான நீர்ப்பாய்ச்சப்பட்ட பயிரின் பரப்பினைச் சேர்க்கக் கூடாது. (5) ஆவது கலத் தில் தரிசாகப் போடப்படாத நஞ்சை நிலத்தை அதாவது அடங்கல் கணக்கின்படி, ஒரு தடவை அறுவடையான பரப்பினை சம்பந்தப்பட்ட பாய்ச் சலாதாரத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும். பாய்ச்சலான பரப்பினைக் குறித்து அரசு, சிறு இனாம் நிலம் என வேறுபாடு கொள்ளத் தேவை யில்லை. ஆனால், அரசு, தசபந்தம் அல்லது சொந்தம் என்று எல்லா பாய்ச்சலாதாரங்களை யும் பதிவு செய்து அவை எந்த வகுப்பைச் சேர்ந் தனவோ அதற்குத் தக்கவாறு 'அ', 'த', 'சொ', என்ற எழுத்துக்களை கலம் (2) இல் காண்பிக்க வேண்டும். கலம் (7) இல் அந்த நீர்ப்பாய்ச்சல் ஆதாரம் கடையாக எந்த வருடத்தில் பழுது பார்க்கப்பட்டது, அப்போது அதற்கு செலவிடப் பட்ட தொகை, அவ்வாதாரத்தின் உத்தேச நிலைமை ஆகிய விவரங்களைக் குறிக்க வேண்டும். நீர்ப்பாய்ச்சப்பட்ட நிகர மற்றும் மொத்த பரப் பின் சுருக்கம் ஒன்றினைத்தயாரிக்க வேண்டும். இந்த காரணத்திற்காக (3) முதல் (6) வரை யிலுள்ள கலங்கள் ஒவ்வொன்றையும் முறையே துணைக் கலங்கள் (அ) மற்றும் (ஆ) என்றவாறு நிகரம் மற்றும் மொத்தம் என்று உட்பிரிவு செய்து தனித்தனி விவரங்களை பதிவு செய்ய வேண்டும். ஒரு பசலி வருடத்தில் ஒரே புலத்தில் நீர்ப்பாய்ச்சப் பட்ட பயிர்களின் எண்ணிக்கை எவ்வாறாயிருப் பினும், நீர்ப் பாய்ச்சப்பட்ட நிகர பரப்பானது முதல் முறையாக நீர்ப்பாய்ச்சப்பட்ட நிலத் தினையே குறிக்க வேண்டும். நீர்ப்பாய்ச்சப் பட்ட மொத்த பரப்பானது, ஒரு தடவைக்கு மேல் நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பினையும், நீர்ப் பாய்ச்சப்பட்ட நிகர பரப்பினையும் சேர்த்த

மொத்தம் ஆகும். சாகுபடி செய்யப்பட்ட இரண்டு பயிர்களானவை நீர்ப்பாய்ச்சப்பட்டால் அவற்றை மூன்று முறைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் போலவே மற்றவையும் கணக்கிட வேண்டும். அனைத்து பாய்ச்சலா தாரங்களிலிருந்தும் நீர்ப் பாய்ச்சப்பட்ட மொத்த பரப்பானது (இதர அங்கீகரிக்கப்பட்ட நீர்ப்பா ய்ச்சல் ஆதாரங்களுக்குதுணை ஆதாரங்களாகவுள்ள கிணறுகள் நீங்கலாக) கிராமக் கணக்கு எண். 1ன் படி நீர்ப் பாய்ச்சப்பட்ட அனைத்து பயிர்களின் பரப்பிற்கு சமமாக இருக்க வேண்டும்.

இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை, (1) பெரிய மற்றும் நடுத்தர, (2) சிறியவை, என்று நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்களைப் பாகுபாடு செய்வ தானது, 5,000 ஏக்கர் அல்லது 2,000 ஹெக்டேர் களுக்கு மேல் சாகுபடி ஆகக் கூடிய பரப்பினைக் கொண்ட அனைத்து பாய்ச்சலாதாரங்கள் பெரிய பாய்ச்சலாதாரங்கள் மற்றவை சிறிய பாய்ச்ச லாதாரங்கள் என்ற விளக்கத்தைக் கொப்ப இருக்க வேண்டும்.

இந்த கணக்கை இரண்டு பிரிவுகளில் வைக்க வேண்டும். முதல் பிரிவு ஆற்றுப் பாசனத் திட்டம் மற்றும் ஏரிகளுக்கும், இரண்டாவது பிரிவு கிணறுகளுக்கும் ஒதுக்கப்பட வேண்டும். பிரிவு 1 இல் உள்ள திட்டங்கள் பொதுவாக, பாய்ச்சல் நீர்ப்பாசனமாக இருக்கும். இருப்பினும், இத் திட்டத்தின் பகுதியாக பம்பு இறவைத் திட்டங் கள் (Pumping Schemes) என்ற திட்டங்களும் உள்ளன. அது போன்ற இனங்களில் பரப்பு விவரங்களை (3) முதல் (6) வரையுள்ள கலங்களில் பாய்ச்சல் மற்றும் இறவை என்று தனித்தனியாக பதிவு செய்ய வேண்டும். 2 ஆவது பிரிவில் கிணறு களுக்கான விவரங்களைப் பதிவு செய்யும் போது மேலே கொடுக்கப்பட்டவாறு கிணறுகளில் ஒவ் வொரு வகைக்கும் உரிய விளக்கத்தினைக் கண்டிப் பாகக் கடைப் பிடிக்க வேண்டும். கிணறுகளின் வகைகளை சரியாக வகைப்படுத்துவதிலும் முறை யாக அடையாளம் காண்பதிலும் ஏற்படும் சிரமங் களின் போது வேளாண்மைத் துறையைச் சேர்ந்த உள்ளூர் அலுவலர்களிடம் கலந்தறிதல் வேண்டும்.

நீர்பொங்கு கிணறுகள் (Artesian Wells):

மேல் படிவங்களிலுள்ள நீர் நிலையின் மேலாக நீர் பொங்கியெழும் கிணறுகள், இவைகள் ஏதும் வெட்டப்பட்ட அல்லது தோண்டப்பட்டவை அல்ல. இவை அசாதரணமாகக் கிடைக்கக் கூடியதாகும். நீர் அழுத்தப் பகுதிகளில் இது போன்ற கிணறுகள் தோன்றுகின்றன.

குழாய்க் கிணறுகள் (Tube wells) :

நீர் சுரக்கக் கூடிய பகுதிகளிலிருந்து நிலத்தடி நீரைக் கொண்டு வரும் காரியத்திற்காக பூமியில் ஆழமாகத் துளைக்கப்பட்டு செலுத்தப்பட்டவை யாகும்.

வடிமுனைக் குழாய்க் கிணறுகள் : (filter point Tube wells)

மணற் பாங்கான பகுதிகள் அல்லது கரையோரப் பகுதிகளில் நிறுவப்பட்ட சிறிய விட்டமுள்ள ஆழமற்ற குழாய்க் கிணறுகள் 'வடிமுனைக் குழாய்க் கிணறுகள்' எனப்படும்.

துளைக் கிணறுகள் (Bore wells) :

கலப்பு உலோக உறைக் குழாய்கள் பொருத்த வேண்டிய அவசியமில்லாது, தானே நிற்கக் கூடியதாகவுள்ள சிறந்த கடினப் பாறைப் பகுதி களில் துளைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள், துளைக் கிணறுகள் என்று அழைக்கப்படுகின்றன.

துளையுடன் கூடிய தோண்டப்பட்ட கிணறுகள் (Dug-cum-Bore wells) :

துளையுடன் கூடிய திறந்த வெளிக் கிணறுகள்.

இதர கிணறுகள் (Other wells) :

தரைப் பகுதியிலிருந்து நீர் கொள் பகுதி வரை வெட்டப்பட்ட அல்லது தோண்டப்பட்ட பல்வேறு பருமனுள்ள திறந்த வெளிக் கிணறுகள். (17–2–81 நாளிட்ட அரசாணை பல்வகை எண். 410, வருவாய்த் துறை.)

கிராமக் கணக்கு எண். 2-க்கு E உள்ளடக்கம்.

நீக்கப்பட்டது

கிராமக் கணக்கு எண். 2-க்கு F உள்ளடக்கம்.

இந்தக் கணக்கு கிராமக் கணக்கு எண். 2-இல் கலம் (17அ) இல் குறிக்கப்பட்டுள்ள விவரங்க ளின் சுருக்கமாகும். ஒவ்வொரு கிராமத்தின் ஜமாபந்திக்கு முன்பும் அதனை கிராம நிர்வாக அலுவலர் தயாரிக்க வேண்டும். அந்த கணக்கை வட்டப் பதிவேடு எண். 2-A தயாரிப்பதற்காக வட்டாட்சியர் அலுவலகத்தில் கிராம நிர்வாக அலுவலர் ஒப்படைக்க வேண்டும். இதில் ஒரு முறைக்கு மேல் விதைக்கப்பட்ட பரப்பினையும் காண்பிக்க வேண்டும். அது சாகுபடி செய்யப் பட்ட மொத்த பரப்பிலிருந்து விதைக்கப்பட்ட நிகர பரப்பினைக் கழித்து வரும் பரப்பாகும். அறுவடையான மொத்த பரப்பு, நடப்பு ஆண்டில் ஒவ்வொரு பயிருக்கும் தனித்தனி பரப்பாகக் கணக்கிடப்பட்டு ஒரு தடவைக்கு மேல் விதைக்கப் பட்ட பரப்புகளையும் தனிப் பயிர்கள் அடங்கிய பரப்பின் மொத்தத்தையும் கூட்டிவரும் மொத்தத் தைக் குறிக்கும்.

கிராமக் கணக்கு எண். 3.

கிராமக் கணக்கு எண். 3 என்பது புலங்களின் பதிவுகளின் மாறுதல்களைக் காண்பிக்கும் வருடாந் திர பதிவேடாகும். இதில் உயர் வருவாய் அதிகாரி யினால் ஆணையிடப்பட்ட கைப்பற்று நிலங்களின் மாறுதல்களின், விவரங்கள் காணப்படும். இதை நான்கு பிரிவுகளாக எழுத வேண்டும். : I ஆவது பிரிவு, உரிமையை விட்டு விடுதல், II ஆவது பிரிவு ஒப்படை ; III ஆவது பிரிவு, பட்டா மாறுதல், IV ஆவது பிரிவு, இதர மாறுதல்கள். ஒவ்வொரு பிரிவு சம்பந்தப்பட்ட மாறுதல்களை அந்தந்த பிரிவின் படிவத்தின் தலைப்பை மாற்றா மல் தொடர்ந்து எழுத வேண்டும். மாறுதல் களுக்குரிய ஆணை கிடைத்தவுடன், கலம் (8)இல் மாறுதலுக்குரிய உத்தரவு சம்பந்தமான விவரத்தை உத்தரவு எண், தேதியுடன் குறிக்க வேண்டும். உதாரணமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் பதிவு களைப் போல இந்தக் கணக்கின் (9) ஆவது கலத்தில் முழு தகவலையும் குறிப்பதற்கு முக்கிய கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். III ஆவது பிரிவின் கீழ் வரும் இனங்களைப் பொறுத்தவரை யில் பதிவு பெற்ற கைப்பற்றுதாரரின் பட்டா எண், பெயர் ஆகியவற்றை மாறுதலுக்கு முன்பும் பின்பும் தவறாமல் குறிக்க வேண்டும். III ஆவது பிரிவு, கீழ்க்கண்ட உட்பிரிவுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(1) வருவாய் பாக்கிக்காக விற்பனை செய்யப் பட்டவை—

(அ) அரசால் வாங்கப்பட்டவை.

(ஆ) தனி நபர்களால் வாங்கப்பட்டவை

(2) நீதிமன்ற ஆணையின் பேரில் விற்பனை அல்லது மாற்றம் செய்யப்பட்டது.

(3) தனியார் விற்பனை அல்லது கொடை ஆகியவற்றின் பேரில் மாற்றப்பட்டது.

(4) வாரிசு முறையினால் மாற்றப்பட்டது.

(5) 12 ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேல் தொடர்ந்தாற் போல் அனுபோகம் செய்ததி

னாலும் அது போன்ற காலத்திற்கு பதிவு பெற்ற பட்டாதரர் காணப்படாது போனதினாலும் மாற்றப்பட்டவை [வருவாய் நிலை ஆணை எண். 31 (7)]

(6) வாரிசு அற்று அரசினரைச் சேர்ந்த நிலங்கள் வருவாய் பாக்கிக்காக விற்பனை செய்யப்பட்ட பொழுது அதில் நிலத்தை வாங்கியவரின் பேரில் விற்பனை ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் நில மெடுத்தவர் பெயரைக் கணக்குகளில் பதிவு செய்ய வேண்டும். விற்பனைச் சான்றிதழ் வழங்கும் வரை காத்திருக்கக் கூடாது.

வாரிசு அற்று அரசினரைச்சேர்ந்து இறுதி முடிவுக் காகக் காத்திருக்கும் நிலங்களைப் பொறுத்த வரையில் பதிவு பெற்ற கைப்பற்றுதாரராக, 'தமிழ் நாடு அரசு (அரசு உறுபொருள்) ' என்று பதிவு செய்ய வேண்டும். இருப்பினும், அரசு உறுபொருள் ' நிலங்கள் அல்லாதவற்றையும் கொண்டிருந்தால், பிறகு, அரசு உறுபொருள் நிலங்களை மட்டும் ஒரு தனிப்பட்டாவில், 'தமிழ் நாடு அரசு (அரசு உறுபொருள்) ' என்று காண் பிக்க வேண்டும்.

கைப்பற்று நிலங்கள் சம்பந்தப்பட்டவரையில் ஏற்படும் மாறுதல்களை அதாவது, புஞ்சை, நஞ்சை யாகவும், இனாம் திறப்பாக (அரசு)வும், தீர்வை விதிக்கப்பட்டது புறம்போக்காகவும், ஒருபோகம் இரு போகமாகவும், அவ்வாறே மேற் கண்ட இனங்கள் மாறி வருவதினால் ஏற்படும் மாறுதல் களையும் (Vice versa உ-ம் நஞ்சை புஞ்சை யாகவும்.....) அளவையில் மிகையாக இதை போன்ற மொத்த மாறுதல்களையும் IV ஆவது பிரிவில் பதிவு செய்ய வேண்டும். நிலையான மாறுதல்களை, சம்பந்தப்பட்ட கலத்திற்கு நேராக நிலவரித் திட்ட மற்றும் இனாம் பதிவேடுகளின் (A.B. பதிவேடுகள்) குறிப்புரைக் கலத்தில் பதிவு செய்ய வேண்டும். எல்லா மாறுதல் களையும் ஜமாபந்தியில் உரிய வகையில் குறிக்கப் பட்டுள்ளது என்பதற்கும், எல்லா நிலையான மாறு தல்களையும் நிலவரித் திட்ட மற்றும் இனாம் பதிவேடுகளில் (A. B, பதிவேடுகள்) பதிவு செய்யப்பட்டதென்பதற்கும், பல்வேறு கணக்கு களில் மாறுதல்கள் உண்மையில் குறிக்கப்பட்டிருக் கின்றன என்ற விவரத்தை குறிப்புரைக் கலத்தில் பதிவு செய்ய வேண்டும். விண்ணப்பத்தின் பேரிலோ அல்லது அனுமதியில்லாமல் கைப்பற்றிய தாக கொடுத்த அறிக்கையின் பேரிலோ ஒப்படை செய்யப்பட்ட அனைத்து விவரங்களையும் இந்தக் கணக்கில் காண்பிக்க வேண்டும். ஆனால், ஒப்படை நிராகரிக்கப்பட்ட அல்லது சிவாயிஜாமாவில் வைக்கப்பட்ட நிலங்களை இதில் சேர்க்கவே கூடாது. இந்தக் கணக்கையும் அதன் உள்ளடக் கத்தையும் தயாரிப்பதில் நில ஒப்படை விண்ணப் பத்தின் பேரில் ஒப்படை செய்யப்பட்டவைகளுக் கும், நில ஒப்படை விண்ணப்பம் இல்லாமல் ஒப்படை செய்யப்பட்டவைகளுக்கும் வேறுபாடு ஏதுமில்லாமல் அவை நில ஒப்படை செய்யப் படுவதின் பேரில் கைப்பற்றுக்கு வந்ததாகவே கருதி, எழுத வேண்டும். I, II, III ஆவது பிரிவுகளில், ரயத்துவாரி நிலங்களில் மாறுதல் களைக் காட்ட, போதுமான இடம் விட்டு, பிறகு, இனாம் நிலங்களின் மாறுதல்களை தனியே பதிய வேண்டும். ஜமாபந்தியின் போது கணக்கு எழுதி முடிந்த பிறகு, ஒவ்வொரு பிரிவுவையும் கூட்டி, வட்ட அலுவலகத்திற்கு அனுப்பவதற் காக 3 ஆம் எண். கணக்கின் A உள்ளடக்கத்திற் கான படிவத்தில் ஒரு சுருக்கத்தினைத் தயாரி செய்ய வேண்டும். இந்தக் கணக்கையும் அதன் உள்ளடக்கத்தையும் அவை எந்த பசலிக்குரியதோ அதற்கடுத்த பசலியின் ஜமாபந்தியின்போது வட்ட அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

கிராமக் கணக்கு எண். 3க்கு A உள்ளடக்கம்.4

3 ஆம் எண் கணக்கின் A உள்ளடக்கமானது கைப்பற்று நிலங்களில் ஏற்பட்ட மாறுதல்களின் சுருக்கமாகும். இதை 3 ஆம் எண் கணக்கிலிருந்து திறப்பு (அரசு)க்கு வேறாகவும் இனாமுக்கு வேறா கவும் தயாரிக்க வேண்டும். I ஆவது இனம் முந்தைய பசலியில் இறுதியில் நிலைத்தப்படிஉள்ள கைப்பற்றைக் காண்பிக்கும். II ஆவது இனம், 3 ஆம் கணக்கின் பிரிவு 1 இன் மொத்தத்தைக் காண்பிக்கும் ; III ஆவது இனம், III ஆவது பிரிவின் பல்வேறு தலைப்பின் கீழ் உள்ள அனைத்து இனங்களின் மொத்தத்தையும், VII ஆவது இனம், II ஆவது பிரிவின் மொத்தத் தையும் காண்பிக்கும். இனம் III (1) (ஆ) மற்றும் VIII (1) ஆகியவை ஒத்திருக்கும். அவ்விதமே, இனம் III (2) மற்றும் VIII (2), III (3) மற்றும் VIII (3), III (4) மற்றும் VIII (4), III (5) மற்றும் VIII (5) ஆகியவை யும் ஒத்திருக்கும். 3 ஆம் எண் கணக்கின் IV ஆவது பிரிவிலுள்ள அனைத்து பதிவுகளும் IV ஆவது மற்றும் IX ஆவது இனங்களில் சேர்க்க படும். ஆனால், மாறுதல்களின் தன்மைகளைக் காட்டும் விவரங்களை அவற்றில் குறிப்பிட, வேண்டும்.

கிராமக் கணக்கு எண். 4.

கிராமக் கணக்கு எண் என்பது அனைத்து) அரசிறைக் கழிவு (Ber z Deduc lon) களையும் காண்பிக்கும் கணக்காகும். அது இரண்டு பிரிவுகளில் தயாரிக்கப்படும். ஒன்று சமய நிலையங்களுக்காக கழிக்கப்படுவனவற்றை யும் மற்றொன்று மற்ற காரியங்களுக்காக கழிக்கப்படுபவனவற்றையும் காண்பிக்கும். இந்தக் கணக்கில், (1) முதல் (5) வரையிலுள்ள கலங் களை அரசிறைக் கழிவுக்கான உத்தரவுகளிலிருந்து எடுத்தெழுதவேண்டும். அந்த உத்தரவு விவரங் களை கிராம நிர்வாக அலுவலர்களுக்குத் தெரி விக்க வேண்டும். இந்தக் கணக்கை 'நிரந்தரக் கணக்காக கிராம நிர்வாக அலுவலர் வைத்துவர வேண்டும். அது ஒவ்வொரு ஆண்டும் எழுத்தப்பட தேவையில்லை.

நிலத்தீர்வை வசூல் செய்யும் மாதங்களில் தவணைகளில் கொடுக்கும் வழக்கம் இருந்தா லொழிய அரசிறைக் கழிவு, பசலியின் கடைசி கிஸ்தி மாதத்தில் வழங்கப்பட வேண்டும். இரண்டு ஆண்டுகள் வரையிலுள்ள அரசிறைக் கழிவு பாக்கிகளை முழுவதுமாக கொடுக்க வேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட பாக்கி யாக உள்ள அரசிறைக் கழிவின் பாகங்கள் கீழ்க் கண்டவாறு கொடுக்கப்படும் :—

நடப்பு ஆண்டு	முழுவதுமாக.
பாக்கி உள்ள முதல் ஆண்டு ..	முழுவதுமாக.
பாக்கி உள்ள இரண்டாம் ஆண்டு..	முழுவதுமாக.
பாக்கி உள்ள மூன்றாம் ஆண்டு.	பத்து விழுக் காடு கழிவு.
பாக்கி உள்ள நான்காம் ஆண்டு.	பதினைந்து விழுக்காடு கழிவு.
பாக்கி உள்ள ஐந்தாவது அல்லது மேற்பட்ட ஆண்டுக்கு.	இருபது விழுக் காடு கழிவு.

எடுத்துக் காட்டு :—1938 ஆம் ஆண்டிலிருந்து கொடுபட வேண்டிய படித் தொகையானது, 1943 ஆம் ஆண்டில் கோரப்பட்டிருந்தால் அது கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட வேண்டும் :—

நடப்பு .. 1943 முழுவதுமாக.

பாக்கி { 1942 முழுவதுமாக
1941 முழுவதுமாக.
1940 பத்து விழுக்காடு கழிவு.
1939 பதினைந்து விழுக்காடு கழிவு.
1938 இருபது விழுக்காடு கழிவு.

கிராம நிர்வாக அலுவலர்கள் அரசிறைக் கழிவு பாக்கிகளுக்காக உள்ள அனைத்து கோரிக்கைகளையும் வட்டாட்சியருக்கு தெரிவிக்க வேண்டும். உரிய விழுக்காடு வீதக் கழிவுக்குப் பிறகு கொடுக்க வேண்டிய நிகர தொகையினைப் பற்றி வட்டாட்சியரது உத்தரவு பெற்று பிறகு கிராம நிர்வாக அலுவலர் வசூலில் இருந்து தொகையைக் கொடுக்க வேண்டும்.

1951 ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளை சட்டம் (1951 ஆம் ஆண்டு XIX ஆவது சட்டம்) பிரிவு 34ன் கீழ் உரிமையளிக்கப் பட்ட தேவதாசி இனாம்கள் உள்ள கிராமங்களில் நிலைப் பதிவேடு B-1 இன் பாகம் 2இல் கலம் 11(அ) வில் காண்பிக்கப்பட்டவாறு தேவதாசிக்குக் கொடுபட வேண்டிய அல்லது அவருடைய வாழ்நாளுக்குப் பிறகு, கோவிலுக்குக் கொடுபட வேண்டிய அரசிறைக் கழிவுத் தொகையை இந்தக் கணக்கிற்கு கொண்டு வர வேண்டும். நிலைப்பதிவேடு B-1இன் பாகம் IIஇல் உள்ள விவரங்களுக்குகேற்ப இக்கணக்கின் (1) முதல் (5) வரையிலுள்ள கலங்களை நிரப்ப வேண்டும். நிறைவேற்றப்பட வேண்டிய பணி சம்பந்தப்பட்ட சான்று ஏதும் இவ்வினங்களைப் பொறுத்த வரை பதிவு செய்ய வேண்டியதில்லை. ஏனெனில், இப் பணிகள் இலவசமாக நிறை வேற்றப்படுபவையாகும்.

கிராமக் கணக்கு எண். 5.

5-ஆம் எண் கிராமக் கணக்கானது நிலவரித் தள்ளுபடிகளைக் காட்டுகிற வருடாந்திர பதிவேடாகும். குட்ப வெட்பநிலை சரியில்லாமையினால் எப்போதாவது ஏற்படும் தரிசுக்கும், பயிர் இழப்பிற்கும், கொடுக்கப்படும் தள்ளுபடியுடன், காலநிலை நிமித்தமின்றி மற்றபடி வழங்கும் நிலையான தள்ளுபடிகளையும் இதில் சேர்க்க வேண்டும். நில எடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ளாட்சி நிறுவனங்கள், அல்லது தனிப்பட்ட நபர்கள் அல்லது நிறுவனங்களின் பேரில் கைப்பற்றப் பட்ட மற்றும் அவைகளின் பேரில் தனிப்பட வாங்கிக் கைப்பற்றப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கான நிலத்தீர்வைத்தள்ளிக் கொடுக்கப் பட்ட இனங்களை "நிலையாக தள்ளிக் கொடுக்கப் பட்டவை" என்று காண்பிக்க வேண்டும். ஜமாபந்தியின் போது, நீர்வை தள்ளிக் கொடுப்பதற்கு முன்பு அதுபோன்ற நிலங்களுக்குள்ள பதிவுகளை, வட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்து வரப்படும் உரிமை மாற்றப் பதிவேட்டுடன் சரிபார்க்க வேண்டும்.

4-ம் எண். கிராமக் கணக்கில் வரும் அரசிறைக் கழிவுகளை இந்தக் கணக்கில் காண்பிக்கக்கூடாது. பொது நன்மைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலம் ஏதும் பட்டாவிலிருந்து ஏற்கனவே நீக்கப் படாமலிருந்தால், நிலத்திற்கான நீர்வையை வசூலாகாத பாக்கிகளாக கருதவேண்டுமேயொழிய இந்த இனத்தை 5-ஆம் எண் கணக்கிற்குக் கொண்டு வரவோ காலநிலை அல்லது இதர தள்ளுபடிகளைப் போல தள்ளுபடி செய்யவோ கூடாது.

இதனை மூன்று பாகங்களாக வைத்துவர வேண்டும்.

பாகம் 1-இல் உள்ள தள்ளுபடிக்கான இனங்கள் கோட்டாட்சியாளர் அல்லது ஜமாபந்தி அலுவலரின் ஆணைக்காக வைக்கப் படுகின்றனவு அதனை நீர்ப்பாய்ச்சல் ஆதாரங்கள் வரிசையாக நிறப்புக்குத் தனியாகவும் இனாம்க்குத் தனியாகவும் வெவ்வேறு பிரிவுகளில் எழுத வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் விண்ணப்பங்கள் பெறப்பட்ட புலன்களைப் பொறுத்த வரையில் பயிராய்வு செய்யும் அதிகாரிகளால் எத்தெந்த புலன்கள் நடப்பிலுள்ள விதிமுறைக்கிணங்க, தள்ளுபடிக்கு உகந்தவை என்று அடங்களில் எழுதியிருப்பதனை, ஒவ்வொரு நீர்ப்பாய்ச்சல் ஆதாரத்தின் கீழும் தனித்தனியாக பதிவு செய்ய வேண்டும். விண்ணப்பம் முதல் முதல் எந்த அலுவலரால் வாங்கப்பட்டதோ அந்த அலுவலரிடம் விண்ணப்பம் வரப்பெற்ற தேதியே (2) ஆவது கலத்தில் குறிக்கவேண்டும். வருவாய் நிலை ஆணை எண். 13 மற்றும் 14 இன் கீழ் விவரிக்கப்பட்டள்ளவாறு வெவ்வேறு இனத் தள்ளுபடிகளைக் கலம் (3)ல் இல் குறிக்கவேண்டும் நாளது வரை திருத்தப்பட்ட நிலவரித்திட்ட பதிவேட்டின்படி, (5) ஆவது கலத்தை எடுத்தெழுத வேண்டும். ஆய்வு மற்றும மேலாய்வு செய்யும் அலுவலர்கள் அடங்கலில் எழுதியிருக்கும் குறிப்புகளினால் எந்தெந்த புலன்கள் நடைமுறையிலுள்ள விதிகளின்படி, தள்ளிக் கொடுப்பதற்கு உகந்தவை என்று தெரிந்து கொள்ளலாம். அதுபோன்ற இனங்களில் (தள்ளுபடி செய்வதற்கு) முன்மொழியப்பட்ட தொகையினை கலம் (8)இல் குறிக்க வேண்டும். எந்த இனத்திலாவது (8) ஆவது கலத்தில், கிராம நிர்வாக அலுவலரால் எழுதப்பட்ட தொகையானது, வட்டாட்சியரால் (11) ஆவது கலத்திலுள்ள வட்டாட்சியரின் குறிப்புரைகளுக்கு ஒத்து வராவிட்டால், வட்டாட்சியருடைய குறிப்பை அனுசரித்து (8) ஆவது கலத்தை திருத்த வேண்டும். (7), (8), (9) மற்றும் (10) இல் உள்ள பதிவுகள், வட்டம் மற்றும் மேல் அலுவலக பணியாளர்களால். மிகவும் கவனமாக சரி பார்க்கப்பட வேண்டும். அடங்களில் கிராம நிர்வாக அலுவலர் எழுதிய குறிப்புரைகளை ஒவ்வொரு நில அளவை புல எண்ணிற்கு எதிரே (9) ஆவது கலத்தில் எழுதி, பிறகு சுற்றுப்புற புலன்கள் என்ன நிலையில் இருந்தது என்ற துணைக் குறிப்புகளையும் சேர்க்க வேண்டும். நஞ்சைத் தீர்வைக்கும் புஞ்சைத் தீர்வைக்கு முள்ள வேறுபாட்டுத் தொகை, புஞ்சை நிலங்களுக்கான தண்ணீர்த் தீர்வை, நஞ்சை நிலங்களுக்கான இரண்டாம் போகத் தீர்வை ஆகியவற்றின் தள்ளுபடி. இனங்களில், தள்ளுபடி செய்யப்பட்ட தொகை எவ்விதம் கணக்கிடப் பட்டது என்ற விவரங்களை குறிக்க வேண்டும். இந்த கலத்தில், மாமூல் தரிசு பற்றிய குறிப்பு ஒன்றும் எழுதப்பட வேண்டும்.

தள்ளிக் கொடுப்பதற்கு விண்ணப்பம் செய்து கொண்ட நிலத்தின் நிலைமையை மட்டும் அறிந்து கொள்வது போதுமானதன்று. ஆதலின் பயிராய்வு செய்பவர் எந்த நிலத்திற்கு மனு செய்து கொள்ளப்பட்டதோ அந்நிலங்களுக்குப் பக்கத்திலுள்ள நிலங்களின் நிலைமையையும் குறிக்க வேண்டும். பக்கத்திலுள்ள நிலங்கள் நல்ல நிலையில் இருக்குமானால், மனுதாரர் அவருடைய நிலங்களை அவ்வாறு வைத்துக் கொள்ளாதற்கு உரிய காரணங்களைக் கூடுமான வரையில் விசாரித்து அடங்களில் குறிக்க வேண்டும். (10) ஆவது கலத்தை நிரப்பும் பொழுது தள்ளுபடி கோரப்பட்டுள்ள நிலம் மற்றும் அதற்குப் பக்கத்திலுள்ள நிலங்கள் பற்றி அடங்களில் உள்ள குறிப்புரைகளை சரியாக எடுத்தெழுதுவதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். பயிர் மேலாய்வு செய்யும் அதிகாரிகளின் குறிப்புரைகள் எங்கெங்கு செய்யப் பட்டுள்ளனவோ, அவைகளையும் கணக்கில் எழுதவேண்டும்.

I ஆம் பாகம், I ஆம் பாகத்திலிருந்து நீர்ப் பாய்ச்சல் ஆதாரங்கள் வரிசையில் தயாரிக்கப் படும். வருவாய் நிலை ஆணை எண் 14-ன்படி வழக்கத்திற்கு மாறான தள்ளுபடி செய்யும் போது பாகம் III-ல் தயாரிக்கப்பட வேண்டும் II-ஆம் பாகத்தில் காலநிலைத் தள்ளுபடிகளை எழுதிய பின்பு, அதனடியில் நிரந்தர தள்ளுபடிகள் அனைத்தும் எழுதப்படும். அதுபோன்ற இனங் களில் புலவாரி விவரங்கள் தேவையில்லை. ஒவ்வொரு புலத்திற்கும் அனுமதிக்கப்பட்ட இறவைத் தள்ளுபடியை, நிலவரித் திட்ட பதி வேட்டின் குறிப்புரைக் கலத்தில் அந்த துறையின ரால் தனியே பதியப்பட்டுள்ள சில இனங்களில், அடங்களின் (4)ஆவது கலத்தில் அவைகளுக்குள்ள மொத்தத் தீர்வை காண்பிக்கப்பட்டிருக்கும். அவைகள், எந்த வருடத்திலாவது நேரிடையான பாய்ச்சலுக்கு வந்தால், அதுபோன்ற புலன்களை (அல்லது 10 ஏர் அல்லது அதற்கு மேல் அளவுள்ள அதன் பாகங்கள்) இறவைத் தள்ளுபடி இனப் பட்டியிலிருந்து நிரந்தரமாக மாற்றப்படவேண் டும். இதற்காக புலங்களின் பாகங்கள் உட் பிரிவு செய்யப்பட வேண்டும். இதர இறவை நஞ்சை நிலங்கள் ரயத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அசாதாரண காரணங்களால் எந்த வருடத்திலாவது நேரிடையாக நீர்ப் பாய்ச்சப்படுமானால், இறவை தள்ளுபடி இனப் பட்டியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படமாட்டாது; ஆனால், அதுபோன்ற நேரிடை பாய்ச்சல் உள்ள ஆண்டில் இறவை தள்ளுபடி அனுமதிக்கப்பட மாட்டாது. ஆனால், அவ்வாறு நீர்ப்பாய்ச்சப் பட்ட பரப்பானது கணிசமானதாகவும், அந்த நேரிடைப் பாய்ச்சலானது போதுமானதாகவும் பயனுடையதாகவும் இருக்கவேண்டும். இயந்திர சக்தியால் தண்ணீர் உயர்த்தப்பட்டால் அத்தகைய இறவைக்கு தீர்வை தள்ளிக் கொடுக்கப்பட மாட்டாது. பாகம் II-இல் இதர தள்ளுபடிகளை எழுதியதற்குப் பிறகு, ஒவ்வொரு ஆண்டும் அனு மதிக்கப்படும் நிகர இறவை தள்ளுபடியானது, ஒவ்வொரு ரயத்திற்கும் புலவாரியாக காணப்படும். ரயத்துவாரி உரிமை முறை நிலப் பட்டாதாரரிட மிருந்து, நிலத் தீர்வையும், மரப் பட்டாவின் பேரில் மரங்களை அனுபவிப்பவர்களிடமிருந்து மர வரியும் விதித்து வாங்கும் இரட்டைமுறை வழக்கம் இன்னமும் தொடர்ந்து இருந்து வரும் இனங்களில், நிலத் தீர்வை அல்லது மரத்தீர்வை தள்ளிக் கொடுக் கப்பட்டால் அதனை 5ஆம் கணக்கில் பாகம் II-ல் எழுதவேண்டும்.

கிராமக் கணக்கு எண் 6.

6ஆம் எண் கிராமக் கணக்கு என்பது முறை யற்ற நீர்ப்பாசனத்திற்காக எல்லா நஞ்சைப் புலன்களுக்கும் விதிக்கப்பட்ட உயர்த்தப்பட்ட தண்ணீர்த் தீர்வையையும் அல்லது இரண்டாம் போக சாகுபடிக்கு விதிக்கப்பட்ட மிகையான கட்டணத்தையும் மற்றும் எல்லா புஞ்சைப் புலன் களுக்கும் தனியே விதிக்கப்பட்ட தண்ணீர்த் தீர்வையையும் காண்பிப்பதற்காக உள்ள கணக் காகும். அதாவது, ஒரு போக நஞ்சை நிலங்களில் இருபோக பயிருக்காக விதிக்கப்பட்ட அனைத்து தண்ணீர்த் தீர்வையையும், நஞ்சை நிலங்களில் விதிக்கப்பட்ட உயர்த்தப்பட்ட தண்ணீர்த் தீர்வை யையும் மற்றும் புஞ்சை நிலங்களுக்குத் தண்ணீ ருக்காக விதிக்கப்பட்ட சாதாரண தீர்வை அல்லது அபராதத் தீர்வை ஆகியவற்றை இந்தக் கணக்கில் காண்பிக்க வேண்டும். அது ஒவ்வொரு மாதமும் 1ஆம் எண் கணக்குடன் வருவாய் ஆய்வர் மூல மாக வட்டாட்சியருக்கு கிராம நிர்வாக அலுவலர் களால் அனுப்பப்பட வேண்டும். நிலவரித் திட்டத் துறையினரால், முடிவு செய்யப்பட்ட ராவட்டங்களில், முதலாவது இரண்டாவது தொகுதிகளில் பாகுபாடு செய்யப்பட்ட பாய்ச்ச லாதாரங்களை, முதல்வகுப்பு பாசன ஆதாரங் களாகவும் இதர பாய்ச்சலாதாரங்களை இரண்டாம் வகுப்பாகவும், காண்பிக்கப்பட வேண்டும். இதுவரை முடிவு செய்யப்படாத மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரால் ஆணை யிடப்படும் பாகுபாட்டினைப் பின்பற்றவேண்டும். இதற்காக வட்டாட்சியரிடமிருந்து தங்கள் கிராமங் களுக்குரிய பாய்ச்சலாதாரங்களின் வகுப்பினைக் காண்பிக்கும் பட்டியல் ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தக் கணக்கு நிறப்புக்கு (அரசுக்கு) வேறாகவும், இனாமுக்கு வேறாகவும், தனித்தனி பிரிவுகளில் எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு பாய்ச்சலாதரத் திற்கும் தனித்தனியே எழுதவேண்டும். பாய்ச் சல் ஆதாரத்தின் பெயரையும், வகுப்பையும், நிறப்பு அல்லது இனாம் இவற்றில் எந்த பிரிவில் உடையதாக இருந்தாலும், அதனை பக்கத்தின் குறுக்கே எழுதவேண்டும். ஒவ்வொரு பாய்ச்சலாதாரத்தின் கீழும், இந்தக் கணக்கை இரண்டு பிரிவுகளில், ஒன்று புறம்போக்கு, சிவாயி ஜமா உட்பட புன்சை நிலங்களுக்கும், மற்றொன்று நஞ்சை நிலங்களுக்கும் தனித்தனியாக பட்டா வாரியாக எழுதப்பட வேண்டும். நிலமானது புஞ்சையா, நஞ்சையா அல்லது புறம்போக்கா என்று காண்பிக்கும் பொறுட்டு (3)ஆவது கலத்தில் பு., ந., அல்லது புற. என்ற எழுத்துக்களை உபயோகிக்கலாம். பாய்ச்சலா, இறவையா என்பதற்கு (4)ஆவது கலத்தில் பா., இ., என்ற எழுத்துக்களையும் உபயோகிக்கலாம். நீர்ப் பாய்ச்சப்பட்ட, பயிர்களை, சுருக்கமாக (உ-ம்) கேழ்வரகுக்கு கே என்றும் சோளத்திற்கு 'சோ' என்றும், (5) மற்றும் (10)ஆவது கலங் களில் எழுதலாம். அடங்களில் உள்ள பதிவு களை அனுசரித்து (ஜமாபந்திக்கு முன்பாகவே) கிராம நிர்வாக அலுவலர்கள் கலங்கள் (1) முதல் (14) முடியவற்றை, அவ்வப்போது நிரப்ப வேண்டும். உண்மையில் தண்ணீர் பாய்ச்சப் பட்ட பரப்பிற்கு சாதாரண தீர்வை வீதத்தில் கட்டணம் கணக்கிடப்பட வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் குடிமக்கள் நடை முறை நூலில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளில் நடப்பிலுள்ள ஆணைகளுக்கொப்பவும், மாவட்ட அரசிதழின் கிராமத் தாளில் அறிவிக்கப்பட்ட இதர ஆணைகளுக்கொப்பவும், இந்த கட்டணங் களைக் கணக்கிடவேண்டும். ஒரு போக நன்சை, நிலங்களில் உள்ள இரண்டாம் போகப் பயிர், முன் அனுமதியுடன் நீர்ப்பாய்ச்சப்பட்டால்' அதற்கான கட்டணத்தை அதிகப்படி தீர்வை' என்ற கலத்தில் குறிக்க வேண்டும். அப்படி முன் அனுமதியுடன் நீர்ப்பாய்ச்சப்படாமல் அல்லது முறையற்ற பாய்ச்சலாக இருந்தால் அதற்குரிய கட்டணத்தை ''தண்ணீருக்கான தீர்வை'' என்ற கலத்தில் குறிக்கவேண்டும். ஒவ்வொரு புலத்திற்கும் உரிய கட்டணத் தொகையை முழு பைசாக்களுக்குச் சமீபமாக சரிக்கட்டவேண்டும். மனிதசக்தி மற்றும் கால்நடைச் சக்தியினால் நீர்ப்பாய்ச்சப்படும் இறவை இனங்களுக்கு சாதாரண தண்ணீர்த் தீர்வையில் முக்கால் தீர்வை மட்டும் விதிக்கப் பட்டு (7), (8), (12) மற்றும் (13)ஆவது கலங் களில் தகுந்தவாறு காண்பிக்க வேண்டும். ஒரு புலத்தின் பாகங்கள் மட்டும் நீர்ப்பாய்ச்சப் படுமேயாகில், நீர்ப்பாய்ச்சப்பட்ட உண்மையான பரப்பிற்கு மட்டும் கட்டணம் கணக்கிடப்பட வேண்டும். இருப்பினும், அப்படி நீர்ப்பாய்ச்சப் பட்ட பாகத்தின் பரப்பு 4 ஏர்க்குக் (10 சென்ட்) குறைவாக இருக்குமானால், அவற்றிற்கு தண்ணீர் தீர்வை விதிப்பதும், விதிக்காததும் வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியரின்

தீர்ப்புரிமைக்குவிடப்படும். ஆனால், தீர்வை விதிக்கப்படாத இனங்களை கணக்கின் அடியில் விவரமாகப் பதியவேண்டும். ஏதேனும் நஞ்சை அல்லது புஞ்சை நிலத்திற்கு நீர்ப் பாய்ச்சலுக்காக அரசின் நீர்ப்பாச்ன ஆதாரத்திலிருந்து முறை யற்ற வகையில் தண்ணீர் கொண்டு சென்றால் இதற்காக அரசால் அவ்வப்போது இயற்றப் படும் விதிகளுக்கிணங்க, வட்டாட்சியர் அல்லது துணைவட்டாட்சியர் உயர்த்தப்பட்ட தண்ணீர்த் தீர்வைகளை விதிக்கலாம். உயர்த்தப்பட்ட தண்ணீர் தீர்வையிலிருந்து கலம் (13)-ல் முன்பே பதிவு செய்யப்பட்டுள்ள உரிய தொகையினைக் கழித்துவரும் தொகையினைக் கலம் (19)-ல் குறிப்பிட வேண்டும். இந்த கணக்கில் கண்ட தண்ணீர்த் தீர்வையின் பேரில், மேல்வரி விதிக்க வேண்டியிருப்பதால், மேற்கண்ட கட்டணங்களுக் கான தள்ளுபடிகளையும் பல்வகை சாகுபடி களுக்குள்ள தண்ணீர்த் தீர்வையையே இந்த கணக்கிலும் 7ஆம் எண் கணக்கிலும் காண்பிக்கப் படவேண்டும். ஆங்காங்கு தனிவிதிகளின்படி ஏதேனும் கூடுதல் தகவல் தேவைப்பட்டால் அதற்காக தனிக் கலங்களை ஏற்படுத்திக்கொள்ள லாம். மூன்றாம் போகப் பயிரானது மிகவும் அரிதாகையால் அதற்காகத் தனிக் கலங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. அதைப் போன்றே பயிர்களுக்கான கட்டணத்தைக் கணக்கில் அடி யில் இரண்டாம் போகப் பயிருக்காக ஏற்படுத்தப் பட்டுள்ள கலங்களில் குறிப்பிடவேண்டும். திட்ட இருபோக நிலங்களில் சாகுபடியாகும் மூன்றாம் போகப் பயிரினை மற்றவைகளோடு சேர்க்காமல் தனியே எழுதவேண்டும். ஜமாபந்தியின் போது, 6 ஆம் எண் கணக்கில் தீர்வை விதிக்கப்படத்தக்க அனைத்து இனங்களும் கொண்டுவரப்பட்டிருக் கின்றனவா என்பதனைப் பார்க்க அடங்கலில் உள்ள பதிவுகளை, முன்பே வட்ட அலுவல கத்திற்கு அனுப்பப்பட்ட மாதாந்திர விவர அறிக்கைகளைக் கொண்ட 6ஆம் எண் கணக் குடன் கவனமாக சரிபார்க்க வேண்டும். கணக்கில் காட்டப்பட்டுள்ள தீர்வை வீதங் கள் சரியாக உள்ளனவா என்பதனை ஜமா பந்தி அலுவலர் பார்க்க வேண்டும். ஆணைகள் பிறப்பித்த பின்பு, (6), (8), (11), (13), (13அ), (18) மற்றும் (19) ஆவது கலங்களில் மொத்தம் எழுத வேண்டும். ஜமாபந்திக்குப் பிறகு ஏற்படும் நீர்ப்பாய்ச்சலுக்கும் அதே போன்ற கணக்குகள் தயாரித்து அவற்றை முந்தைய 6ஆம் எண் கணக்குகளுடன் வட்ட அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும். அங்கு, ஜமாபந்திக்காக மேலே ஆணையிட்டுள்ளது போலவே, அவை சரிபார்க்கப்படுவதற்குள் ளாகும். 6 ஆம் எண் கணக்குகள் அனைத்தும், அவைஎந்த பசலிக்குரியதோ அந்தபசலிக்கு அடுத்த பசலிக்கான ஜமாபந்தியின் போது வட்ட அலு வலகத்தில் முடிவாக ஒப்படைக்கப்படவேண்டும்.

இராமக் கணக்கு எண் 6-க்கு A உள்ளடக்கம்

இது, ஒவ்வொரு பட்டாதாரராலும், முன் அனுமதியுடனோ அது இல்லாமலோ திட்ட ஒரு போக நஞ்சையில் பயிர் செய்யப்பட்ட இரு போகப் பயிருக்கும், புஞ்சை நிலங்களில் பயிரிடப் பட்ட பயிர்களுக்கும், நீர்பாய்ச்சப்பட்ட தண்ணீருக்காகச் செலுத்தப்படவேண்டிய சுட் டணத்தைக் கூட்டிவரும் மொத்தத்தைக் இராமக் கணக்கு எண் 10-க்கு எடுத்துச் செல்வதற்காக உள்ளதொரு (Posting Register) பதிவேடு. இந்தக் கணக்கை, 'இறப்பி' 'இனாம்', 'திவாயிஜமா' மற்றும் 'புறம் போக்கு' என்ற நான்கு பிரிவுகளாக, 6 ஆம் எண் கணக்கிலிருந்து நேரிடையாக தயாரிக்கப் படும். இது பட்ட ராயாக எழுதப்படும். ஒவ் வொரு நீர்ப்பாய்ச்சலாதாரத்தின் கீழும் ஒவ் வொரு பட்டாதாரருக்குமான கட்டணங்களை நேரிடையாகவே கூட்டி மொத்தம் போடு வதற்கு ஏதுவாக ஒவ்வொரு பிரிவிலும் உள்ள பட்டாவின் கீழ், குறிப்பிட்ட ஒவ்வொரு நீர்ப்பாய்ச்சலாதாரத்தின் கீழும் வரும் கட்ட ணங்களை நிரட்டி, சேர்ந்தாற்போல் பதிவு செய்யவேண்டும்.

இராமக் கணக்கு எண் 7.

7 ஆம் எண் கணக்கானது, அனுமதியின்றி அனுபோகம். செய்யப்படும் நிலப் பரப்பினையும், பல்வகை வருவாய்களையும், மேல்வரிகளையும் காண்பிக்கும் பதிவேடாகும். அதனை இரண்டு பிரிவுகளாக, பிரிவு I ஆக்கிரமிப்புக்காகவும், பிரிவு II இதர வருவாய் இனங்களுக்காகவும் வைத்து வரவேண்டும். ரயத்துவாரி உரிமை முறை அல்லாத நிலங்களில் உள்ள அனுபோகம் அல்லது சாகுபடிக்கு ஏற்பட்ட பல்வகை வரு வாய்க்கான அனைத்து இனங்களையும் அரசு நீர்ப்பாய்ச்சலாதாரங்களில் சென்று விழும் மேற்பரப்பு வடிகால் நீரினை அச்சுக்கட்டுக்குப் பின்னால் தடுத்து, அதன் உதவியினால் புஞ்சை என்று வகைப்படுத்தப்பட்ட நிலங்களில் செய் யப்படும் நஞ்சைப்பயிர் சாகுபடிக்கான வரு வாய் இனங்களையும் பிரிவு Iஇல் வரிக்க வேண்டும். நிலவரி திட்ட பதிவேடு, அடங் கல் கணக்கு ஆகியவற்றில் பதியப்பட்டுள்ள தகவல் அடிப்படையிலும், A மற்றும் B அறிக் கைகளின் மீது பிறப்பித்த ஆணைகளிலிருந்தும் மற்றும் அதைப் போன்ற அனுபோகம் அல்லது சாகுபடி சம்பந்தமான இதர அறிக்கைகளி லிருந்தும் அதை தயாரிக்க வேண்டும்.

இந்த கணக்கில் ஒப்படையுடன் கூடிய அனு போகத்தை, வட்டாட்சியர் அல்லது கோட்டாட் டாட்சியரால் முன்பே முடிவு செய்யப்பட்டிருப் பினும், தீர்வை விதிக்கப்பட்டதாகவோ, தீர்வை விதிக்கப்படாததாகவோ இருப்பினும் புஞ்சை நிலங்களில் அனைத்து அச்சுக்கட்டு சாகுபடி உட்பட ஜமாபந்தியில் தீர்மானிக்கக்கூடிய அலுவலரின் ஆணைகளுக்காக அனுப்பப்பட் டுள்ளவற்றையும், தனித் தனியே காண்பிக்க வேண்டும். கலம் (7)இல் உண்மையில் சாகுபடி செய்யப்பட்ட பரப்பினை மட்டும் குறிக்க வேண் டும். கலம் (8)இல் அனுபோகத்திலிருந்து, ஆனால் தரிசாகப் போடப்பட்ட பரப்பினைக் குறிக்க வேண்டும். ஆனால், அனுபோகத்தில் இல்லாத தரிசைக் குறிக்கக்கூடாது.

ஒப்படையில்லாமல், குடியானவரி ஒப்படை வேண்டினாலும், இல்லாவிட்டாலும், அந்த நிலங்கள் தீர்வை விதிக்கப்பட்டதாக இருந் தாலும், அல்லது தீர்வை விதிக்கப்பட்டதாக இருந்தாலும், அனுபோகத்திலுள்ள அனைத் தினங்களையும் வருவாய் நிலை ஆணை எண் 51 பத்தி 39இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு அனுபோகம் செய்யப்பட்ட முதல் மாதத்திலேயே இராம நிர்வாக அலுவலர்களால் தெரிவிக்கப்பட வேண்டும்.

12ஆவது கலத்தைத் தவிர அனைத்துக் கலங் களையும் ஜமாபந்திக்கு முன்பு நிரப்ப வேண்டும். கலம் (12), 'A' மற்றும் 'B'— அறிக்கைகளின் மீது ஆணைகள் வழங்கியதற்குப்பின் நிரப்பப்பட வேண்டும்.

பிரிவு II-ல் இதர வருவாய் இனங்களையும் மற் றும் உள்ளூர் வரியையும் தெரிவிக்கவேண்டும். இராம நிர்வாக அலுவலர்களின் கவனத்தில் உள்ளதும் அவர்களது கணக்குகளில் உண்மையில் வரவு வைக்கப்பட்டு வட்ட அலுவலகத்தில்

கருவூலத்தில்) செலுத்தப்பட்டதுமான இதர வருவாய் இனங்கள் அனைத்தையும் தனித் தனியே காண்பிக்க வேண்டும். ஒதுக்கக் காடுகள் மற்றும் ஒதுக்க நிலங்கள் அல்லாமல், அனுபோகத்திலுள்ள இதர நிலங்களின் சிறு விளைச்சல்களிலிருந்தும் மரங்களிலிருந்தும் கிடைக்கக் கூடிய வருவாயினை இப்பிரிவில் காண்பிக்க வேண்டும். 6 ஆம் எண் கணக்கிலிருந்து தண்ணீர் வரிகளை இப்பிரிவில் காண்பிக்கவேண்டும். இப்பிரிவின் கலம் (9)இல் இதர பல்வகை வருவாயினைக் காண்பிக்க வேண்டும். கலங்கள் (11) மற்றும் (12)இல் முறையே உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல்வரியினை தனித்தனியே காண்பிக்கவேண்டும். இக்கணக்கினை இதற் கடுத்த பசலிக்கான ஜமாபந்தியின் போது வட்ட அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

[வ.வா. நிலை எண். 1050(ட்டி) நாள், 4—7—1970].

(26—8—1976 நாளிட்ட அரசாணை, பல்வகை எண். 1783, வருவாய்.)

கிராமக் கணக்கு எண்-8—நீக்கப்பட்டது.

நீர்ப்பாசன வருவாய்கணக்கு எண்கள் 8A மற்றும் 8B

இந்தக் கணக்குகளின் உபயோகமாவது, அரசு பாய்ச்சலாதாரங்களினால் நீர்ப்பாய்ச்சப்பட்ட அனைத்து நிலங்களிலிருந்து கிடைக்கக்கூடிய நீர்ப்பாய்ச்சலுக்கான வருவாய் வீதத்தை விரைந்து அறிந்து கொள்வதற்கானதொரு வசதியினை அளிக்கக்கூடியதாகும். நிறப்பு நஞ்சை, தரிசு மற்றும் புறம்போக்கு நிலங்களுக்கும், இலவச பாசனத்திற்கு உரிமையளிக்கப்படாத இனாம் நிலங்களுக்கும் விதிக்கப்பட்ட தண்ணீர் வரியையும் ஒரு போக நஞ்சை என்று பாகுபாடு செய்யப்பட்ட அல்லது வருவாய்க் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள நிலங்களின் மீது விதிக்கப்பட்ட இருபோகத் நீர்வையையும் நேரிடையாக பாசன வருவாய்க் கணக்கில் வரவு வைக்கவேண்டும். ஆனால், ஒருங்கிணைக்கப்பட்ட நீர்வைகளுடைய அனுபோகத்திலுள்ள அனைத்து நிறப்பு, நஞ்சை நிலங்களைப் பொறுத்தவரையில், பாய்ச்சலுக்கான வருவாய் வீதத்தைக் கணக்கிட, தண்ணீருக்கான நீர்வையை நிலத்திற்கான நீர்வையிலிருந்து தனியே பிரிக்கவேண்டும்.

நிறப்பு நஞ்சை நிலங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நீர்வையை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் I மற்றும் II ஆவது வகுப்பில உள்ள அனைத்து பாசன ஆதாரங்களிலும் உள்ள நிலத்திற்கும், நீருக்கும் உரிய நீர்வையாக அநேக வீதங்களில் எப்படி பிரிக்கவேண்டுமென்பதை நில நிர்வாகத்துறை அறுதியிட்டுள்ளது. நிறப்பு நஞ்சை நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சலுக்கான வருவாய் பங்கினை அவ்வாறு நீர்மானித்திற்குப் பின்பு பாசனக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

2. கிராம நிர்வாக அலுவலர்கள் திருத்தப்பட்ட 8A மற்றும் 8B படிவங்களில் நீர்ப்பாசனக் கணக்குகளை வருடந்தோறும் தயாரிக்க வேண்டும். இந்தக் கணக்குகளுக்குத் தேவையான விவரங்களை எடுத்தெழுவது சம்பந்தமாக விரிவான அறிவுரைகள் அந்த படிவங்களிலேயே அடியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும், கீழ்க்கண்டவை அந்தக் கணக்குகளைத் தயாரிப்பதிலும் அவற்றை வருவாய் நிர்வாகத்துறை ஆணையருக்கு அனுப்புவதிலும், கிராம நிர்வாக அலுவலர்கள் வட்டாட்சியர், ஜமாபந்தி அலுவலர் ஆகியோர் கவனமுடன் பின்பற்ற வேண்டிய பொது அறிவுரைகளில் சிலவாகும்.

3. பொதுப்பணித் துறையினர் தங்கள் நிதி விவர அறிக்கைகளில் பின்பற்றுவதைப் போன்றே இத்தக் கணக்குகளைத் தயாரிப்பதற்காக நீர்ப் பாய்ச்சலாதாரங்களின் பாகுபாட்டினைப் பின் பற்றவேண்டும்; அதாவது—

நீர்ப்பாய்ச்சலாதாரங்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் மூலதனம் மற்றும் வருவாய்க் கணக்குகள்.

வகுப்பு I ஆதாயமானவை		வகுப்பு II ஆதாய மற்றவை.	
பாய்ச்சலாதாரத்தின் பெயர்	மாவட்டங்கள்	பாய்ச்சலாதாரத்தின் பெயர்	மாவட்டங்கள்
(1)	(2)	(3)	(4)
அரக்கன் கோட்டை கால்வாய்	பெரியார்	பாஞ்சூர் ஏரித் திட்டம்	தர்மபுரி
தாடேபள்ளி கால்வாய், காவிங்கராயன் கால்வாய்	பெரியார்	சென்னை நீர் வழங்கு மற்றும் நீர்பாய்ச்சல் திட்டம்	செங்கற்பட்டு
செம்பரம்பாக்கம் ஏரி	செங்கற்பட்டு	களியம்பாளையம் அணைக்கட்டுத் திட்டம்	கோயம்புத்தூர்
பொய்கை அணைக்கட்டுத் திட்டம்	வடஆற்காடு	பஞ்சப்பட்டி நீர்த் தேக்கத் திட்டம்	திருச்சிராப்பள்ளி
செய்யார் அணைக்கட்டுத் திட்டம், திருக்கோயிலூர் அணைக்கட்டுத் திட்டம், சேத்தியாத் தோப்பு அணைக்கட்டுத் திட்டம் மேகமாத்தூர் அணைக்கட்டுத் திட்டம், விருத்தாசலம் அணைக்கட்டுத் திட்டம், தொழுதூர்த் திட்டம்	வடஆற்காடு செங்கல்பட்டு தென்னாற்காடு	வள்ளீர் அணைக்கட்டுத்திட்டம்	செங்கற்பட்டு
		பாலார் அணைக்கட்டுத் திட்டம்	வடஆற்காடு செங்கல்பட்டு
		பிளாந்துறை அணைக்கட்டுத் திட்டம்	தென்னாற்காடு
கீழ்கொள்ளிடம் அணைக்கட்டுத் திட்டம்	தென்னாற்காடு, தஞ்சாவூர்		
காவேரி கழிமுகத் திட்டம்	தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி.		
நத்தியாறு கால்வாய் திட்டம்	தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி.		
பெரியார் திட்டம்	மதுரை, இராமநாதபுரம்		
திருவெருகுண்டம் அணைக்கட்டுத் திட்டம், மருதூர் அணைக்கட்டுத் திட்டம்		திருநெல்வேலி	

வகுப்பு III.— மூலதனம் மற்றும் வருவாய்க் கணக்குகள் வைத்துக் கொள்ளப்படாததான சிறு பாய்ச்சலாதாரங்கள், பொதுப் பணித் துறையின் பொறுப்பிலிருந்தாலும், அல்லது வருவாய்த் துறையின் பொறுப்பிலிருந்தாலும் I மற்றும் II ஆவது வகுப்புகளின் கீழ் வராத இதர பாய்ச்சலாதாரங்கள் அனைத்தும்.

4 I ஆவது மற்றும் II ஆவது வகுப்பினைச் சேர்ந்த கணக்கினை 8A படிவத்திலும் ஏனைய பாய்ச்சலாதாரங்களுக்கான கணக்கினை 8B படிவத்

திலும் தயாரிக்க வேண்டும். முந்தையதைப் பொறுத்தமட்டில், ஒரு கிராமம், ஒன்றுக்கு மேற்பட்ட கால்வாய்கள அல்லது பாய்ச்சலா தாரங்களால் நீர்ப்பாய்ச்சப்படுமேயாகில், ஒவ் வொரு பாய்ச்சலாதாரத்தின் கீழும் உள்ள ஒவ்வொரு கால்வாய்க்கும் 8A படிவத்தில் தனிக் கணக்குகள் தயாரிக்கப்படவேண்டும். பிந்தைய தனைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு கிரா மத்திலும் - பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறை பொறுப்பின் கீழ் உள்ள பாய்ச்சலாதாரங்களுக்கு 8B படிவத்தில் தனிக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். திருச்சி ராப்பள்ளி, கோயம்புத்தூர் பெரியார் மாவட் டங்களிலுள்ள அமராவதி நதிக்கால்வாய்க்கும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாம்பிரபரணி நதிக்கால்வாய்க்கும் I மற்றும் II ஆவதுவகுப்புபாய்ச் சலாதாரங்களுக்குள்ளதைப் போன்றே ஒவ்வொரு கால்வாய்க்கும் 8B படிவத்தில ஒரு தனிக் கணக்கு தயாரிக்கப்படவேண்டும். கிராமப் படத் தின் எண், கிராமத்தின் பெயர் மற்றும் முக்கிய நீர்ப்பாய்சலாதாரம் மற்றும் கால்வாய் அல்லது அதிலிருந்து பாய்ச்சலுறும் ஏரி ஆகிய வற்றை, தலைப்பிலும், படிவங்கள் உள்ள அட்டையின் மேலும் நேர்த்தியாகவும் தெளி வாகவும் எழுத வேண்டும். 8A மற்றும் 8B ஆகிய இரு படிவங்களிலும் உள்ள விவர அறிக்கைகள் கிராம நிர்வாக அலுவலர்களால் துணை ஜமாபந்திக்கான கணக்குகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டு வட்டப் பணியாளர்களால், கிராமக் கணக்கு எண்கள் 1, 1A, 2, 5 மற்றும் 6 ஆகியவைகளுடன் சரி பார்க்கப்பட்டு, நில நிர்வாகத் துறை அணையருக்கு அனுப்பு வதற்குமுன் ஜமாபந்தி அலுவலர்களால் ஏற்ப ளிக்கப்பட வேண்டும். கிராமக் கணக்கு எண். 12க்கு ஒப்பளிப்பு செய்வதற்குமுன்பு, ஜமாபந்தி அலுவலர்கள் கூர்ந்தாய்வு செய்யவேண்டி, இந்தக் கணக்குகளைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தவேண்டும். மேலும், அவை சரிவர தயாரிக்கப்படடிருக்கின்றனவா என்ன தையும் அவர்கள் நிறைவு சொள்ள வேண்டும். ஒரு போக இனாம் நஞ்சை நிலத்திற்கான விடுவரியில் 3 இல் 2 பங்குகளை நீர்ப்பாய்ச் சலுக்காக வரவு வைக்கவேண்டும்.

(6—6—1958 நாளிட்ட அரசாணை, பல்வகை எண். 2082, வருவாய்).

5. முடிவாக ஜமாபந்தி அலுவலரால் ஏற்ப ளிக்கப்பட்ட சுத்த நகல் விவரப்பட்டிகளை, I மற்றும் II ஆவது வகுப்பு பாய்ச்சலாதாரங் களுக்கான 8A கணக்கைப் பொறுத்தவரை யில், ஜமாபந்தி முடிந்த ஒரு வார காலத்திற் குள், ஆனால் ஜூன் மாதம் முதல் தேதிக்கு மேற்படாமலும், III ஆவது வகுப்பு பாய்ச்ச லாதாரங்களுக்கான 8B கணக்கைப் பொறுத்த வரையில், ஜூலை மாதம் 7ஆம் தேதிக்கு மேற்படாமலும், வட்டாச்சியர்களால், நில நிர்வாக ஆணையருக்கு அனுப்ப வேண்டும். காலவாய்கள்வாரியாக விவரங்கள் தேவைப்படும் அனைத்து இனங்களிலும், தலையாய பாய்ச்சலாதாரம் ஒவ்வொன்றுக்கும் கால்வாய் வாரியாக விவரப்பட்டிகளை அடுக்கி தனித்தனி கட்டுகளாகக் கட்ட வேண்டும். ஒரு வட்டத்திற்குரிய 8A மற்றும் 8B கணக்குகள் அனைத்தும் ஒரே தொகுப்பில் அனுப்பப் பட்டால், அனுப்ப வேண்டிய விவர அறிக்கை கள் ஏதும் தன்னிடமிருந்து இனி பாக்கியில்லை என்ற வட்டாச்சியரின் சான்றுடன், கிராமத்தின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு கிராமத்திற் காகவும் எத்தனை விவரப்பட்டிகள் அனுப்பப் பட்டன என்றதொரு விவரமான பட்டியலும் விவர அறிக்கையுடன் சேர்க்கவேண்டும். இருப் பினும், அவை ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதி யாக அனுப்பப்பட்டால், ஒவ்வொரு தொகுதி யுடனும் அதைப் போன்றதொரு பட்டியலும் செல்லவேண்டும். ஆனால் வட்டாட்சியர் வழங்க வேண்டிய சான்றினை விவர அறிக்கைகளின் கடைசி தொகுதியுடன் செல்லும் பட்டியலுடன் இணைக்கவேண்டும்.

கிராமக் கணக்கு எண் 9.

நீக்கப்பட்டது.

(வ. வா. நிலை, எண். 1050 (ட்டி), நாள் 4—7—1970).

(26—8—1976, நாளிட்ட அரசாணை, பல்வகை, எண் 1783, வருவாய்).

கிராமக் கணக்கு எண் 9A.

இந்தக் கணக்கு, 1976 ஆம் ஆண்டு 4 ஆவது சட்டத்தின்படி திருத்தப்பட்ட 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் தீர்வை மற்றும் கூடுதல் தண் ணீர் வரி சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வருவா யினைக் காண்பிக்கும் பதிவேடாகும். அதனை, ஒவ்வொரு மாதமும் சாகுபடி கணக்கு (1 ஆவது எண் கணக்கு) மற்றும் 6 ஆவது எண் கணக்குடன் வருவாய் ஆய்வர் மூலமாக கிராம நிர்வாக அலு வலர்களால் வட்டாட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும். இந்தக் கணக்கு பாய்ச்சலாதார வாரியாக எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு பாய்ச்சலாதாரத்தின் கீழும், பாய்ச்சலாதாரத்தின் பெயர், வகுப்பு ஆகியவற்றை பக்கத்தின் குறுக்கே எழுதவேண்டும். இந்தக் கணக்கை, இரண்டு பிரிவுகளில், ஒவ்வொரு பிரிவும் பட்டா வாரியாக, புறம்போக்கு நிலம் உட்பட புஞ்சை நிலத்திற்கு ஒன்றாகவும், மற்றொன்று நஞ்சை நிலத்திற்காகவும், எழுதப்படவேண்டும். நில மானது, புஞ்சையா, நஞ்சையா, அல்லது புறம் போக்கா என்பதனைக் காண்பிக்கும் பொருட்டு, கலம் (5) இல் 'பு', 'ந' அல்லது 'புற' என்ற எழுத்துக்களை உபயோகிக்கலாம். தனிப்பட்ட புலத்தினைப் பொறுத்தவரை கட்டணத் தொகை களை முழு 5 பைசாவுக்குச் சமீபமாகக் கணக்கிட வேண்டும். ஒரே நிலத்திற்கு, கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர்வரி ஆகிய இரண்டும் விதிக்கப் படும் இனங்களில், சம்பந்தப்பட்ட பட்டாதாரர் கூடுதல் தீர்வை அல்லது கூடுதல் தண்ணீர் வரி ஆகியவற்றில் எந்த தொகை அதிகமாக உள்ளதோ அதனை மட்டும் செலுத்த வேண்டும். தள்ளிக் கொடுத்தல் மற்றும் கழிவுகள் செய்தல் ஆகிய அனைத்தையும் கலங்கள் (10) மற்றும் (14) இல் காண்பிக்க வேண்டும். ஜமாபந்தியின் போது அடங்கலில் உள்ள பதிவுகளை இந்தக் கணக்குடன் கவனமாக சரிபார்க்கவேண்டும். இந்தக் கணக்கு களில் விதிக்கப்பட்டுள்ள வரியானது சரியாக உள் ளதா என்பதனை ஜமாபந்தி அலுவலர் சரி பார்க்க வேண்டும். தள்ளிக் கொடுப்பதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதற்குபிறகு, கலங்கள் (11) மற்றும் (15) இல் உள்ள எண்களைக் கூட்டி மொத் தம் போட வேண்டும். 9A கணக்குகள் அனைத் தும், அவை எந்த பசலிற்கு உரியனவோ, அதற்கு அடுத்த பசலிக்கான ஜமாபந்தி முடிவுற்றவுடன் முடிவாக, வட்ட அலுவலகங்களில் ஒப்படைக்கப் பட வேண்டும்.

(வ.வா. நிலை எண் 1295 (எப்), நாள் 20—12—1977).

(27–4–1978 நாளிட்ட அரசாணை, பல்வகை எண் 1007, வருவாய்).

(நில நிர்வாக ஆணையரது கடித எண் டி.2 3743/81, நாள் 7–8–1981).

இராமக் கணக்கு எண். 9B.

நீக்கப்பட்டது.

(11-11-1980 நாளிட்ட அரசாணை, பல்வகை எண் 2541, வருவாய்

இராமக் கணக்கு எண் 10.

10 ஆவது எண் கணக்கு என்பது பட்டா வாரியாக நிலவரித் திட்டத்தினைக் காண்பிக்கும் சிட்டா வாகும். இது இரண்டு பிரிவுகளாக உள்ளது : முதல் பிரிவு ஒவ்வொரு பட்டாவுக்குமான புலவாரி விவரங்களையும் இரண்டாவது பிரிவு வருடாந்திர நிலவரித்திட்ட விவரங்களையும் காண்பிக்கும். I ஆவது பிரிவு, முதலில் தயாரிக்கும்பொழுது, நிலவரித்திட்ட சிட்டாவின் நகலாக இருக்கும். அதனைப் புதிதாக எழுதும் பொழுது முந்தைய வருடத்திய கணக்கை அனுசரித்து ஒவ்வொரு பட்டாவிலும் உள்ள புலங்களை எண் வாரியாக, பரப்பு, தீர்வை விவரங்களுடன் புஞ்சை, நஞ்சை என்ற வெவ்வேறு தலைப்பின் கீழ் பதிய வேண்டும். நபர்வாரி கணக்குகள தனித் தனியாகவும் தொடர் வரிசை எண்ணிட்டும் தயாரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பட்டாதாரருக்கும் உள்ள கணக்கினை எந்தப் பக்கத்தில் காணலாம் என்பதற்கானதொரு அட்டவணையை பதிவேட்டின் முதற்பக்கத்தில் தயாரித்தளிக்க வேண்டும். இந்த எண்களை புதிதாக வேறு பதிவேடு எழுதப்படும் வரையில், மாற்றக்கூடாது. ஆனால் புதிதாக, பட்டாக்கள் அளிக்க வேண்டியிருந்தால் முன்பு கடைசியாக பதியப்பட்டுள்ள பட்டாவுக்கு அடுத்து தொடர்ச்சியாக எண்களிடவேண்டும். பட்டாக்கள் எடுபட்டுப்போனால், இந்தக் கணக்கு புதிதாக எழுதப்படும் வரையில் வெற்றிடமாகவே வைத்து வரவேண்டும். எந்த பட்டாவுக்காவது மாறுதல்களைச் செய்வதற்குப் போதிய இடமில்லாது போனால்அந்தப் பட்டாவுக்குச்சம்பந்தமான கணக்கினை பதிவேட்டின் கடைசியிலுள்ள ஒரு புதிய பக்கத்தில் பதிவு செய்து அதற்கான விவரத்தை அட்டவணையில் குறிக்கவேண்டும். வருவாய்நிலை ஆணை எண் 19, பத்தி 1 இன் கீழ் தனியார் தோப்புகளுக்காக அளிக்கப்பட்ட நிலங்களையும் இந்தப் பிரிவில் காண்பிக்க வேண்டும். நிபந்தனைக்குட்பட்டு ஒப்படை செய்யப்பட்ட இதர நிலங்களை இப்பிரிவில் தனியே காண்பிக்கவேண்டும். தனியார் தோப்புகள் தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட, காலத்தில், நிலையான தள்ளுபடியைப் போன்று ஒவ்வொரு வருடமும் ஜமாபந்தியின்போது தீர்வைதள்ளிக்கொடுக்கப்பட வேண்டும். உரிமை விட்டுவிடப்படாத ஆற்றரிப்பு நிலங்கள ஏதுமிருப்பின் அவைகளில் விவரங்களையும் அவற்றிற்கான தீர்வையையும் இப்பிரிவில் ஒரு அடிக்குறிப்பாகக் காண்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும், மாறுதல்கள் ஏற்படும் பொழுது, அனைத்து மாறுதல்களையும் இந்தக் கணக்கில் சேர்த்து அல்லது கழித்து நிகர பட்டாக்களை கணக்கிடவேண்டும். இந்த மாறுதல்களுக்கான ஆணைகளைக் குறிப்புரைக்கலத்தில் குறிப்பிட்டு வருவாய் ஆய்வாளர்களின் மேலொப்பம் பெறவேண்டும். பட்டாதாரர்களின் பெயர்களில் ஏதேனும் மாறுதல் ஏற்படுமானால் அதனை மாறுதலுக்கான உத்தரவு எண், தேதி உள்பட இந்தக் கணக்கின் தலைப்பில் குறிப்பிடவேண்டும். பட்டாதாரர் உரிய வயதடையாதவராகவுள்ள இனங்களில் காப்பாளரின் பெயரையும் குறிப்பிட வேண்டும். இறுதி முடிவுக்காகக் காத்திருக்கும் வாரிசு அற்று அரசிலரைச் சார்ந்த நிலங்களைப் பொறுத்தவரையில், '- தமிழ்நாடு அரசு (உறுபொருள்'' என்பதனை பட்டாதாரராகப் பதிவு செய்யவேண்டும். இருப்பினும், நடப்பில் உளள பட்டாவில் அரசு உறுபொருள் அல்லாத நிலங்களும் சேர்ந்திருக்குமானால், அப்போது அரசு உறுபொருள் நிலங்களை மட்டும், தனிப்பட்டாவில், '' தமிழ்நாடு அரசு (அரசு உறுபொருள்) '' என்று காண்பிக்கவேண்டும். இப்பதிவேடு 5 ஆண்டுகளுக்கொருமுறை புதுப்பிக்கப்படலாம். இடைக்காலத்தில் மாறுதல் அதிகம் நிகழாது இருந்தால் இப்பதிவேட்டையே மேலும் சில ஆண்டுகளுக்கு ஏவத்துக் கொள்ளலாம்.

10-II கிராமக்கணக்கில், 10-I, 5, 6 மற்றும் 7 ஆவது கிராமக் கணக்குகளிலிருந்து நிலவரித் திட்ட விவரங்களை எடுத்தெழுதவேண்டும். ஜமாபந்தியில் கிராமக் கணக்குகளை முடிவு செய்யும் பொழுது மாறுதல்கள் ஏதும் ஏற்பட இடமில்லை என்று கருதும் வரி இனங்களையும் எடுத்தெழுதிடலாம். ஜமாபந்தியின்போது, ஜமாபந்தி அலுவலருக்கு கணக்கினை சரிபார்ப்பதற்கு அனுப்புவதற்கு முன்பு கணக்கில் உள்ள பதிவுகள் சரியானலை என்பதற்கான சான்று ஒன்றினை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் வழங்கவேண்டும்.

(வ.வா. நிலை, எண். 1050 (ட்டி), நாள் 4–7–1970).

(26–8–1976 நாளிட்ட அரசாணை, பல்வகை எண் 1783, வருவாய்).

இராமக் கணக்கு எண் 10-க்கு A உள்ளடக்கம்

இது ரயத்துவாரி, இனாம் பட்டாக்களில், இறந்துபோன பட்டாதாரர்களின் பெயர்களையும், யார் பெயரில் பட்டாக்கள் மாற்றப்பட வேண்டுமோ அந்த வாரிசுதாரர்களின் பெயர்களையும் காண்பிக்கும் கணக்காகும். ஒவ்வொரு மாதத்திலும் நேரிடுகிற அனைத்து இறப்பு இனங்களையும் இந்த படிவத்தில் கணக்கெழுதி, அதனை இரட்டைப் படிவங்களில் வட்டாட்சியரின் ஆணைக்காக கிராம நிர்வாக அலுவலர்கள் அனுப்பவேண்டும். அவைகளில், ஒரு நகலில் கலம் (5)-இல் உத்தரவு செய்து அதனை கிராம நிர்வாக அலுவலருக்குத் திருப்பி அனுப்பப்படும். மற்றொன்றை வட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்துக் கொள்ளப்படும். எந்த மாதத்திலாவது அதுபோன்ற இனம் இல்லாவிட்டால் அந்த விவரம் தெரிவிக்கப்படவேண்டும். ஆணை கிடைக்கப் பெற்றதும். 2 ஆவது எண் கணக்கிலும் 10 ஆவது எண் கணக்கிலும் தேவையான திருத்தங்களைச் செய்யவேண்டும். பிந்தைய கணக்கில், ஆணை எண், தேதி ஆகியவற்றைத் திருத்தங்களுக்கு நேராக குறிக்கவேண்டும். இந்தக் கணக்கின் மாதாந்திர நகல்களை ஒன்று சேர்த்து ஜமாபந்தியின்போது காண்பிக்க வேண்டும். வாரிசுதாரர்கள் பிரிவினையான குடும்பத்தைச் சேர்ந்தவரா என்பதையும், குடும்ப உறுப்பினர்களின் பெயர்களையும், பிரிவினையாகாத குடும்பத்தைச்சேர்ந்தவராக இருந்தால், குடும்ப நிர்வாக உறுப்பினரின் பெயரையும் கலம் (4) இல் கிராம நிர்வாக அலுவலர்கள் குறிப்பிடவேண்டும். உரிய வயதடையாத வாரிசுதாரர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் காப்பாளர் பெயரையும் அறிவிக்க வேண்டும். பட்டாதாரர் எவராவது ஏழு ஆண்டுகளுக்கு மேலாக இருக்குமிடம் தெரியாமலிருந்து, அதற்கெதிரான சாட்சியம் ஏதுமில்லாது போகும் நிலையில், அந்த நபர் இறந்து விட்டதாகக் கருதி

அவருக்கு வாரிசுதாரர்கள் யாரும் இருப்பின், அவர்களின் பெயர்களைக் கலம் (4) இல் எழுதுவதுடன் அதற்கான அனைத்து விவரங்களையும் தெளிவாகக் கண்டெழுதவேண்டும். வாரிசுதாரர்கள் இல்லாதுபோனால் நிலத்தை அனுபவிக்கும் நபருடைய பெயரினை அவ்வாறு தெரிவிக்கவேண்டும். இதுபோன்ற இனங்களில் வட்டாட்சியர் வருவாய் நிலை ஆணை எண் 31, பத்தி 6 இன் கீழ் உள்ள அறிவுரைகளின்படி நடவடிக்கை மேற்கொள்வார்.

கிராமக் கணக்கு எண் 10-க்கு B உள்ளடக்கம் நீக்கப்பட்டது.

[வ.வா. நிலை எண். 1050 (ட்டி), நாள். 4–7–1970.)

(26–8–1976 நாளிட்ட அரசாணை, பல்வகை எண். 1783, வருவாய்.)

கிராமக் கணக்கு எண் 10-க்கு C உள்ளடக்கம்.

பிரிவுகள் I மற்றும் II.

இரண்டு தனி துணைப் பிரிவுகளின் கீழும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை இனங்களைக் காண்பிக்கும் ஒரு சுருக்கமுறைத் துணைப்பதிவேட்டினைக் கிராம நிர்வாக அலுவலர்கள் வைத்துவர வேண்டும். இந்த சுருக்கமானது வட்டாட்சியரால் கிராம நிர்வாக அலுவலர்களிடம் அறிக்கை கோரப்பட்ட இனங்களின் எண்ணிக்கையையும் கிராம நிர்வாக அலுவலர்களால் சுயமாகக் கண்டு பிடிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கையையும், இரண்டு பிரிவுகளிலும் நிலுவையாகவுள்ள இனங்களின் பல்வேறு நிலைகளையும் ஒரே நோக்கில் காண்பிக்கும்.

கிராமக் கணக்கு எண் 10-க்கு D உள்ளடக்கம் நீக்கப்பட்டது.

[வ.வா. நிலை எண் 1050 (ட்டி), நாள். 4–7–1970.)

(26–8–1976 நாளிட்ட அரசாணை, பல்வகை எண் 1783, வருவாய்.)

கிராமக் கணக்கு எண் 11.

கிராமக் கணக்கு எண் 11 என்பது ஒவ்வொரு குடியானவருக்கும் அளிக்கப்பட்ட பட்டா படிவமாகும். இது, அடிப்படையில், 10 ஆவது எண் கணக்கின் நகல்தான்; ஆனால், அதில் நிபந்தனையுடன் கூடிய கொடைகளுக்கான விவரங்களேதும் இருக்காது. இதில், கூடுதலாகவுள்ள தகவல் குடியானவர் செலுத்த வேண்டிய மாதாந்திர கிஸ்தி மட்டுமே ஆகும்.

பிரிவு II-இல் 8 ஆவது இனத்திற்கு நேராகக் காண்பிக்கப்பட்டுள்ள பல்வகை வருவாய் இனங்களில் உரிமை விடப்படாத ஆற்றரிப்பு நிலங்களுக்கான தீர்வையும் அடங்கியிருப்பின், அந்த இனத்திற்கு நேராக கீழ்க்கண்ட குறிப்பினைச் சேர்க்க வேண்டும்:—

" உரிமை விடப்படாத ஆற்றரிப்பு நிலங்களுக்கான தீர்வை, ரூபாய். . . . . அடங்கியுள்ளது ".

மாறுதல்கள் செய்யவேண்டிய அனைத்து பட்டாக்களையும் சேகரித்து ஜமாபந்தியின் போது தாக்கல் செய்யுமாறு கிராம நிர்வாக அலுவலர்களைக் கோரவேண்டும். பட்டாக்களில் தேவையான மாற்றங்கள் செய்தபிறகு அல்லது, தேவையெனில், புதிதாக பட்டாக்கள் தயாரிக்கப்பட்ட பிறகு, மாற்றம் செய்யப்பட்ட மற்றும் புதிய பட்டாக்களை, ரத்து செய்யப்பட்ட பட்டாக்கள் ஏதுமிருந்தால் அவைகளுடன் சம்பந்தப்பட்ட குடியானவர்களிடம் அவர்களது சொந்த கிராமங்களிலேயே ஒப்படைக்க, கிராம நிர்வாக அலுவலர்களிடம் கொடுக்க வேண்டும். இருப்பினும், குடியானர் எவரும் அவருடைய கிராமத்தின் ஜமாபந்தியின் போது. புதிதாக பட்டா வேண்டுமென்று கேட்டால், அதை உடன் தயாரித்து ஜமாபந்தி அலுவலரால் கொடுக்கப்பட வேண்டும்.

ஜமாபந்தியின்போது மட்டுமின்றி, வருடம் முழுவதும், பட்டாவுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும். ஜமாபந்தியின்போது, வாய் மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ, திருத்தப்பட்ட அல்லது புதிய பட்டா வேண்டுமென்று கேட்டால், அது கட்டணம் ஏதுமின்றி கொடுக்கப்படவேண்டும். இதர காலங்களில் பெறப்படும் விண்ணப்பங்கள், எழுத்தில் அல்லது சொல்ல எழுதப்பட்டிருக்கவேண்டும். அத்துடன் 25 பைசா மதிப்புள்ள நீதிமன்ற கட்டணவில்லைகள் ஒட்டப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பங்களை வருவாய் ஆய்வர்கள் அல்லது சுற்றுப் பயணங்களில் உள்ள இதர வருவாய் அலுவலர்கள் பெற்றுக் கொள்ளலாம். பிந்தியவர் அவற்றை, உரிய நடவடிக்கைக்காக, வருவாய் ஆய்வருக்கு அனுப்ப வேண்டும். நேரிடையாகவோ அல்லது இதர அலுவலர்கள் மூலமாகவோ விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டதும், வருவாய் ஆய்வர்கள் கிராமக் கணக்கு எண் 10-I-ல்இருந்து பட்டாவைத் தயாரிக்கச் சொல்லி, விண்ணப்பங்களையும் அவரது சரிபார்ப்பு சான்றுடன் கூடிய பட்டாக்களையும், வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும். வட்டாட்சியர், பட்டாக்களை வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு அனுப்பாமல் அவற்றில் அவரே கையொப்பமிட்டு, முத்திரையிட்டு வழங்கலாம். பட்டாக்கள் கொண்ட உறைகளை அரசின் செலவில் வட்ட அலுவலகத்திலிருந்து விண்ணப்பதாரர்களுக்கு நேரிடையாகவே அனுப்ப வேண்டும்.

கிராமக் கணக்கு எண் 11-க்கு ' A ' உள்ளடக்கம்.

இது பல்வகை வருவாய்க்கான பட்டா வடிவமாகும். குடியானவரிடத்தில் நிலவரிப் பட்டா. இனாம் உரிமைப் பட்டயம் அல்லது அவர் கொடுக்கவேண்டிய தொகையைத் தெளிவாய்க் குறிப்பிடக்கூடிய ஆவணம் ஆகிய ஏதும் இல்லாத இனங்களில் மட்டுமே அது வழங்கப்படவேண்டும்.

கிராமக் கணக்கு எண். 12.

12 ஆவது கணக்கு என்பது கிராமம் முழுமைக்கும் உள்ள நிலவருவாய் நிர்ணயச் சுருக்கமாகும். அது ஒவ்வொரு இனத்திற்கும் கிராம மொத்தக் கேட்பினை அட்டவணை முறையில் காண்பிக்கக் கூடியது. அதைப் பட்டாவாரியாக எழுதவேண்டியதில்லை. (1) முதல் (6) வரையுள்ள கலங்களை கிராமக் கணக்கு எண் 3-இன் " A " உள்ளடக்கத்திலிருந்தும், (7) முதல் (12) வரை உள்ள கலங்களை கிராமக் கணக்கு எண் 5-லிருந்தும், மற்றும் (13), (18)-வது கலங்களை அடங்கல் கணக்கிலிருந்தும் (கணக்கு எண் 2) எடுத்தெழுதப்படும். பட்டாவிலுள்ள தரிசுப் பரப்பிலிருந்து, தரிசுதள்ளிக் கொடுத்த பரப்பினைக் கழித்து வரும் மீதிதான் தீர்வை விதிக்கப்பட்ட தரிசுப் பரப்பு ஆகும். முந்தியது அடங்கல் கணக்கிலும், பிந்தியது கிராமக் கணக்கு எண் 5-லும் உள்ளது.

(17) மற்றும் (22) ஆவது கலங்கள் கிராமக் கணக்கு எண் 6-லிருந்து எடுத்தெழுதப்படும். ஜமாபந்திக்குப் பிறகு வேறு இனங்கள் ஏற்பட்டால் அவைகளைக் கீழே சேர்த்து பசலி முடிவில் கணக்கை முடிக்கவேண்டும். அத்தகைய பிந்திய இனங்களை 6 ஆவது மற்றும் 7 ஆவது எண் கிராமக் கணக்குகளின் அடியிலும் சேர்க்க வேண்டும். அவற்றை 10 ஆவது எண் கணக்கின் II ஆவது பிரிவிலும் சேர்க்கவேண்டும். அனைத்து வகையான அரசிறைக் கழிவுகளையும் கலம் 39-ல் உள்ள பதிவின்கீழ் தனியாகக் காண்பிக்க வேண்டும். இந்தக் கணக்கை அடுத்த பசலி ஜமாபந்தியின்போது வட்ட அலுவலகத்தில் கொடுத்துவிடவேண்டும்.

[வ.வா.நிலை எண் 1050 (ட்டி), நாள் 4-7-1970.]

(26-8-1976 நாளிட்ட அரசாணை, பல்வகை எண். 1783, வருவாய்).

கிராமக் கணக்கு எண். 13.

13 ஆம் எண் கணக்கு என்பது கிராமத்தின் தினசரி வசூல்தனைக் காண்பிக்கும் சிட்டாவாகும். கலம் (2)இல் பற்றுச்சீட்டு எண்ணை மட்டும் குறிக்க வேண்டும். பற்றுச்சீட்டு எண்ணுக்கு நேராக, நிலவரி, உள்ளூர் மேல்வரி, உள்ளூர் மிகுமேல்வரி மற்றும் கடன் தவணைக்காகக் கொடுக்கப்பட்ட தொகையினைத் தனித்தனியே காண்பிக்கவேண்டும். இவைகளைத் தவிர, இதர வசூல்களனைத்தும் பல்வகை வருவாய்க்கான கலம் (7)இல் காண்பிக்கவேண்டும். வசூல்களை, முடிந்தவரை கிராமச் சாவடி அல்லது மக்கள் கூடும் அறிவிக்கப்பட்ட இதர பொது இடங்களில் பெற்றுக் கொள்ளவேண்டும். கிராம நிர்வாக அலுவலர், வசூலிக்கப்பட்ட தொகைக்கான பற்றுச் சீட்டுக்களில், கையொப்பமிடவேண்டும். தொகை செலுத்துவதற்கு (இருசால் செய்ய) அனுப்பும்போது கணக்கை முடித்து, பிறகு, கேட்புத் தொகை அல்லது வரியிலிருந்து சமய நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் அரசிறைக் கழிவுகளைப் பதிந்து மீதியைக் கணக்கிட வேண்டும். இதர கிராமங்களுக்காகச் செலுத்தப்படும் தொகையினையும் இந்தக் கணக்கில் சேர்த்துக்கொண்டு, அதற்கான விவரங்களுக்குக் குறிப்பு எழுத வேண்டும். வசூலிக்கப்பட்ட தொகை எப்போதும் கிராம நிர்வாக அலுவலரின் பொறுப்பிலேயே இருக்க வேண்டும். இந்தக் கணக்கு இரட்டைப் பிரதியாகத் தயாரிக்கப்பட வேண்டும். அசல் நகலை கிராம நிர்வாக அலுவலர் வைத்துக் கொண்டு, இரண்டாவது நகலை, தொகை செலுத்துவதற்கான பட்டியலுடன் வட்ட அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும். அடுத்த பசலி முடியும் வரை அசல் நகலை கிராம நிர்வாக அலுவலர் வைத்திருந்து, அதனை, கிராமத்திற்கு வருகை தரும்போது, வருவாய் ஆய்வர், வட்டாட்சியர் மற்றும் கோட்ட வருவாய் அலுவலர்களால், ஆய்வு செய்யப்பட வேண்டும். இரண்டாவது நகல், பரிசீலனைக்குப் பின், வட்ட அலுவலகத்தில் அடுக்கி வைக்கப்பட்டு 10 ஆண்டு முடிய வைத்திருக்கவேண்டும். அசல் கணக்கினை, அடுத்த பசலியின் கடைசியில் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்று, வட்ட அலுவலகத்தில் 10 ஆண்டுகள் முடிய வைத்திருக்க வேண்டும்.

குறிப்பு.—குடிமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையினை எவ்வாறு வரவு வைக்க வேண்டும் என்ற விவரத்தினை, 18வது எண் கிராமக் கணக்கிற்கான அறிவுரைகளில் காண்க.

[வ.வா. நிலை எண். 711 (எப்) நாள்: 17—6—1977.)

(29—10—1977 நாளிட்ட அரசாணை, பல்வகை எண். 2138, வருவாய்).

(27—9—1979 நாளிட்ட அரசாணை, பல்வகை எண். 2171, வருவாய்).

[வ.வா. நிலை எண். 877 (எப்) நாள். 23—10—1977.]

கிராமக் கணக்கு எண். 14.

14ஆம் எண் கணக்கு என்பது, ஒவ்வொரு நபரிடமிருந்தும் வசூலிக்கப்பட்ட தொகையைக் காண்பிக்கக்கூடிய மேற்கண்ட 13 ஆம் எண் கணக்கின் சுருக்கமாகும். இதை 13ஆம் கணக்கிலிருந்து அந்த தினத்தின் வசூல் முடிந்தவுடனே தயாரிக்கவேண்டும். (2)ஆவது கலம், 13ஆம் கணக்கின் (5)ஆவது கலத்திலிருந்து எடுத்தெழுதப்படவேண்டும். ஆண்டு முழுவதற்குமான வசூல்களை எழுதுவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு பக்கம் மட்டும் ஒதுக்கினால் போதும், கட்டளைச் சேர்ப்புச் கட்டணம் (Process service fees) முதலிய கேட்புத் தொகை ஏதுமில்லாத வசூல் இனங்களை இந்த கணக்கில் நடப்பு வருடத்திற்கான கேட்பு தொகையிலும், வசூல் தொகையிலும் சேர்க்கவேண்டும். இருபோகப் பயிருக்கான கட்டணம் உள்பட அனைத்து நிலவரி இனங்களின் கேட்புத்தொகையை இந்தக் கணக்கில் காண்பிக்க வேண்டும். முந்தைய பசலிகளில்வசூலாகாமல்பாக்கியாக உள்ள கேட்புத் தொகையை முந்தைய பசலிகளின் கணக்குகளிலிருந்து, ஒவ்வொரு பசலிக்கும் தனிப்பிரிவுகளில், எடுத்தெழுதவேண்டும். இருப்பினும், ஜமாபந்திக்குப் பிறகு முடிவாய் தீர்மானிக்கிறவரையில், நடப்பு பசலிக்கான கேட்புத் தொகையைக் காண்பிக்கக்கூடாது. அபராதம் நிமித்தம் ஏற்படுகிற கேட்புத் தொகை 17 ஆம் எண் கணக்கிலிருந்து ஒவ்வொரு பசலிக்கும் தனித்தனியே எடுத்தெழுதப்படும். ஒவ்வொரு பசலிக்கும் எதிரே தாக்கல் செய்ய வேண்டிய தொகையானது அந்தந்த பசலியில் ஏற்பட்டு,இந்த கணக்குஎந்த பசலிக்குரியதோ, அந்த பசலி துவக்கத்தில் கொடுபடாமல் உள்ள அபராதத் தொகையாகும். தொகைகள் வசூலானதும் அவற்றைஅவற்றுக்கான வெவ்வேறுகலங்களில் பதிவு செய்யவேண்டும். வருடமுடிவில், வசூலாவதற்கில்லை என்று கணக்கிலிருந்து நீக்கிவிடுமாறு ஆணையிடப்பட்ட தொகையை வசூலுக்கு அடியில் பதிந்து எல்லாவற்றையும் சேர்த்து மொத்தம் போட்டு, மீதத்தை அடுத்த ஆண்டின் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டும். வசூலாவதற்கில்லை என்று கணக்கிலிருந்து நீக்கிவிடும்படி ஆணையிடப்பட்ட அனைத்து தொகையும் கணக்கில் எழுதப்பட்டிருக்கின்றனவா என்பதையும், பிறகு வசூலான தொகைகள் அனைத்தும் இந்தக் கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனவா என்பதையும் கவனமாய்ப் பார்க்கவேண்டும். பசலி முடிவில் கணக்கை முடிக்கும் பொழுது எந்த நபராலது அவர் கணக்கில் தீர்மானிக்கப்பட்ட கேட்புத் தொகைக்கு மேல் செலுத்தியிருப்பதாகக்கண்டுபிடிக்கப்பட்டால் அல்வாறு அதிகமாக செலுத்தியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொகையை உடனே 14-சி கிராமக் கணக்கில் பதிவு செய்யவேண்டும். குடியானவர்கள் விரும்பினால் அந்த கணக்கை ஆய்வு செய்வதற்கான உரிமை அளிக்கப்பட வேண்டும். கேட்புத் தொகை கணக்கிடுவதில் ஏற்பட்ட தவறுதலினால் கிராமத்தில் பட்டாதாரராக இல்லாத நபரிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகையின் வித்தியாசம் சரியானகேட்புத் தொகைக்கு 10 பைசாவுக்கு மேற்படாது குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்குமேயாகில், அந்த வித்தியாசத்தைப் புறக்கணிக்க வேண்டும். கேட்புத் தொகையினைத் திருத்துவதற்கு எந்த முயற்சியும்

செய்யக்கூடாது. வசூலிக்கப்பட்ட தொகையை ஒப்புக் கொண்டு சரியான கேட்புத் தொகையாக அனுமதிக்க வேண்டும்.

குறிப்பு.—குடிமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையினை எவ்வாறு வரவு வைக்க வேண்டும் என்ற விவரத்தினை, 18-வது எண் கிராமக் கணக்கிற்கான அறிவுரைகளில் காண்க.

கிராமக் கணக்கு எண் 14-க்கு 'A' உள்ளடக்கம்

கிராமக் கணக்கு எண் 14-க்கு A உள்ளடக்கம் அதேகமாக 14-ஆம் எண் கணக்கின் படிவத்திலேயே தயாரிக்கப்படும் சுருக்கமாகும். கிராமம் முழுமைக்கும் உள்ள கேட்புத் தொகை, வசூல், பாக்கியைக் காண்பிக்கும் பொருட்டு இதனை, வருட முடிவில், கிராமப் பணக் கணக்குகளை முடிப்பதற்காக இந்த நடைமுறை நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள அறிவுரைகளில் கண்டவாறு தயாரிக்க வேண்டும். கிராமம் முழுவதற்குமான மொத்த கேட்புத் தொகையை முதலில் பதிய வேண்டும். பிறகு, ஒவ்வொரு பட்டாதாரரிடமிருந்தும் வசூலான-இதாகையையும், அந்த வருடத்தில் வசூலிக்க இயலாதென கணக்கிலிருந்து நீக்கி ஆணையிடப்பட்ட மொத்த தொகையையும் பதிய வேண்டும். மேற்கண்ட இரண்டின் மொத்தத்தொகையிலிருந்து அதிக வசூலைக் கழிக்கவேண்டும். பிறகு, நிகர வசூலை மொத்தக் கேட்புத் தொகையிலிருந்து கழித்து பாக்கியைக் கணக்கிடவேண்டும்.

கிராமக் கணக்கு எண் 14-க்கு 'B' உள்ளடக்கம்.

கிராமக் கணக்கு எண் 14-க்கு B உள்ளடக்கம் என்பது வசூலிக்க இயலாதென கருதப்பட்ட பாக்கி விவரங்களைத் தெரிவிக்கும் ஒரு கணக்காகும். நிலவரி பாக்கி, இரண்டு வழிகளில் வசூலிக்க இயலாததாக ஆகின்றன. பாக்கிதாரர் பெயரிலும் அவரது சொத்தின் பேரிலும் எடுக்கப்படவேண்டிய அனைத்து செயல்முறை நடவடிக்கைகளுக்குப் பிறகும் வசூலாகாது உள்ள பாக்கியைக் காண்பிக்கும் விதமொன்று, அல்லது தவறுதலாக கணக்கிடப்பட்டதால் ஏற்பட்ட கட்டணம், அதனால் அதனை வசூலிக்காமல் தள்ளிக் கொடுப்பதற்காக உள்ளது மற்றொன்று. மேற்கண்ட இரண்டு காரணங்களில் எதனாலாவது பாக்கித் தொகையானது வசூலிக்க இயலாததெனத் தெரிந்தவுடன், கிராம நிர்வாக அலுவலர் இந்தப் படிவத்தில் ஒரு விவர அறிக்கை தயாரித்து, அதனை அவர் கையொப்பத்துடன் வருவாய் ஆய்வர் வழியாக வட்ட அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். பாக்கிதாரரிடமிருந்து வசூலாக வேண்டிய கேட்பு, வசூல், பாக்கி விவரங்களை 10-ஆவது எண் கணக்கு, பிரிவு II மற்றும் 14-ஆவது எண் கணக்கிலிருந்து எடுத்து இந்தக் கணக்கில் (3) முதல் (7) முடியவுள்ள கலங்களில் (குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ்) மொத்த கேட்பு தொகையைப் பதியவேண்டும். வசூலிக்க இயலாத பகுதியை மட்டும் பதியக்கூடாது. (6) ஆவது கலத்தில் அசையும் மற்றும் அசையா பொருட்களின்மீது தொடரப்பட்டு, வசூலான தொகையைத் தனித்தனியாகக் குறிக்கவேண்டும். (8) ஆவது கலத்தில், தொகை வசூலாகாதென சொல்லப்படுவதற்கு கிராம நிர்வாக அலுவலர் கூறும் காரணத்தையும் தொகையை வசூலிப்பதற்கு பாக்கிதாரர் மீது எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் அனைத்தும் எடுத்து முடிக்கப்பட்டனவா என்பதனையும், கிராமத்திலாவது அல்லது வேறிடத்திலாவது பாக்கிதாரருக்குச் சொத்து இல்லையா என்பன போன்றவற்றையும் காண்பிக்கவேண்டும். வருவாய் ஆய்வாளர்கள் கிராம நிர்வாக அலுவலர்களின் குறிப்புரைகள் சரிவர உள்ளனவா என்பதைக் கண்டறிந்து, கலம் (9)இல் சுருக்கமாக அவரது முடிவை எழுத வேண்டும். இந்தக் கணக்கில் சொல்லப்பட்ட அனைத்து இனங்களுக்கான விவரங்கள், கிராமக் கணக்குகளைத் தன்னால் நன்கு ஆய்ந்ததனாலும் மற்றும் கவனமுடன் விசாரித்தறிந்ததனாலும் சரியாக உள்ளன என்பதாக அவர் சான்றளிக்கவேண்டும். (10) ஆவது கலத்தில், பாக்கிதாரர் மீது எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கை முறைகளும் கடைப்பிடிக்கப்பட்டதற்குப் பின்பும், நன்கு விசாரித்தறிந்த பின்பும் இந்தக் கணக்கில் பாக்கிகள் வசூலிக்க இயலாதவையெனக் காண்பிக்கப்பட்டுள்ளன என்று வட்டாட்சியர் சான்றளிக்க வேண்டும், பிறகு, ஒவ்வொரு நபருக்கும் இறுதியாக கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யுமாறு பரிந்துரைக்கப்பட்ட தொகையில் அந்தந்த நபருக்கான மொத்த கேட்புத் தொகைக்கு ஏற்ப நிலவரி, உள்ளூர் மேல் வரி ஆகியவற்றிற்கு பகிர்வு செய்து (11) ஆவது கலத்தில் எழுதி கோட்டாட்சியருக்கு அனுப்பவேண்டும். அவர் (12) முதல் (15) முடியவுள்ள கலங்களில். தனது ஆணைகளைப் பதிவு செய்வார். பொது காரியங்களுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்திற்கான தீர்வை முன்னமே பட்டாவிலிருந்து நீக்கப்படாதிருந்தால், அதனை வசூலிக்க இயலாத பாக்கியாக கருதவேண்டும். ஜமாபந்தியில் ஜமாபந்தி அலுவலரின் பார்வைக்கும், ஆய்வுக்கும் கணக்கை மீண்டும் வைக்கவேண்டும். அவர் மற்றவைகளைப் பார்ப்பதுடன் பகிர்வு, கூடியவரையில் சரியாக செய்யப்பட்டுள்ளதா என்பதையும் பார்ப்பார். வாரிசு அற்று அரசினரைச் சேர்ந்து இறுதி முடிவுக்காகக் காத்திருக்கும் நிலங்கள் எந்த இடத்திலாவது குத்தகைக்கு விடமுடியாமற்போனால், அதற்கான நிலவரியையும் மேல்வரியையும் இந்த கணக்கில் கொண்டுவந்து தள்ளுபடி செய்யவேண்டும்.

கிராமக் கணக்கு எண் 14-க்கு 'C' உள்ளடக்கம்.

கணக்கு எண் 14-க்கு 'C' உள்ளடக்கம் என்பது அதிக வசூல் விவரங்களைக் காண்பிக்கும் கணக்காகும். அதை, இந்நூலின் கடைசியில் இணைக்கப்பட்டுள்ள கிராமப் பணக் கணக்குகளை முடிப்பது சம்பந்தமான அறிவுரைகளில் குறிப்பிட்டமுறையில் தொகுத்தெழுதவேண்டும். அது மூன்று பிரிவுகளாக இருக்கும். முதல் பிரிவில், அடுத்த பசலியில் அந்தந்த பட்டாக்களுக்கான கேட்புத் தொகைகளுக்கு சரிக்கட்டுவதற்காக அந்தந்த பட்டாக்களுக்கு மிகையாய்ச் செலுத்திய தொகைகளைக் காண்பிக்க வேண்டும். இரண்டாவது பிரிவில் அவ்வாறு சரிக்கட்ட முடியாமல் ரொக்கமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டிய வையாகிய மிகையாய்ச் செலுத்திய தொகைகளைக் காண்பிக்க வேண்டும். ஆனால், பத்து பைசா அல்லது அதற்குக் குறைந்த தொகைகள் திருப்பிக் கொடுக்க வேண்டியிருப்பின் அவற்றைப் பிரிவு இரண்டில் பதியாமல் மூன்றாவது பிரிவில் பதிவு செய்யவேண்டும். மூன்றாவது பிரிவில் காண்பிக்கப்பட்டவை ரொக்கமாகத் திருப்பிக் கொடுக்கப்படாதவையும் அடுத்த பசலிக் கணக்குக்கு வரவு வைத்துக் கொள்ள முடியாதவைகளுமான தொகைகளாகும். ஜூன் மாதம் 30-ஆம் தேதி முடிய சரிக்கட்டப் படாமல் அல்லது ரொக்கமாகத் திருப்பிக் கொடுக்கப் படாமல் அல்லது தக்க அதிகாரத்தைக் கொண்டு கணக்கிலிருந்து நீக்கிவிடப்படாமல் இருக்கும் மிகையாய்ச் செலுத்தப்பட்ட அனைத்துத் தொகைகளையும் இவ்வுள்ளடக்கத்தில் குறிக்கவேண்டும். இதில் உள்ளவை எந்த பசலிக்குரியனவோ அந்தந்த பசலி ஜூன்டுக்கால வரிசையில் பதிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு பசலிக்கும் தனித்தனியே மொத்தம் குறிக்கவேண்டும். எந்தெந்த நபர்கள் மிகை

யாய்ச் செலுத்தியுள்ளனரோ அந்தந்த நபர்கள் மட்டும் இக்கணக்கில் குறிக்கவேண்டும். கிராமக் கணக்குகளை முடித்து 14-C கணக்கும் முடிந்தவுடனே அடுத்த வருடத்திய 14-ஆவது எண் கணக்கில் உரிய முறையில் வரவு வைக்க வேண்டும். (பட்டாதாரர்களாக உள்ள அனைவருக்கும் அந்தத் தொகையை ''முன்பண'' வசூலாகக் கருதவேண்டும்).

(6–6–1958 நாளிட்ட அரசாணை, பல்வகை எண் 2082, வருவாய்.)

கிராமக் கணக்கு எண் 15.

15ஆம் எண் கணக்கு என்பது, செலுத்துப் பட்டியலாகும். இதில் 13-வது எண் கணக்கில் பல்வேறு இனங்களில் காட்டப்பட்டுள்ள வசூல் தொகை விவரங்களையும், வட்ட அலுவலகத்திற்கு அனுப்பப் பட்ட பாக்கித் தொகைக்கான நாணயவாரி விவரங்களையும், கணக்கின் பல்வேறு கலங்களின் தலைப்புகளில் கீழ் கண்டுள்ள மற்ற விவரங்களையும் காண்பிக்க வேண்டும். (5), (6) ஆவது கலங்களில் செலுத்தப்பட்ட நிகரத் தொகைக்கு, பணத்தாள்கள் (CURRENCY NOTES), ஒரு ரூபாய், அரை ரூபாய் நாணயங்கள் முதலிய விவரங்களைக் கொடுக்க வேண்டும். (3), (4), (6)ஆவது கலங்களுக்கு மொத்தம் போடவேண்டும். (3), (4) ஆவது கலங்களைக் கூட்டிவரும் மொத்தம் (6) ஆவது கலத்தின் ஆக மொத்தத்திற்கு சமமாக இருக்க வேண்டும். இப்பட்டியல் கிராம நிர்வாக அலுவலரால் கையொப்பமிடப்பட்டு 13 ஆம் எண் கணக்குடன் வட்ட அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். வட்ட அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தவுடன் வட்டாட்சியராவது அல்லது துணை வட்டாட்சியராவது, கிராமத்திய செலுத்து தொகையில் ஏதாவது தாமதம் அல்லது முறைகேடுகள் இருக்கின்றனவா என்று பார்த்து, செலுத்துச் சீட்டில் கையொப்பமிடவேண்டும். முன்பே கூறிய வாறு நகல் சிட்டாவை (13-ஆம் எண் கணக்கு) வட்ட அலுவலகத்தில் தாக்கல் செய்திடவேண்டும். தினசரி வசூல்கள் சிட்டாவில் (13-ஆம் எண் கணக்கு) மிகவும் கவனமுடன் மொத்தம் போட்டு அதனை செலுத்துப் பட்டியலுடன் சரிபார்த்து கிராமத்தில் வசூலான தொகை உரிய நேரத்தில் செலுத்தப்படாமல், தேவையற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகக் கண்டால் அதற்கான விளக்கம் கோர வேண்டும். நிலவரி பொறுப்பு வகிக்கும் உதவியாளர் கிராமங்களனைத்துக்குமான செலுத்துப்பட்டியல்களுடன் தினசரி வசூல் சிட்டாக் கணக்குகளை ஒப்பிட்டுப் பார்க்க இயலாதுபோனால் தொகையைக் கருவூலத்திற்கு அனுப்புவதற்கு முன்பு அந்தப் பட்டியல்களில் சிலவற்றை அலுவலகதில் உள்ள வேறு சில உதவியாளர்களைக் கொண்டு சரி பார்க்க துணை வட்டாட்சியர் ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமத் தொகை செலுத்துச் சீட்டிலோ அல்லது தினசரி வசூல் சிட்டா கணக்கிலோ திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் ஏதும் கண்டால் அவற்றைச் சரிபார்க்கும் உதவியாளர்களால் அவைகள் சிவப்பு மையினால் சுருக்கொப்பமிடப் படவேண்டும். தொகை செலுத்துப்பட்டியல் அனுப்பிய பிறகு அல்லது அந்த மாதத்தில் ஒரு இரு சாலுக்கு மேலிருந்தால் கடைசி இரு சாலுக்குப் பிறகு வசூலிக்கப்படும் தொகையை, அடுத்த மாதத்திய வசூலில்தான் காண்பிக்க நேரிடும், வருவாய் பாக்கிக்காக விற்பனை செய்யப்பட்ட நிலங்களின் விற்பனைத் தொகை கிராம நிர்வாக அலுவலர்களிடம் கொடுக்கப் பட்டிருந்தால், அதை இந்தக் கணக்கில் சேர்க்க வேண்டும். ஆனால், 13-ஆம் எண் கணக்கில் காண்பிப்பதைப் போன்று தனியே காண்பிக்க வேண்டும். வட்ட அலுவலகத்தில் அன்றைய தினம் சரிபார்க்க இயலாதவாறு, நேரங் கழித்து வந்தததின் நிமித்தம் செலுத்துத் தொகையை பையில் போட்டு முத்திரை இட்டு தனிக்கணக்கில் (அமானத்தில்) வைக்கப்பட்ட இனங்களில், செலுத்து தொகை கொண்டுவந்தவர் அந்த முத்திரை வைக்கப்பட்ட பணப்பைக்கு வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியரிடமிருந்து துவக்க பற்றுச் சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இந்தப் பற்றுச் சீட்டை மறுநாள் காலையில் வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியரிடம் திரும்பக் கொடுத்தும் முத்திரையிட்ட பையை, முத்திரை வைக்கப்பட்ட அதே நிலையில், தொகையைக் கொடுத்து வைத்தவரிடம் கொடுக்கவேண்டும். செலுத்துத் தொகையைக் கருவூலத்திற்கு அனுப்பப்படும். ஒவ்வொரு முறையும் நிலவரி, உள்ளூர் மேல்வரி மற்றும் உள்ளூர் மிகுமேல்வரி ஆகியவற்றின் வசூல் சுருக்கமொன்றினை இந்தக் கணக்கின் அடியில் காண்பிக்கவேண்டும்.

(வ.வா. நிலை. எண் 1050 (ட்டி), நாள் 4–7–1970.)

(26–8–1976-ஆம் நாளிட்ட அரசாணை, பல்வகை எண் 1783, வருவாய்.)

கிராமக் கணக்கு எண் 16.

கிராமக் கணக்கு எண் 16 என்பது பசலி வாரியாக ஒவ்வொரு மாதக் கடைசியிலும் ஒவ்வொரு நபரும் செலுத்த வேண்டிய பாக்கியைக் காண்பிக்கிறது. வசூலிக்க வேண்டிய பாக்கி நிலுவையில் இருந்தால் பசலியின் எல்லா மாதங்களுக்கும் இந்தக் கணக்கைத் தயாரிக்க வேண்டும். கணக்கைத் தயாரிப்பதில் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள செங்குத்தான கலங்களைச்சுலபமாக மொத்தம் போடுவதற்காக ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனி பக்கங்களை ஒதுக்கலாம். பட்டாவில் கண்ட கேட்புத் தொகையை அனுசரித்து கிஸ்தி (நிலவரி) கணக்கிடலாம். ஆனால், பட்டா கொடுப்பதற்கு முன்பு அடியிற்கண்டவாறு உத்தேச கேட்புத் தொகையை ஏற்படுத்திக் கொண்டு கிஸ்தியைக் கணக்கிட வேண்டும். முதலில் முந்தைய வருடத்திய பட்டாவிலுள்ள நிலங்களின் கேட்புத் தொகையை எடுத்துக் கொண்டு மாற்றங்களேதுமிருப்பின் அதற்குத் தக்கவாறு சேர்த்தோ, குறைத்தோ உரிய கேட்புத் தொகையைக் கணக்கிட்டு, 14 ஆம் எண் கணக்கிலிருந்து வசூல்களை எடுத்தெழுதி ஒவ்வொரு மாதத்திற்கும் பாக்கி காண்பிக்க வேண்டும். ஒரு பட்டாவிற்கான கேட்புத் தொகையானது ரூபாய் ஐந்துக்குக் குறைவாக இருக்குமேயானால், பட்டாதாரருக்கு வசதியாக, மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கக்கூடிய ஒரு கிஸ்தி மாதத்தில், ஒரே தவணையில் வசூலிக்க வேண்டும். கிராமம் முழுவதுக்கும், ஒவ்வொரு இனத்திலும், ஒவ்வொரு பசலிக்குமான கேட்புத் தொகை, வசூல், பாக்கி ஆகியவற்றின் சுருக்கமொன்றினை இந்தக் கணக்கின் அடியில் கொடுக்க வேண்டும். அந்தச் சுருக்கமானது, தற்காலிகமாக வசூல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மற்

றும் ஜமாபந்தியின் போது உண்மையில் தள்ளிக் கொடுக்கப்படுவதற்குமான தொகைகளையும் காண்பிக்க வேண்டும். இந்தத் தொகைகளைக் கணக்கின் அடியில் கழித்து, வசூலிக்க வேண்டிய நிகர பாக்கியினைக் கணக்கிட வேண்டும். வசூல் களை அரசுக்குடி, பல்வகை, மேல்வரி என்ற தலைப் பின்கீழ் தனித்தனியே வரவு வைக்க வேண்டும். தனி நிதிகளையும்தனித்தலைப்பின்கீழ்வரவுவைக்க வேண்டும் மாதத்தின் கடைசி இருசாலுடன் இக் கணக்கை வட்ட அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். இரண்டாவது இருசால் செய்யும் போது அடுத்த நான்கு கலங்களில் பதிவு செய்ய லாம். அதே மாதத்தை மறுபடியும் எழுதி தலைப் பில், மாதத்திற்கு கீழே, முதலாவது இருசால், இரண்டாவது இருசால் என்ற சொற்களை எழுத வேண்டும். இக்கணக்கை வட்டாட்சியர் உடனே அல்லது உச்சமாக ஐந்து தினங்களுக்குள்ளாகவா வது கிராம நிர்வாக அலுவலருக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். கிராம நிர்வாக அலு வலர் இந்தக் கணக்கை வட்ட அலுவலருக்கு அனுப்பும் பொருட்டும், வட்டாட்சியர் தாம்த மேதுமின்றி அதனைத் திருப்பி அனுப்புவதற்கு உகந்தவாறும் கிராமக் கணக்குகளை இருசால் தேதிக்கு இரண்டொரு நாளுக்கு முன்னதாகவே முடித்துவிட வேண்டும். ஒவ்வொரு தினத்திற்கும் சில கிராமங்களில் இருசால்களும், 16 ஆம் எண் கணக்குகளும் மட்டும் வரும்படியாக ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள கிராமங்களிலிருந்து இரு சால் வரவேண்டியதற்கான தேதிகளை முறைப் படுத்திக் கொள்ள வேண்டும். படிவத்தில் ''மாதம் முடிய'' என்ற சொல்லுக்கு இருசாலை முடித்த தேதிவரை என்று பொருள் கொள்ள வேண்டுமேயன்றி, மாதத்தின் கடைசிநாள் என்று பொருள் கொள்ளக் கூடாது. இருசால்கள் அனுப்பிய பிறகு வசூலான தொகைகள், அந்த மாதத்திற்குள்ளேயே அடுத்த தடவையில் இரு சாலாகாத வரையில், அதற்கு அடுத்த மாதத்திய வசூல்களில்தான் முறைப்படி சேரும். ''வசூலிக் கப்பட்ட அல்லது கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்ட தொகை'' என்ற தலைப்புகளின் கீழ், சம்பந்தப்பட்ட பட்டாதாரர்களின் நடப்பு வருடத்திய கிஸ்திக்கு வரவு வைக்கும்படி. ஆணை யிடப்பட்ட முந்தைய பசலியின் அதிக வசூல்களை சேர்க்க வேண்டும். ஒவ்வொரு பசலியின் முதலா வது கிஸ்தி மாதத்திற்கு இக்கணக்கைத் தயாரிக் கும் முன்பு, இறுதியாக உத்தரவான பட்டா மாறு தல்களை செயல்படுத்த வேண்டும். இவ்வாறு, கணக்கை பசலியுடன் முடிவு செய்து, மறு வரு டத்திய ஜமாபந்தியின் போது வட்ட அலுவலகத் தில் ஒப்படைக்க வேண்டும்.

கிராமக் கணக்கு எண். 17.

17 ஆம் எண் கிராமக் கணக்கானது ஒவ்வொரு நபரும் செலுத்த வேண்டிய அபராதத்தைக்குறித்த கேட்பு, வசூல், பாக்கி ஆகியவற்றின் விவரங்களை காண்பிக்கிறது. 1974 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3 ஆம் தேதிய அர சாணை, பல்வகை எண். 2771-ன்படி, 1384 ஆம் பசலி முதல் (1–7–1974)முதல் நிலவரி பாக்கியின் பேரில் மாதாந்திர வட்டி விதிப்பது கைவிடப் பட்டு, அதற்கு பதிலாக நிலவரியானது எந்த பசலிக்குரியதோ அந்த பசலி உட்பட இரண்டு ஆண்டு காலத்திற்குப் பிறகு, தொகை செலுத்தத் தவறிய காலத்திற்கு ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு 5 விழுக்காடு வீதம் அபராதம் விதிக்கப்படும். இந்தக் கணக்கை நான்கு தனிப்பிரிவுகளாக, அதா வது முதல் பிரிவு நிலவரிக்கும், இரண்டாவது பிரிவு உள்ளூர் மேல்வரிக்கும், மூன்றாவது பிரிவு உள்ளூர் மிகு மேல்வரிக்கும், நான்காவது பிரிவு தனி நிதிகளுக்காகவும் எழுதப்பட வேண்டும். அபராதத்தை, நிலவரி பாக்கியானது எந்த பசலிக்குரியதோ அந்தப் பசலியிலும், அதற்கு அடுத்த பசலியிலும் விதிக்கக் கூடாது. ஒரு குடி யானவர் அரசுக்கு ரூ. 500 பாக்கித் தொகை செலுத்த வேண்டுமென்று கொள்க. அத்தொகை எந்த பசலிக்குரியதோ அந்த பசலியில் அவர் செலுத்தத் தவறி விடுவதோடு அதைத் தொடர்ந்த அடுத்த பசலியிலும் செலுத்தத் தவறி விடுகிறார். பிறகு, மூன்றாவது பசலி ஆண்டில், இரண்டாண்டு கால சலுகைக்கு பின்பு, தொகை செலுத்தத் தவறிய காலத்திற்கு ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு 5 விழுக்காடு வீதம் அவருக்கு அபராதம் விதிக்கப் படும். அப்படியில்லாமல் கொடுக்க வேண்டிய கேட்புத் தொகை ரூ. 500-ல் ரூ. 400 மட்டும் உரிய பசலிக்கு செலுத்தி விட்டு பாக்கியாக ரூ. 100 மட்டுமே இருக்குமேயாகில் அவ்வாறு பாக்கியாக உள்ள தொகைக்கு மட்டும் மேற்கண்ட அறிவுரை களுக்கேற்ப அபராதம் விதிக்க வேண்டும். ரூபா யின் பாகங்களுக்கு (FRACTION) அபராதம் விதிக்கத் தேவையில்லை. பாக்கித் தொகைக் காகவும், அபராதத்திற்காகவும் தொகை ஏதேனும் வரப்பெற்று அதனை 13 ஆவது எண் கணக்கில் எழுதியவுடன், அந்தத் தொகையை உடனடியாக சம்பந்தப்பட்ட நபரின் கணக்கில் வரவு வைக்க வேண்டும். வசூலான தொகையில் அபராத பாக்கியை ஈடுசெய்து கொண்டு, மீதம் ஏதுமிருந்தால், அதனை நிலவரிக்கும் மற்றும் பாக்கியாக உள்ள இதர இனங்களுக்கும் வரவு வைக்க வேண்டும். பாக்கித் தொகைகள் உண்மை யில் கணக்கிலிருந்து தள்ளுபடியாகும் வரையில் வசூலிக்க இயலாதென கருதப்பட்ட தொகை களுக்குத் தொடர்ந்து அபராதம் கணக்கிட்டுக் கணக்கில் பதிவு செய்ய வேண்டும். பாக்கித் தொகைகள் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப் பட்டதும் பாக்கியின் பேரிலான அபராதத் தொகையையும் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்ய வேண்டும். இதற்காக தனி அனுமதி ஏதும் தேவையில்லை. இந்தக் கணக்கை ஒவ்வொரு பசலி ஆண்டிற்கும் தயாரித்து 16-வது எண் கணக்கு மற்றும் தொகை செலுத்துப் பட்டியல் (15 ஆவது எண் கணக்கு) ஆகியவைகளுடன் வட்ட அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். கிராமத் தின் பாக்கித் தொகைகள் முழுவதும் வசூலாகும் வரையிலோ அல்லது கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்படும் வரையிலோ இந்தக் கணக்கைத் தயாரித்து அனுப்ப வேண்டும். இந்தக் கணக்கைப் புத்தக உருவில் வைத்திருக்க வேண்டும். மொத்த தொகையை வட்ட அலுவலகக் கணக்குகளில் பதிந்து கொண்ட பிறகு கிராமத்திற்கு இதனைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

குறிப்பு.—குடிமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையினை எவ்வாறு வரவு வைக்க வேண்டும் என்ற விவரத்தினை. 18–வது எண் கிராமக் கணக்கிற்கான அறிவுரைகளில் காண்க.

(வ.வா.நிலை எண். 1050 (டி.) நாள் 4–7–1970)

(26–8–1976 நாளிட்ட அரசாணை, பல்வகை எண் 1783, வருவாய்).

(அரசு மேற்குறிப்பு எண். 5561-ஏ1/57-14 வருவாய், நாள் 3–2–1958).

(23–10–1981 நாளிட்ட அரசாணை, பல்வகை எண். 2331, வருவாய்).

கிராமக் கணக்கு எண். 18.

18 ஆவது எண் கணக்கு என்பது குடியானவர், தான் செலுத்த வேண்டி கேட்புத் தொகையைத் தீர்ப்பதற்காக அவரால் அந்த ஆண்டில் செலுத்தப் பட்ட தொகையைப் பெற்றுக் கொண்டதற்கு ஒப்பு தலாக, அவருக்கு அளிக்கப்படும் பற்றுச்சீட்டாகும்.

அவ்வப்போது குடிகளுக்குக் கொடுக்கும் பொருட்டு வட்டாட்சியரால், எண்ணும், முத்திரையும் போடப்பட்ட மூப்பிரதிகளில் உள்ள வெற்றுப் பற்றுச்சீட்டுக்களடங்கிய புத்தகங்கள் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வழங்கப்படும். இப்புத்தகங்களை வரிசைக்கிரமப்படி உபயோகிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் நிலவரி வசூலுக்குத் தனிப்புத்தகமும், கடன் தொகை வசூலுக்குத தனி புதகமும் உபயோகிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு பொறுப்புவகிக்கும் கிராமநிர்வாக அலுவலர் ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனி புதகங்களை உபயோகிக்க வேண்டும். பற்றுச் சீட்டுகள் வழங்கும்போது இருபுற மைபடி தாளினை Double Sided Carbon) உபயோகிக்க வேண்டும். வட்டாட்சியரால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளுக்கொப்ப முடிவுற்ற பற்றுச் சீட்டுகளை வட்ட அலுவலகததில் ஒப்பவித்து தேவையான புதிய பற்றுச் சீட்டுப் புதகங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். முந்தைய பாக்கி மற்றும் நடப்பு கேட்பு தொகைக்காகச் செலுத்தப்பட்ட தொகைகளை அவ்வப்போது தேவையான விவரங்களுடன் பற்றுச் சீட்டுகளில் பதிந்து அவற்றில் கிராம நிர்வாக அலுவலர்கள் கையொப்பமிட வேண்டும்.

பட்டதாரிகளிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையை, முதலில், பசலிபாக்கி ஏதுமிருந்தால் அதற்கும், பாக்கியின் மீதான அபராதத் தொகைக்கும் (3.7.1974 நாளிட்ட அரசாணை பல்வகை எண்.2771 வருவாய்த்துறையின்படி கணக்கிடப்பட்டு) வரவு வைத்துக்கொண்ட பின்பே, மீதம் ஏதுமிருந்தால், அதனை நடப்பு கேட்புத் தொகைக்கு வரவு வைக்கப்பட வேண்டும். குடியானவரிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையை அபராதம் உள்பட மிக முந்திய பாக்கிக்கு, பசலி வாரியாக வரவு வைக்க வேண்டும். முன் பாக்கிகள் அனைத்தும் தீர்ந்து விட்டதற்குப் பிறகுதான் வசூல் தொகையில் ஏதும் மீதமிருந்தால், அதனை நடப்பு கேட்புத் தொகைக்கு வரவு வைக்க வேண்டும்.

ஆதலின், வசூலான தொகைக்கு பற்றுச் சீட்டுகள் வழங்கும் பொழுது, ஒவ்வொரு பட்டாவுக்கும், பசலி ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பற்றுக்சீட்டுகள் வழங்குவது அவசியமாகும். அதாவது, ஒன்றுக்கு மேற்பட்ட பசலிக்கு பாக்கி செலுத்த வேண்டியுள்ள குடியானவர் ஒருவர் தொகை செலுத்துவாரேயாகில், அந்த நபர் ஒருவருக்கே, அதே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட பற்றுச்சீட்டுகள் வழங்க வேண்டியிருக்கும்.

கீழ்க்காணும் எடுத்துக்காட்டு, வசூல் தொகை எவ்வாறு வரவு வைக்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவிக்கும்.

குடியானவரொருவர் பசலி ஒன்றுக்குச் செலுத்த வேண்டிய நிலவரித் தொகையானது ரூ. 100/- எனக்கொள்க. அவர், 1388, 1389, 1390 மற்றும் 1391ம் பசலிகளில் தொகை, ஏதும் செலுத்தவில்லை எனவும் கொள்க. அவர், 1392ம் பசலியில், 15-7-1982 அன்று ரூ. 120ம், 9-8-1982 அன்று ரூ. 110ம் தொகை செலுத்தியதாகவும் கொள்க. மேற்குறிப்பிட்ட, அவ்விரு தொகைகளையும் கீழ்க்கண்டுள்ளவாறு பிரித்து, வரவு வைக்க வேண்டும்.

வரிசை எண்.	தொகை செலுத்திய தேதி.	செலுத்தப் பட்ட தொகை.	தொகை எந்த பசலியில் செலுத்தப் பட்டது.	பகிர்வு செய்யப்பட்ட	
				விவரம்.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	15-7-1982	120·00	1392	(அ) 1388ம் பசலிபாக்கிக்காக, 1390, 1391 மற்றும் 1392 ஆகிய மூன்று பசலிகள், ஒவ்வொன்றுக்கும், ரூ. 5 வீதம் அபராதம்.	ரூ. 5+5+5=15
				(ஆ) 1389ம் பசலி பாக்கிக்காக 1391 மற்றும் 1392ம் பசலிகள், ஒவ்வொன்றுக்கும், ரூ. 5 வீதம் அபராதம்.	5+5=10
				(இ) 1390ம் பசலி பாக்கிக்காக 1392ம் பசலியில், ரூ. 5 வீதம் அபராதம்.	5
				(ஈ) 1388ம் பசலி நிலவரிபாக்கிக்காக	90
				மொத்தம் ..	120
2.	9-8-1982	110·00	1392	(அ) 1388ம பசலி நிலவரி பாக்கிக்காக	10
				(ஆ) 1389ம் பசலி நிலவரி பாக்கிக்காக	100
				மொத்தம் ..	110

குடியானவர் எவராவது, தான் செலுத்திய தொகையை, தன் விருப்பப்படி, ஒரு குறிப்பிட்ட பசலிக்குத்தான் வரவு வைக்க வேண்டுமென்று வற்புறுத்துவாரேயாகில், பின்பற்ற வேண்டிய நடைமுறையினை அவருக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், அவரது சொந்த நலனை முன்னிட்டு, முன் பாக்கிகளைத் தீர்ப்பதானது நலன் பயக்கும் என்பதோடு கூட, அவற்றின்மீது விதிக்கப்படும் அபராதத்தையும் தவிர்க்கலாம் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

(17—8—1982 நாளிட்ட அரசாணை பல்வகை எண். 1470, வருவாய்த்துறை).

பற்றுச்சீட்டில் "அராபிய எண்கள்" (1,2,3,4, .. என்பவை போன்ற) உபயோகப்படுத்த வேண்டும். ஆனால், விவரங்களை வட்டார மொழியில் (தமிழில்) எழுதுவதுடன் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையைத் திரும்ப வட்டார மொழியில் (தமிழில்) எழுத்தால் எழுத வேண்டும். நடப்பு வருடத்திய கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்ட முந்தைய பசலியின் மிகையாகச் செலுத்தப்பட்ட தொகையை, பற்றுச் சீட்டில் பதிய வேண்டும். அல்லாது, அதிக வசூலிலிருந்து வரவு வைக்கப்பட்டது என்ற விவரத்தை கலம் 2-இல் தெளிவாக எழுத வேண்டும்.

கிராமக் கணக்கு எண். 19.

(பிரிவுகள் I, II மற்றும் III).

1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாளிட்ட அரசாணை பல்வகை எண். 659 (பொது உடல் நலம் மற்றும்குடும்பக்கட்டுப்பாட்டுத்துறை) இன் படி கீழ்க்காணும் அட்டவணையில், கலம்(1) இல் குறிப்பிடப்பட்ட அலுவலர்கள், கலம் (2)-இல் அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகளுக்கு, பிறப்பு, இறப்புப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அட்டவணை.

அலுவலர். (1)	உள்ளாட்சிப்பகுதி. (2)
1 துப்புரவு ஆய்வாளர்	சென்னை மாநகராட்சியில் உள்ள பதிவு கோட்டங்கள்.
2 உடல் நல உதவியாளர்.	மதுரை மாநகராட்சியில் உள்ள பதிவுக் கோட்டங்கள்.
3 செயல் அலுவலர் உடல் நல உதவியாளர் / துப்புரவு ஆய்வாளர்.	பேரூராட்சி.
4 கிராம நிர்வாக அலுவலர்.	ஊராட்சி.
5 உடல் நல உதவியாளர்.	கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டத்தில் உள்ள ஊராட்சி பேரூராட்சி
6 உடல் நல ஆய்வாளர்/உடல் நல உதவியாளர்/துப்புரவு ஆய்வாளர்.	பாளையம்.
7 எஸ்டேட் மேலாளர்/மலைத் தோட்ட மேலாளர்.	எஸ்டேட்டுகள்/மலைத் தோட்டங்கள்.

